கல்கி

KALKI
29.11.1964
30 காசு



ஏசு அவதாரம்

★

ஆவினம் ஒதுங்கி நிற்க; - நல்
 ஆயர்கள் வணங்கி நிற்கத்
தேவர்கள் வாழ்த்தி சைக்க - நம்
 தேவதாயின் கரங்களில்

பாரமாம் சிலுவை தாங்கும் - சிறு
 பாலகர் இயேசுநாதர்
கோரமாம் கொடுபனியில் - ஒரு
 குழந்தையாய் அவதரித்தார் !

வீசும் குளிர் மறைக்க - துளிர்
 விடு புல்லும் பாய் விரிக்கப்
பாசத்தின் பிறப்பிடமாய் - ஒரு
 பசு மாட்டுக் கொட்டிலிலே !

நேசக் கரம் விரித்து:
 நீளிரவில் ஒளி கொடுத்துத்
தேசங்கள் மகிழ்ந்திடவே
 தேவசுதன் அவதரித்தார் !


- மட்டுநகர் முத்தழகு

கல்கி

பொருளடக்கம்

குரோதி கார்த்திகை 14 — நவம்பர் 29

சட்டசபைச் சீர்திருத்தம் ... 3
அமெரிக்க ஆசிரியரின்... ... 4
என்ன சேதி? ... 5
சாஸ்திர சாகரம்... ... 8
கந்தன் கருணை ... 10
கத்தோலிக்கப் பெருவிழா ... 18
கயல்விழி ... 22
படகோட்டி ... 30
நவராத்திரி ... 31
இந்தியாவில் கிறிஸ்தவ... ... 32
ராஜயோகம் ... 38
இரு சகோதரர்கள் ... 42
பாமினிப் பாவை ... 45
கூடு ... 53
சிரிக்கவும் சிந்திக்கவும் ... 61
வட்டமேஜை ... 63
பாசம் ... 65
கைக்கு எட்டியது ... 73
வியாபாரக் கதம்பம் ... 80



கவலையை மறக்க இதோ சாதனம்!
P.L 480
அமெரிக்க கோதுமை
ரேஷன் கடை
அடுத்த படியாக அவர்களுக்கு இந்தச் சீட்டைத் தரவேண்டும்
சூ மந்திரக்காளி!
மாயமாக மறைக்கிறார்!
உணவு மந்திரி
அரிசி
சர்க்கரை
துணி
PK



சட்டசபைச் சீர்திருத்தம்

தற்போதைய தேர்தல் முறையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஒவ்வொரு தொகுதியிலும் வெல்கிற கட்சிக்கு எதிராகப் பலர் வாக்களிக்றார்கள். பல எதிர்க் கட்சிகள் போட்டியிடும் தொகுதியில் இவர்களின் கூட்டுத்தொகை வெல்லும் கட்சிக்கு வாக்களித்தவர்களைவிட அதிகமாயிருப்பதுமுண்டு. என்றும் தொகுதியைச் சேர்ந்த அக் கணிசமான பகுதியினருக்குச் சட்டசபையில் பிரதிநிதி இல்லை. இது ஒரு தனிப்பட்ட தொகுதியின் கதை.

இனி ஒரு ராஜ்யத்திலோ, இந்தத் தேசம் முழுவதிலுமோ உள்ள எல்லாத் தொகுதிகளையும் எடுத்துக் கொள்வோம். பல வேறு தொகுதிகளில் சிறிய மெஜாரிட்டி பெற்றும், சில இடங்களில் பாதி வாக்காளர்களுக்கும் குறைந்தவரிடமிருந்தே வோட்டுப் பெற்றும் வென்ற அங்கத்தினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு ராஜ்ய சட்டசபையிலும், மத்திய மக்கள் சபையிலும் பெரும்பான்மை ஸ்தானம் கிடைத்து அது ஆட்சி புரிகிறது.

நாட்டு வாக்காளர்களில் நாற்பத்தைந்தே சதவிகிதத்தினர் ஆதரித்த கட்சி, மக்கள் சபையில் எழுபது சதவிகிதம் ஸ்தானம் பெற்றிருக்கிறது. அதாவது, மொத்த வாக்காளர்களில் காங்கிரஸை ஆதரித்த வாக்காளர்கள் எவ்வளவு சதவிகிதமோ அதைவிட வெகு அதிகமான சதவிகித ஸ்தானங்களை மக்கள் சபையில் அக்கட்சி பெற்றிருக்கிறது. மற்ற எதிர்க் கட்சிகள் பல தொகுதிகளில் மொத்தத்தில் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் பெற்றிருந்தும், ஒரு சில இடங்களிலேயே பெரும்பான்மை வாக்குப் பெற்று வெல்ல முடிந்ததால், அவற்றுக்கு மொத்த வாக்காளர்களில் ஐம்பத்தைந்து சதவிகிதத்தினர் ஆதரவு தந்திருந்தும், அதற்கு மிகவும் குறைவாக, முப்பது சதவிகித ஸ்தானங்களே மக்கள் சபையில் கிடைத்துள்ளது. ஆங்காங்கு சிற்சில கட்சிகளின் கொள்கைகளை ஆதரித்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கையைக் கூட்டினால் லட்சக் கணக்கில் இருக்கும். ஆனால் இவர்களுக்குச் சட்டசபையில் ஒரு பிரதிநிதிகூட இல்லாமலும் இருக்கக் கூடும். நிகழ்காலத் தேர்தல் அமைப்பு இதுவே.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தமட்டில் இத்தகைய நிலவரம். அரசியல் கட்சிக் கோட்பாடுகளில் பிரிந்து நிற்பவர் தவிர, சமூக வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களில் வேறு பல பகுதிகள் உண்டு — உற்பத்தியாளர், அந்த உற்பத்திப் பொருளை விநியோகம் செய்யும் வியாபாரிகள் என்பதுபோல். எல்லாப் பொது மக்களுக்கும் உற்பத்தியைப் பற்றியும் வியாபாரத்தைப் பற்றியும் தெரியாது. சமீபகால அரசியல் சூத்திரங்களின்படி அவர்கள் தெரிந்து கொண்டிருப்பதெல்லாம் உற்பத்தியாளரும், வியாபாரிகளும் சமுதாய விரோதிகள் என்ற அபிப்பிராயத்தைத்தான். ஒவ்வொரு தொகுதியிலும் உற்பத்தியாளரும், வியாபாரிகளும் சிறுபான்மையாகத்தான் இருக்க முடியும். இவர்களைச் சமுதாய விரோதிகளாகச் சித்திரித்துக் காட்டும் கட்சி அங்கத்தினர்கள் பெரும்பான்மை மக்களின் ஆதரவை ஆங்காங்கு பெற்று, கடைசியில் சட்டசபைகளிலும் பெரும்பான்மை பலத்தைப் பெறுகின்றனர்; உற்பத்தி குறித்தும் வியாபாரம் குறித்தும் பலவிதமான விதிகளை வகுக்கின்றனர்; உற்பத்தியாளரையும், வியாபாரியையும் அழிக்கச்

சட்டம் செய்கின்றனர். இவ்வளவுக்கும் உற்பத்தியாளரோ வியாபாரியோ தமக்கென ஒரு பிரதிநிதிகூடச் சட்டசபையில் வாதிக்க வழியில்லாமல் அநாதைகளாக இருக்க வேண்டியுள்ளது.

பல கருத்துக்கள் வெளியாகி, விவாதிக்கப்பட்டு, சிறுபான்மையோர் உள்பட எல்லா மக்களின் நலனுக்காகவும் நடக்கும் சர்க்கார்தான் ஜனநாயக சர்க்கார். ஆனால் இப்போது மக்களின் கருத்துக்களுக்கு நேர் விகிதத்தில் அவர்களுடைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை அமையாததால், சட்டசபைகளில் ஒரு கட்சிக்குள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு நாட்டின் கணிசமான பகுதி மக்களின் கருத்துக்களைக்கூட அடியோடு அழிக்க முடிகிறது. இது ஒருகாலும் ஜனநாயகமல்ல.

விகிதாசார பிரதிநிதித்துவம் (proportional representation) என்ற முறைப்படி, இவ்வளவு வாக்காளர்களுக்கு இவ்வளவு பிரதிநிதிகள், இன்னின்ன துறைக்கு இவ்வளவு பிரதிநிதிகள் என்றவாறு சட்டசபை ஸ்தானங்களை அமைத்தால்தான் உண்மையான ஜனநாயகம் ஏற்படும். ஆனால் அரசியல் சாஸனமும், தேர்தல் விதிகளும் இவ்விதத்தில் திருத்தப்படுவது அவ்வளவு எளிய காரியமல்ல; 'வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை' என்ற கொள்கையை நாசமாக்கி, வகுப்புவாத அடிப்படையில் பிரதிநிதித்துவம் தரப்படுகிறது என்ற புகார் கிளம்பும். எனினும், நீதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் சீர்திருத்தம் அவசியமாகும். அரசியல் கட்சிகளுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அளிக்க இயலாவிட்டாலும், சர்க்காரின் தலையீடுகளுக்கு இடைவிடாமல் ஆளாகி அவலமாக நிற்கும் தொழில்துறையினருக்குச் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் தேடித் தர ஒரு வழி கண்டேயாக வேண்டும்.

மேல் சட்டசபைகளுக்கும் ராஜ்ய சபைகளுக்கும் பதிலாக, பொருளாதாரக் குழுக்கள் (Economic Councils) என்பனவற்றை அமைத்து இவற்றில் தொழில் துறையின் எல்லா முக்கிய பிரிவினருக்கும் ஸ்தானமளிக்க வேண்டும்; இக்குழுக்களின் முடிவுமீதே தேசத்தின் தொழில்களைக் குறித்துச் சர்க்கார் சட்டம் செய்ய வேண்டும் என்பது ஒரு நியாயமான கருத்து. இதைத் தீர்க்கமாக ஆலோசித்து அமுல் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

அமெரிக்க ஆசிரியரின் அரிய யோசனை

இவ்விதழின் வட்டமேஜைப் பகுதியில் அமெரிக்காவில் உள்ள கான்ஸாஸ் சர்வகலாசாலை ஆசிரியராகிய ஸ்ரீ என். ஐ. அனந்தநாராயணன் அவர்களின் கடிதம் ஒன்றைப் பிரசுரித்திருக்கிறோம். அமெரிக்காவில் நமது சங்கீத வித்துவான் ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்கள் கர்நாடக இசைக்குச் செய்து வரும் நற்பணி பற்றிக் குறிப்பிட்டு, இப்பணி பூரணமாகப் பலனளிக்க வேண்டுமானால் அவர் சில ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து சில அமெரிக்கர்களையேனும் கர்நாடக சங்கீதத்தில் நல்ல பாண்டித்தியம் பெறச் செய்ய வழி காண வேண்டும் என ஸ்ரீ அனந்தநாராயணன் கூறுகிறார். மிகவும் சரியான யோசனை.

கர்நாடக சங்கீதத்தை, அந்த இசை மரபுக்கே உரியவாறு குருமுகமாகப் பயிலவும், இசை முறை உள்ளத்தில் ஊறி நல்ல ஞானம் பெறவும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளேனும் தேவைப்படும். 'டேப் ரிக்கார்டர்' போன்ற நவீன உபகரணங்கள் கர்நாடக சங்கீத குருவின் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய முடியாது. சுதந்திரக் கற்பனை, சாஸ்திர விதி, ஐதிகங்கள் யாவும் ஒரு சேர அமைந்த கர்நாடக இசையின் பிரத்தியேக இயல்புக்குப் பொருந்திய பயிற்சி முறை, குருவும் சிஷ்யரும் பயிற்சிக் காலம் முழுவதும் நேரடித் தொடர்பு கொண்டு, அபிப்பிராயங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதுதான். இம்முறைப்படி ஒரு சில அந்நியரையேனும் பயிற்றுவித்தால்தான் நமது கலாசாரப் பிரசாரம் முழுப் பலனையும் பெறும்.

எனவே, அவ்வப்பொழுது பல குழுக்களையும், தனிப்பட்ட வித்துவான்களையும் பிற நாடுகளுக்கு அனுப்பிச் சில வாரங்கள் அங்கு அவர்கள் சுற்றுப் பயணம் செய்து நமது கலையின் உருவத்தை வெளிநாட்டுக்குப் புலப்படுத்த உதவி செய்து வரும் அரசாங்கம், நமது கலைஞர்களில் ஒருசிலரேனும் வெளிநாடுகளில் சில ஆண்டுகள் தங்கியிருந்து போதித்து அங்கெல்லாம் இந்திய இசை விற்பன்னர்களைத் தோற்றுவிக்கத் திட்டம் வகுக்க வேண்டும்.

என்ன சேதி?

ஷியாவின் விழிப்பு

மாஸ்கோ, நவ. 16ல

சுதந்திரத் தொழிலுரிமை முறையே பொதுமக்கள் வாங்கி உபயோகிக்கும் பண்டங்களை மேலும் அதிகமாகவும், தரத்தில் மேலும் உயர்ந்தனவாகவும் தயாரிப்பதற்குத் தலைசிறந்த வழி என நேற்று ஸோவியத் அரசு ஒப்புக் கொண்டது.

ந்த ருஷ்யச் செய்தியைப் படிக்கும் ாது சுதந்திரக் கட்சிக்கு ஒரு வெற்றி டைத்ததாகவே தோன்றுகிறது.

ஸோவியத் சர்க்காரின் பிரதான த்திகையான 'ப்ராவ்டா'வின் தலை ங்கத்தைப் படிக்கப் படிக்க உற்சாகம் ளருகிறது. நாடு முழுவதற்கும் ஒரு த்திய சர்க்காரைக் கொண்டு திட்டம் குப்பதைக் குறைக்க வேண்டும் ன்றும், பொதுமக்கள் பயன் செய்யும் ண்டங்களின் **உற்பத்தியை லாபநோக்கம் ன்ற அடிப்படையின் மீது அமைக்க வேண் ும்** என்றும் அப்பத்திரிகை வெளிப் டையாக எழுதியுள்ளது.

''முதலீட்டுச் சக்திகளுக்குச் சுதந் திரம் கொடுக்கத் தருணம் வந்து விட் டது. சுதந்திரம் இருந்தால்தான் முதலீட்டுச் சக்தி படைத்தவர்கள் தரமான பண்டங்களையும், மக்கள் விரும்பி வாங்கும் பண்டங்களையும் உற்பத்தி செய்வதில் அக்கறை கொள்வார்கள்'' என்றும் அப்பத்திரிகை கூறுகிறது. அதாவது, அரசாங்கம் உற்பத்தித் துறையில் ஏகபோக்கியம் பெறும்போது நல்ல பண்டமோ, மக்கள் **விரும்பி வாங்கும்** பண்டமோ கிடைக்கவில்லை என்பதையும், சுதந்திரத்துடன்—லாப நோக்கத்துடன் — முதலீடுகள் செய்யப் பட்டால்தான் மக்கள் விரும்பி வாங்கும் நல்ல பண்டம் கிடைக்கும் என்றும் ருஷியா ஐயம் திரிபு இன்றி இப்போது கூறுகிறது.


கம்யூனிஸ தந்திரம்

கேரள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு ஈ. எம். எஸ். ''சீன இந்தியாவில் ஆக்கிரமிப்புச் செய்தது உண்மைதான்!'' என்று ஒப்புக் கொண்டு விட்டார். இதை ஒரு பெரிய அதிசயச் செய்தியாகப் பத்திரிகைகள் சென்ற வாரம் பிரசுரித்திருக்கின்றன. காரணம் அவர் இது வரை இந்தப் ''பட்டப் பகல் கொள்ளை''யை ஒப்புக் கொள்ளாமலிருந்ததே. கேரளத்தில் தேர்தல் தேதி நெருங்க நெருங்க, ''இனியும் உண்மையை ஒப்புக் கொள்ளாவிடில் ஆபத்துதான்!'' என்று கருத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார். காரியம் என்றால் எதையும் செய்யும் கம்யூனிஸ்டுகள் இதைச் செய்ததில் அதிசயம் ஒன்றுமில்லை.

இன்னொரு தந்திரமாகக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக கம்யூனிஸ்டுகளே வதந்தி கிளப்பி வந்திருக்கிறார்கள். இதையும் நம் நாட்டில் சில அப்பாவி மக்கள் உண்மை என்று நம்பி வந்திருக்கிறார்கள். நாம் முதலிலிருந்து கம்யூனிஸ்டுகளிடையே பிளவு—சண்டை என்பதெல்லாம் ஊரை ஏமாற்றும் சூழ்ச்சியே தவிர வேறில்லை, அவர்கள் ஒரு நாளும் பிளவுபட்டு நிற்க மாட்டார்கள், ஏமாறவேண்டாம் என்று எச்சரிக்கை செய்து வந்திருக்கிறோம். அதற்கு ஏற்றாற்போல் வருகிற தேர்தலில் கேரளத்தில் பிளவுபட்ட

முப்பத்திரண்டு ஆண்டுகளாக சங்கீதம், பரதநாட்டியம், நாடகம் இம் மூன்று துறைகளிலும் அரும் பணி ஆற்றி, சுமார் இருநூறு ஆராய்ச்சி நூல்களை எழுதியும் பதிப்பித்தும் கலைத்தொண்டு புரிந்து வரும் சென்னை சர்வகலாசாலை சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் வே. ராகவன் அவர்களுக்கு சங்கீத நாடக அகாடமியின் ஃபெலோஷிப்பை ராஷ்டிரபதி வழங்குகிறார்.





வைத்தியத் துறையில் நிபுணர் என்று பெயர் பெற்று, அதன் பின் சட்டசபை அக்கிராசனராகவும் புகழ் பெற்ற ஸ்ரீ செரியன் அவர்கள் மகாராஷ்டிர கவர்னராக நியமனமாகியுள்ளார். அவருக்கும், சமூக சேவையில் அவரைப் போலவே கியாதி பெற்றுள்ள ஸ்ரீமதி தாரா செரியன் அவர்களுக்கும் நமது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

கம்யூனிஸ்டுகள் ஒன்றுபட்டு வேலை செய்யப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது!

பிரிட்டனின் நல்லெண்ணம்

அந்நாட்களில் பர்மாவின் தலைநகரமாக இருந்த மாண்டலே நகரத்தில் 1885ம் ஆண்டில் பிரிட்டன் கைப்பற்றிய விலை மதிக்கவொண்ணு அதிசயப் பொருட்களை, இன்றைய பர்மிய

சர்க்காரிடம் தனது நல்லெண்ணத்
காட்டிக் கொள்ளும் வகையில், பி
டன் சென்ற வாரம் திருப்பித் த
விட்டதாம். பர்மாவிடம் காட்
அந்தப் பரிவை இந்தியாவிடமும் கா
பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள பா
நாட்டுக் கலைச் செல்வங்களைத் தி
பித் தந்தால் இந்தியன் ஒவ்வொ
னும் எவ்வளவோ குதூகலமடைவா

ராஜநீதி தெரியாத ராணுவ மந்

'மிக்' விமான ஒப்பந்தம், த
மனிதர்கள் என்ற முறையில் எனக்
குருஷேவுக்குமிடையே நடந்த உட
பாடு அல்ல. அது இந்திய சர்க்கா
கும் ருஷ்யா சர்க்காருக்குமிடையே ஏ
பட்ட ஒப்பந்தம். எனவே குருஷே
போனாலும் ருஷிய சர்க்கார் அ
மதித்து நிறைவேற்றும்' என்று ராணு
மந்திரி ஸ்ரீ சவான் கூறியிருக்கிறா
நாட்டுப் பாதுகாப்பில் முக்கியமா
பொறுப்பு பெற்றுள்ள ஸ்ரீ சவா
கம்யூனிஸ ஆட்சியைப் பற்றி இ
வளவு ஞான சூனியமாயிருக்கிறா
என்று ஆச்சரியமும், கவலையும் அ
கிறோம். குருஷேவ் மட்டும்தா
போனரா, அவர் கடைப் பிடித்
கொள்கைகளும் போய் விட்டனவ
என்பது காலக் கிரமத்தில் தெரியும்
ஆனால் அதற்குள் நாம் விழித்து
கொள்ளாவிடில் வெள்ளம் தலைக்குமே
போய் விடும்.

அடுத்த இதழ்

ராஜாஜி விரும்பாத காரியம் ஒன்றை நாம் வருஷந்தோறும் செய்து வாசகர்களை மகிழ்விப்பதுண்டு – ராஜாஜியின் ஜன்மதினமாகிய டிஸம்பர் எட்டாந் தேதியை ஒட்டி வெளியாகும் 'கல்கி'யைச் சிறப்பிதழாக வெளியிடுவதைத்தான் சொல்கிறோம். இம்முறை ராஜாஜி வழக்கம் போல் தமது பிறந்த தினக் கொண்டாட்டத்தைத் தடுக்காமல், வழக்கத்தைவிட வலுவாகத் தடுத்திருக்கிறார். 'அன்புக்குரிய நேரு அவர்கள் மறைந்த துயரம் இன்னும் நீங்கவில்லை; உணவுப் பிரச்னை கவலைக்கிடமாயிருக்கிறது; இச்சமயத்தில் இக்கிழவனின் பிறந்த நாளுக்கு ஏன் விழா?' என்கிறார்.

நேருஜியின் மறைவுக்குப் பின் அநேகத் தலைவர்களுக்கு ஆடம்பரமாகப் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நடந்திருக்க, ராஜாஜி இவ்விதம் கூறியிருப்பது அவரது அந்தரங்கமான நேசுக தர்மத்துக்கும் அன்பு இதயத்துக்கும் சான்றாகும். ஆனாலும் நம்மைப் பொறுத்த மட்டில் பெரியோர்களின் பிறந்த தின விழாக்களைக் கொண்டாடுவது நற்பயனளிக்கும் ஒரு கடமையாகும்.

உணவுப் பிரச்னை முதலிய இன்னல்களால் நம் உள்ளம் தளர்ந்து போயிருக்கும் போது ஊக்கமும், தைரியமும் பெறுவதற்கு மகான்களின் வரலாற்றை நினைவு கொள்வதே 'டானிக்' ஆகும். இந்த ஆண்டு நேருஜி நம்முடன் இருந்து தம் பிறந்த தினத்தை நாடு கொண்டாடி மகிழும் பாக்கியத்தைத் தரவில்லை; ராஜாஜி ஜயந்தியையும் கொண்டாடாவிடில் மனச்சோர்வு அதிகமாகிவிடும். எனவே பகட்டும் படாடோபமும் இன்றிக் கௌரவமான முறையில் நம்முடைய புத்துணர்ச்சிக்காக ராஜாஜியின் பிறந்த நாளைக் கொண்டாடி, அவரது பணிகளை நினைந்து மகிழ்ந்து, அவர் நீண்ட நாள் வாழ்ந்திருந்து நமக்குச் சக்தியளிக்குமாறு பிரார்த்திப்போம்.

இவ்வாறு தலைவரின் பெருமைகளை நினைவு கூர்ந்து, உற்சாகம் பெறுவதற்காக வழக்கம் போல் இவ்வாண்டும் ராஜாஜியின் ஜயந்தியை ஒட்டி வெளியாகும் டிஸம்பர் 6ந் தேதி 'கல்கி' அவரைப் பற்றிய சிறப்பு மலராக வெளியாகும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

போப்பாண்டவர் ஆறுவது பால்

உலகத்தின் பல நாடுகளிலும் பல பகுதி ளும் பரவிப் பரந்து வாழும் ஐம்பது ரடி கிறிஸ்தவக் கத்தோலிக்க மக்களுடைய ர்மிகத் தலைவர் புனித பிதா போப்பாண்ட ஆறுவது பால். அவருடைய ஆட்சி ரம் இத்தாலியில் உள்ள ரோமாபுரி ச பகுதியான வாடிகன் எனப்படும். ரீத பால் தேவாலயத்தைத் தமது மைம ஸ்தானமாகக் கொண்டு, ஆலோச கள் பலரின் துணையுடன் அவ்வப்போது ட்டங்கள் கூட்டி, கத்தோலிக்க மக்களது ன்மிக நலன்களையும், சமயக் கோட்பாட்டு நிமுறை நடைமுறைகள் பற்றியும், கிறிஸ் வ தர்மங்கள் பற்றியும் விளக்கங்கள் கூறி நபவர். போப்பாண்டவர் தமது ஆலோ னைகளையும் கட்டளைகளையும் தமக்குச் சாந்தமான தனிப் பத்திரிகை, ஒலி ரப்பு, தகவல் இலாகா மூலம் பிரசாரப் ந்தி உயர் பணி செய்து வருகிறார். உலக ர சியல் கண்ணோட்டத்தில் வாடிகன் ரஜ்யம் ஒரு தனி ராஜ்யமே.

வெளி நாடுகளுக்குப் போப்பாண்டவர் ாதாரணமாக விஜயம் செய்வதில்லை. அப்படிச் சென்றால் ராஜ மரியாதைகளுக்கு உரித்தானவர். ஆனால் பம்பாய் மாநகரத்துக்கு உலகக் கத்தோலிக்க மகாப் பிரசாத மகாநாட்டை ஒட்டி விஜயம் செய்யும் போப் அவர்கள் இதற்கு முன்பு பாலஸ்தீனத்தில் இயேசுநாதர் அவதரித்த ஸ்தலத்துக்குச் சென்றது போலவே இதையும் க்ஷேத்திராடனமாகக் கருதுகிறார்.

பட்டத்துக்கு வருவதற்கு முன் ஜியோவன்னி பாடிஸ்டா மாண்டினி என்ற பெயருடன் வாடிகன் பிரதிநிதியாக இதர நாடுகளில் உயர் பணியாற்றி அநுபவம் பெற்றதுடன் பிற்காலத்தில் வாடிகன் தலைமை ஸ்தானத்திலேயே நிர்வாகக் காரியங்களில் பங்கு கொண்டு முந்தைய போப்பாண்டவர் இருபத்து மூன்றாவது ஜான் அவருடைய நன்மதிப்பையும் பெற்றவர் ஆறுவது பால்.

எம்மதமும் சம்மதம் என்ற பரந்த நோக்குள்ள நமது பரத கண்டத்தில் கத்தோலிக்க சமயாசாரியரை வரவேற்று மரியாதை செலுத்துமுகமாக அவரது திரு உருவத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிடுகிறோம்.





இவ்வாண்டு சங்கீத நாடக அகாடமியின் ராஷ்டிரபதி பரிசைப் பெற்றவர்களும், ஃபெலோஷிப் கௌரவம் பெற்றவர்களும் நீண்ட காலமாகக் கலைத் துறையில் பெரும் புகழும் பெற்ற பெருமக்களாவர். ஹரிகதை அரசி ஸ்ரீமதி சரஸ்வதி பாய், முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ பி. வி. ராஜமன்னார், முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர், நடிகக் கலை நிபுணர் நவாப் ராஜமாணிக்கம், வயலின் விற்பன்னர் கரூர் சின்னஸ்வாமி அய்யர், இசைப் பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் இவ்வருடம் சங்கீத நாடக அகாடமியால் கௌரவிக்கப்பட்டனர் என்றறிந்தபோது நமக்கு ஆச்சரியமாகவே இருந்தது— இவ்வளவு காலமாக இவர்கள் இந்தப் பெருமையைப் பெறாதது எப்படி என்று. இவ்வனை வருக்கும் நமது மனமுவந்தவாழ்த்துக்கள்.





சாஸ்திர சாகரம் மறைந்தது!

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

நம்முடைய மதத்தில் அபிமானமுள்ள எல்லோருக்கும், வேத தர்மத்தில் சிரத்தையுள்ள யாவருக்கும், சம்ஸ்கிருதத்திலும் சாஸ்திரத்திலும் பரிசயம் உள்ள அனைவருக்கும் மகாமகோபாத்தியாய பிரம்மஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளின் மறைவு ஆறாத் துயரம் அளிக்கும்.

பாலக்காட்டிலுள்ள நூரணியில் பிறந்த ஸ்ரீ சாஸ்திரிகள் சென்னை சம்ஸ்கிருத கலாசாலையில் படித்து 'சிரோமணி' பட்டம் பெற்று வேத உபநிஷதங்களில் சிறந்ததேர்ச்சி அடைந்தார். அதன்பின் கல்கத்தா சர்வ கலாசாலையில் பேராசிரியர் பதவி ஏற்று, நீண்ட காலம் அந்தப் பதவியைத் திறம்பட வகித்து அந்தப் பதவிக்கே பெருமை தந்தார். அங்கிருந்து ஓய்வுபெற்றபின் பாரதீய வித்யா பவனத்தின் அற்புதமான ஆத்மிக சேவைக்குத் தமது பாண்டித்திய பலத்தை அளித்து உதவினார். ஸ்ரீ சாஸ்திரிகளிடம் காசி மகாராஜா பெருமதிப்புக் கொண்டு, காசியில் அவர் சௌகரியமாக வாழ்வதற்கு எல்லா வசதிகளும் செய்து தந்தபடியால் சாஸ்திரிகள் அடிக்கடி அங்கும் சென்று தங்கி வந்தார்.

பல ஆண்டுகளுக்கு முன் அவர் சென்னையில் 'சம்ஸ்கிருத பரிஷத்' கூட்டியதையும் அப்போது தேசத்தில் உள்ள சம்ஸ்கிருத அறிஞர்கள் அனைவரும் கூடியிருந்து சமூகப்பிரச்னைகளைச் சாஸ்திர அடிப்படையில் ஆராய்ந்ததையும் என்றும் மறக்க முடியாது. அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு இருந்த செல்வாக்குக்கு இது ஓர் உதாரணம். சாஸ்திரிகள் சொல்லி விட்டார் என்றால் லக்ஷ லக்ஷமாக தர்மத்துக்கு வாரி வழங்க முன்வந்த வட இந்தியர்கள் பலர் உண்டு. இவ்வாறு பிற ரைத் தம் செல்வாக்கால் தர்மப் பணி பு வைத்ததோடு ஸ்ரீ சாஸ்திரிகள் தாமே ய யக்ஞங்களுக்கும் இதர வேத தர்மப் ப களுக்கும் தமது செல்வத்தை அள்ளி அ இருக்கிறார். பற்பல இடங்களில் பகவத் கீ பிரவசனங்கள் செய்து, முடிவில் பு ஸூக்த ஹோமங்கள் செய்திருக்கிறார். வித் யும் தர்மசிந்தையும் படைத்த சாஸ் களின் மற்றொரு பெருமை அவரது பெ தன்மை பொருந்திய மனோபாவமாகும்.

ஸ்ரீ சிருங்கேரி பீடம், ஸ்ரீ காமகோடி பீட ஆகிய இரு ஆசாரியர்களிடமும் சாஸ் களுக்கு இருந்த பக்தி, அத்வைதத்துக்கு அ செய்த சேவையில் பிரதிபலித்தது எ லாம். ஸ்ரீ காமகோடி ஆசாரியாளைப் பரமே வரனின் அவதாரமாகவே கருதி அடிக்க தரிசித்து, அவரது கட்டளையின்படி வே தர்ம பரிபாலனத்துக்காகப் பல விடங்கள் பிரவசனம் செய்தும், திரவியம் திரட்டி தந்தும் கைங்கரியம் செய்திருக்கிறார். சா திரிகள் எழுதியுள்ள பல நூல்களில், அத்வை தத்தைக் கண்டிக்கும் 'சததூஷணி'க்கு மறு பாக அவர் எழுதிய 'சத பூஷணி'யை முக்கி மாகக் குறிப்பிட வேண்டும்.

மகாமகோபாத்தியாய பட்டம், பார ராஷ்டிரபதிப் பரிசு முதலியவற்றைப் பெற் ஸ்ரீ சாஸ்திரிகள் இறுதியில் அத்வைதாநந் சரஸ்வதிகள் என்று சந்நியாசப் பட்ட பெற்றுத் துறவியாகி அத்வைத ஆனந்த தில் ஐக்கியமாகி விட்டார். இவர் துற யாகி ஸித்தி அடைந்ததால் ஆஸ்திகர்களுக் இவர் மறைந்ததாகவே தோன்றாது. அ ருடைய ஆத்மஜோதி என்றைக்கும் தா களுக்கு ஆசி கூறிக் கொண்டிருக்கும் என்றே அவர்கள் நம்புகிறார்கள்.

தமிழிசைக்குத் தனிப் பெரும் தொண்டு புரிந்த காலஞ்சென்ற செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் உருவச் சிலையைச் சென்ற வாரம் அண்ணாமலை மன்றத்தின் முன்றிலில் மைசூர் மகாராஜா அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவுக்கு டாக்டர் ஸி.பி. ராமசுவாமி ஐயர் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழிசைச் சங்கத் தலைவர் ஸ்ரீ டி.எம். நாராயணசாமி பிள்ளை அவர்களும் அண்ணாமலைச் செட்டியாரின் புதல்வர்கள் ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்களும் திரு எம். ஏ. சிதம்பரம் அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.







அறிந்தீர்களா?
இதுதான் உங்கள்
பனாமா
1 தேர்ந்தெடுத்த வர்ஜீனியாப் புகையிலைகளின் கலவைப் பலனாக தன்மையான புகைநயம்—அதுவே உங்கள் பனாமா!
2 நாடெங்கும் நல்லின்பம் பரப்பும் மக்கள் ரகமாகிய பனாமா ஒத்த இனத்திலே உன்னத விற்பனையுள்ள ரகமாகும்.
3 நாட்டின் பல பகுதிகளிலே, தலைசிறந்த ரகமாகத் திகழுவதும் உங்கள் பனாமா.
4 இன்று மக்கள் மனங்கவர்ந்துள்ள இருபதடங்கிய உறையினைப் பல்லாண்டுகளுக்கு முன் தோற்றுவித்த ரகமே பனாமாதான்.
Panama
20
CIGARETTES
உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது பனாமா
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரிது

கந்தன் கருணை

4. விளக்கை நாடிய விட்டில்

திருமுருக கிருபானந்தவாரியார்

பார்வதி தேவி தவம் செய்து கொண்டிருந்தபோது அசுரர் தலைவன் சூரபதுமன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் நூற்றெட்டு யுகங்களாக அரசு செலுத்தி ஒப்பாரும் மிக்காருமின்றிச் செருக்குற்றிருந்தான். அசுரன் ஆட்சியில் தவ சிரேஷ்டர்களின் உள்ளம் அமைதியின்றித் தவித்தது.

எம்பெருமான் ஞானமே வடிவானவர். இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லை. என்றைக்கும் ஒன்று போல் இருப்பவர் பரமேசுவரர். அவர் கைலாய மலையில் கல்லால விருட்சத்தின் கீழ்த் தென்முகம் நோக்கிப் பரம சாந்தமாக அமர்ந்திருந்தார்.

சிவாலயங்களில் சிவலிங்கம் பல திசைகளை நோக்கியிருக்கும். ஆனால் திசை காட்டும் கருவிபோல் தட்சிணா மூர்த்தி எல்லாக் கோயில்களி தெற்கு நோக்கித்தானிருப்பார்.

வடக்கு நோக்கிச் செல்வது (யாத்திரை. தெற்கு நோக்கிப் போ மரண யாத்திரை. ''வடக்கு நோ போகாதவர்களே! நீங்கள் என்ன வந்தால், நான் உங்களை நோக்கி வேன்'' என்று தெற்கு நோக்கிய ரும் தட்சிணாமூர்த்தி சொல்லா சொல்லுகிறார்.

பிரமனுக்கு சனகர், சனந்த சநாதனர், சனத்குமாரர் எ நான்கு புத்திரர்கள். சனகாதி (வர்கள் என்று இவர்களைச் சிறப்பித் சொல்வதுண்டு. பிரமபுத்திரர் நா ரும் வேதங்களைக் கற்றுக் கரை கண வர்கள். எனினும் இவர்கள் விரும் சாந்தியைக் கல்வியினால் அடைய மு வில்லை. பல இடங்களுக்கும் ெ னார்கள்; எங்கும் மன அமைதி கிடை வில்லை. கடைசியாகக் கயிலை மலை



ந்தார்கள். முதல்
ல யடைந்ததும், நந்தி
பெருமானை வணங்கி,
அநுமதியுடன் சிவ
யுட் சென்றனர். பிரமன்
யோர் காணுத ஞான
னை சனகாதியர் நால்
கண்டனர்.

யது தவறல் செல்ல
ருடல் பொடிப்புக் கொள்ள
ால் பெருகத் தீசேர்
ழுகென உள்ளம் விள்ள
ய மறைக்கும் எட்டா
தீநா யகனை நோக்கித்
தனர் உவகை பூத்துத்
ன்னினர் துளக்கம் உற்ருர்.

கவும் பெரிய ஒருவரிடம் நயாவது சொல்லுவதற் ாறு போவோம். ஆனுல் நப் பெரியவரைக் கண்ட . எதைச் சொல்லப் ளுமோ அதைச் சொல்ல யாமல் மொழி தடுமாறும். போலப் பரமேசுவரரைக் டதும் சனகாதி முனிவர் க்கு மொழி குழறியதாம். ர்க்கூச்சம் ஏற்பட்டதாம். ரை தாரையாகக் கண்ணீர் டார்களாம். அனலிடைப் ட மெழுகு போல் அவர்கள் உள்ளம் ழந்து விட்டதாம்; சரீரம் துள்ளு தாம். ''ஹர ஹர'' என்று எம் ருமானைத் தொழுது, ''வானோர்க் ய மருந்தே போற்றி, ஏனோர்க்கெளிய றைவா போற்றி'' என்று துதித்தனர். சுவாமிக்குக் கருணை பிறந்தது. ழந்தைகளே! வாருங்கள்! உங் நக்கு என்ன வேண்டும்?'' என்று ானத்தை விட்டு மோகனக் குரலில் ட்டார்.

''பெருமானே! கார்த்திகை மாதம். ரயாணிகள் கப்பலில் செல்கிறார்கள். மாவாசையும் நிகழ்கிறது. நடு நிசி. பல் வீசத் தொடங்குகிறது. அப் ாது கப்பலில் உள்ளவர்கள் எப்படித் விப்பரோ, அப்படி அமைதியின்றித் விக்கிறது எங்கள் மனம்.

''அருட்பெருங்கடலே! வேதங்கள், பகமங்கள், இதிகாசங்கள் எல்லாவற் றையும் நாங்கள் படிக்கப் படிக்க ங்களுக்கு அதிகமாகச் சந்தேகம் எழு ன்றதேயன்றிச் சாந்தி கிடைக்கவில்லை. ங்கள் மயக்கத்தைப் போக்கி மனம் யமைதியடையும் வழி காட்ட வேண் ம்'' என்று பிரமபுத்திரர் நால்வரும் தொழுது வேண்டினர்.



பரமேசுவரர் புன்சிரிப்புச் சிரித் தார். நந்தியெம்பெருமானை அழைத்து, ''யார் வந்தாலும் உள்ளேவிட வேண் டாம்'' என்று கட்டளையிட்டார்.

சனகாதி முனிவர்கட்குச் சிவாகமங் களின் நுட்பங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்ற முப்பதங்களையும் கூறி னர் சுவாமி. ''ஐயனே! எங்கள் மனம் ஒடுங்க ஞான பதம் போதிக்க வேண் டும்'' என்று சனகாதி முனிவர்கள் வேண்டினர். ''குழந்தைகளே! அதை வாக்கினுல் போதிக்க முடியாது; இப் படிச் சும்மாயிருப்பதே அதுவாகும்'' என்று தம் திருமார்பில் திருவிரலால் அமைத்த சின்முத்திரையைத் தாங்கி யோகத்தில் அமர்ந்து மௌன நிலை யைக் காட்டியருளினார் தட்சிணாமூர்த்தி.

நான்கு விரல்கள் ஒரு பக்கமும் கட்டை விரல் மட்டும் தனித்து ஒருபுறமும் நிற் கின்றது. சில்லறைகளுடன் சேராமல் ஒதுங்கிக் கொள்ளும் அந்த விரல்தான் பதி. ஒன்றாகி, உடனாகி, வேறாகி நிற் பவர் இறைவர். ஆள் காட்டு விரல் — ஆன்மா. நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் மூன்றும் முறையே ஆண வம், கர்மம், மாயம் என்ற மும்மலங் களைக் குறிக்கும். இம்மலங்களினின்றும்

உயிர் நீங்கி, பசுவாகிய ஆன்மா பதியுடன் ஒன்றுபட வேண்டும். இதைச் சுட்டிக் காட்டுவது சின்முத்திரை. அது சிவனும் சிவனும் ஒன்றுபட்ட இடம்.

சின்முத்திரை தாங்கி நீலகண்டன் ஆலமரத்தடியில் அமர்ந்தார். அங்கு ஆச்சரியங்கள் நிகழ்ந்தன. எப்போதும் குருநாதர் வயதானவராக இருப்பார். இங்கோ குருநாதர் இளமை உள்ளவர்; சீடர்களான சனகாதி முனிவர்கள் வயதானவர்கள். குருவின் வியாக்கியானமெல்லாம் மொழியொழிந்த மோனத்திலேயே நடந்தது இன்னொர் ஆச்சரியம்.

''சிவஞானமானது நூல் அறிவினால் கிடைப்பதன்று; அநுபவ அறிவால் மட்டுமே கிடைப்பது'' என்று சின்முத்திரை உணர்த்தியது. அதனை உள்ளத்தில் பதித்துக் கொண்ட சனகாதி முனிவர்கள் ஒடுங்கிச் சித்திரப் பதுமை போல் செயலற்றுச் சிவஞானத்தில் இருந்தனர். ஞான நிலையைக் காட்ட, சிவபெருமான் மோன நிலையில் இருந்த ஒரு கணப் பொழுதில் பிரமன் முதலான தேவர்களுக்கெல்லாம் அநேக யுகங்கள் ஓடின.

சிவமூர்த்தியின் தவ நிலையால் விண்ணில் அமரர்களும், மண்ணில் மனிதர்களும் காம இச்சை அறவே நீங்கி முற்றத் துறந்த முனிவர் போல் இருந்தனர். சிருஷ்டி நடைபெறவில்லை.

இச்சமயத்தில்தான் சூரபதுமன் தேவர்களுக்குக் கொடுமை செய்து கொண்டிருந்தான்.

சூரபதுமன் ஆட்சி நடத்தும் கொடுமையைப் பார்ப்போம். அவனது மந்திரி தர்ம கோபன் தேவர்களை ஒவ்வொருவராகச் சூரபதுமனிடம் அனுப்புகிறான். சூரபதுமன் ஒவ்வொரு தேவரையும் அழைத்து விசாரிக்கிறான்,

''யார் நீ?''

''நான் அலரி!''

''அப்படியென்றால்.....?''

''பொழுதை மலரச் செய்கிற சூரியன்.''

''ஓஹோ! நீதான் சூரியனா? இனிமேல் இங்கு பகலில் வெய்யில் சுடக் கூடாது. சுட்டால் தலையைக் கிள்ளி விடுவேன். எங்கள் மண்டலத்தில் உன் வெப்பமே படக் கூடாது. உன் மண்டலத்துக்குச் செல்லும்போது வெப்பத்துடன் செல்ல வேண்டும்; தெரிகிறதா?''

''உத்தரவு! வருகிறேன்'' என்று கூறிச் சூரியன் புறப்படுகிறார்.

அடுத்தவர் வருகிறார்.

''நீ யார்?'' என வினவுகிறான் சூரன்.

''நான் சந்திரன்! அத்திரி முனிவருக்கும் அநசூயா தேவிக்கும் புதல்வன்.''

''உன் உடல் ஏன்தேய்ந்திருக்கிறது

'' அது என் மாமனார் கொடு; சாபம்.''

''சந்திரனே! என் மண்டலத்தில் தேயவும் கூடாது; வளரவும் கூடா; எப்பொழுதும் ஒரே மாதிரியாக இரு வேண்டும்.''

''உத்தரவு; வருகிறேன்!'' எல் சொல்லிச் சந்திரன் புறப்பட்டார்.

அடுத்ததாக எமன் நடுங்கி கொண்டே வந்து நிற்கிறான்.

''நான்தான் எமன். அந்தகன் கூற்றுவன், நடுவன் என்ற பெய களும் எனக்கு உண்டு. உயிர்களைப் பிரி பது என் வேலை'' என்கிறான்.

''அந்த வேலையை இந்த ஊரில் வைத்துக்கொள்ளக் கூடாது. இங்கே கால காட்டுகின்ற வேலையை ஒழுங்காக செய்ய வேண்டும்.''

அடுத்து இந்திரன்.

''யார் நீ?''

''முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தலைவனாயிருந்த தேவேந்திரன்.''

''உனக்கு ஒரு வேலை தருகிறேன் அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும் கடலில் உள்ள மீன்களை யெல்லாட பிடித்து, இந்த ஊரில் உள்ள ஒவ்வொ வீட்டிற்கும் சென்று, எந்த வகையான மீன் எவ்வளவு தேவை என்று கேட்டறிந்து என் மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.''

''உத்தரவு.''

வான் சுமந்த தேவர்களை மீன் சுமக்க வைத்தான் சூரபதுமன்!

அக்கினி பகவான் வந்தான்.

''யார் நீ?''

''நான்தான் மூளரி.''

''அப்படி யென்றால்?''

''அக்கினி.''

''இந்த மண்டலத்தில் சுடுகிற வேலையை வைத்திருக்கக்கூடாது; ஓடு.''

அக்கினி தேவர் ஒரே ஓட்டமாக ஓடுகிறார்.

அடுத்ததாக பிரம்மன்.

''யார் நீ?''

''நான் உன் கொள்ளுப் பாட்டன். உன் அப்பா காசிபர். அவருக்கு அப்பா மரீசி. மரீசிக்கு அப்பா நான்.''

''என்ன இருந்தாலும் நீ எனக்குப் பந்து என்று சொல்லி விட்டதால் உன்னைத் துன்புறுத்தவில்லை. பஞ்சாங்கத்தில் நாள் நட்சத்திரம் பார்த்து வீடு வீடாகச் சென்று சொல்ல வேண்டியது உன் வேலை.''

பகவானாகிய நாராயணர் வந்தார்.

''யார் நீ?''

பாம்மையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வச்சுட்டேம்மா....




அப்படியா! மிக இனிப்பான பரிசு
அவளுக்குத் தரவேண்டியதுதான்-
காட்பரீஸ் சாக்கலேட்தான் அது-
பாலின் குணங்கள் அடங்கியதாயிற்றே!

Cadbury's காட்பரீஸ் சாக்கலேட்

மிட்டாய் மட்டுமல்ல... ஒரு உணவும்கூட!





எல்லாம் அவன் அருள்...

மாது மகிழ்ச்சியுள்ள விவசாயி. ஆண்டவன் அருளால் அவனுக்கு ஒரு குறைவுமில்லை. சொந்த வீடு, மனநிறைவுள்ள குடும்பம். இவற்றோடு ஆநிரைச் செல்வம்! தனது நிலத்தை நல்ல முறையில் உழுது, பயிரிட்டு அமோக விளைச்சலைக் காணுகிறான் அவன். உயர்ந்த விதைகளையே விதைத்து, ராலீஸ் தயாரிக்கும் சமநிலை உரக் கலவைகளால் நிலத்தைச் செழுமையாக்குகிறான்.

ராலீஸ் 'மரம் மார்க்' உரங்கள் அமோக விளைச்சலைத் தருகின்றன. வளம் மேலும் பெருக, டாடா - பைஸன் பூச்சி மருந்துகளைக்கொண்டு பயிரைப் பாதுகாருங்கள். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன.

TATA-FISON
PESTICIDES

RALLIS
TREE BRAND
FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிமிடெட்
இந்தியா முழுதும்

RI-SF-68 TAM

''உன் பாட்டனுக்குப் பாட்டன்; ாராயணர்.''

''உனக்கும் கடினமான வேலை தரக் டாது. இந்த மண்டலத்தில் உள்ள ௵வ்வளவு விடுகளுக்கும் சென்று ௵வர்கள் கேட்கின்ற வரங்களைக் ொடுத்துக் கொண்டிரு.''

இவ்வாறெல்லாம் தேவர்களைத் துன் றுத்திய சூரபதுமன் வானவர்களை ப்படி வேலை வாங்கினன் எனப் பார்ப் ோம். காலையில் தென் கடலில் ள்ள தனது தலைநகரான வீர மகேந்திர ுரியில் வேலை செய்யும்படியும், டச்சி வேளையில் தன் தம்பி தாரகனின் கராகிய மாயமாபுரத்தில் வேலை செய்யும்படியும், மாலையில் மற்றொரு சோதரனாகிய சிங்கமுகனின் ஊராகிய ஆசுர நகரில் வேலை செய்யும்படியும் பணித்தான். அலைந்து அலைந்து நிலை குலைந்து போனார்கள் தேவர்கள்.

இதை அருணகிரிநாதர் பாடுகிறார்:

நேத்திரவழி அலகியமத் நடுவன்மக பத்மவரி
நேத்திந்த் பத்கரிய வனமாலி
நீலவுமறை பவளிவர்க வலையஅர சகிமையுறி
நேத்தனா மதஅயில விடுவோனே

தேவேந்திரன் பொன்னுலகை விட்டுத் தேவர்களோடும் இந்திராணியோடும் மேரு மலை சென்றான். சூரபதுமனுடைய மகன் பானுகோபன் வானுலகமாகிய பொன்னாட்டை எரித்துத் தன் மகன் சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறைப் பிடித்த செய்தி கேட்டு மிகவும் வருந்தினன். மேரு மலையின் ஒரு புறத்தி லிருந்து எம்பெருமானை நோக்கித் தவம் புரிந்தான். அவனது தவத்துக்கு இரங் கிய பரமேசுவரர் காட்சி தந்தார்.

''கருணாமூர்த்தி! சூரபதுமன் என்னை யும் தேவர்களையும் துயரக் கடலில் ஆழ்த்துகிறான். என் மகன் சயந்தனை யும் தேவர்களையும் சிறையில் அடைத்து வைத்து, எனது நகரமாகிய அமராவதி யைக் கொளுத்தி இடர்கள் பல செய் கிறான். அந்தச் சூராதிகளை அழித்து எங்களைக் காத்தருள வேண்டும்'' என்று இந்திரன் வேண்டினான்.

''இந்திரா! என்னை நிந்தித்து தட்சன் யாகம் செய்தபோது அதில் நீயும் மற்ற வானவர்களும் கலந்து கொண்ட தால் இத்துன்பம் வந்தது. வருந் தாதே. விரைவில் குமரக் கடவுள் தோன்றி சூராதியசுரர்களை அழித்து உங்கள் துயர் தீர்ப்பான்'' என்று கூறி மறைந்தார் எம்பெருமான்.

'சிவபெருமானோ கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து யோகம் செய்துகொண் டிருக்கிறார்—உமாதேவியாரோ இமவான் மகளாய்த் தோன்றித் தவம் செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் இப்படித் தவசியாக இருந்தால் குமரக் கடவுள் எப்படித் தோன்றுவார்? குமரக் கட வுள் அவதரித்தால்தானே நம் குறை நீங்கும்?' என்று எண்ணிய இந்திரன் மனோவதி என்ற மாநகரை அடைந் தான். அங்கே வியாழ பகவானின் மனைவியிடம் இந்திராணியை விட்டு விட்டுத் தேவர்களுடன் பிரம்மலோகம் சென்றான். குமரக் கடவுள் தோன்று வார் என்று பரமேசுவரர் அருளியதைப் பிரமனுக்கு உரைத்தான்.

''இந்திரா! நானும் திருமாலும் தேடிக் காண முடியாத கண்ணுதற் பெருமான் வெள்ளியங்கிரியில் சனகாதி முனிவர் நால்வருக்கும் யோக முத்திரை யைக் காட்டி வீற்றிருப்பது நம் துன்பத் தைப் போக்கவே யாகும். மகனுக்கு ஒரு பெரிய கோடைக் கட்டி வந்த காலத் துத் தாய் தந்தையர் அதனை நசுக்க மனம் கொள்ளாமல் பிறரைக் கொண்டு மகனைத் துன்புறுத்திப் பிணியைப் போக்குவர். மகன் மீதுள்ள கருணை யினால்தான் அப்படிச் செய்கிறார்களே யன்றிக் கோபத்தால் அல்ல. நமக்குத் தாயும் தந்தையுமாகிய எம்பெருமான், அகந்தை மிகுந்து போன நம் தீவினைகளை நீக்கவே சூரபத்மாசுரன் முதலியோ

◆◆◆◆◆◆◆ குட்டிக் கதை ◆◆◆◆◆◆◆

மகா பண்டித ராகுல் சாங்கிருத்யாயன் என்பவர் இந்தி இலக்கியத்திலே புகழ் பெற்றவர். எத்தனையோ நூல்கள் இயற்றிப் பாரதத்தின் பெருமைக்குப் புகழ் சேர்த்தவர். ஒரு சமயம் அவரது மனைவியின் கடிகாரம் ஒன்று காணாமற் போய்விட்டது. எத்தனை தேடியும் கிடைக்கவில்லை; திருட்டுப் போய் விட்டது. புதுக் கடிகாரம் இப்படிக் காணா மற்போய்விட்டதே என்று எண்ணிய அவரது மனைவி இடிந்து உட்கார்ந்து விட்டாள். ஒரே துக்கமாகி விட்டாள். ஒரு பொருள் காணாமற் போய் விட்டால் பெண்கள் படும் துயரத்தைப் போல் ஆண்கள் படுவதில்லை. இதைக் காண ராகுல்ஜிக்குப் பொறுக்க முடியவில்லை. ''ஆமாம், உன் கடிகாரம் என்ன விலை?'' என்று கேட்டார்.

''ஏன்? எண்பது ரூபாய்.''

''ஒரு பொருளை வாங்கி அதைத் திரும்ப வும் விற்கப் போனால் அது என்ன விலை போகும், தெரியுமா?''

''பாதி விலை போனால் பெரிது.''

''உன் கடிகாரமும் பாதி விலைதானே போகும்? அப்படி இருக்கும்போது நீமட்டும் முழுசாக இப்படி உருகலாமா? உன் துக்கத் தைப் பாதியாக்கிக் கொண்டு துக்கப்படு. நான் ஆட்சேபிக்கவில்லை. இப்படி முழுத் துக்கப்பட்டால் அப்புறம் எனக்குப் பொல் லாத கோபம் வரும்!'' என்றார் ராகுல்ஜி.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நிரபராதியும் குற்றவாளியும்

ஜெர்மன் பேரரசர் பிரடரிக் வில்லியம் ஒருநாள் போஸ்டாம் நகரிலிருந்த சிறைச்சாலைகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். கைதிகளெல்லாம் அவரிடம் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் தாங்களெல்லாரும் நிரபராதிகளென்றும் கெஞ்சினர். ஆனால் ஒரே ஒருவன் மட்டும் பேசாமலிருந்தான். அரசர் ''ஏனப்பா, நீ நிரபராதி இல்லையா?'' என்று அவனைக் கேட்டார். ''இல்லை. நான் புரிந்த குற்றத்திற்குத்தான் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான் அவன். உடனே அரசர் ''இந்த அயோக்கியனை வெளியே விரட்டி அடியுங்கள். இவன் இருந்தால் இங்கிருக்கும் நல்லவர்களைக் கெடுத்து விடுவான்!'' என்று ஆணையிட்டார் சிறை அதிகாரிக்கு.

ரால் இக்கொடுமைகளை இழைக்கிறார். அது தெரியாதது போல் மோன நிலையில் இருக்கிறார்'' என்று பிரமன் கூறினார்.

பெற்றிடுங் குரவரானோர்
பிள்ளைகள் தம்பால் நோயோன்
றுற்றிடில் பிறரைக் கொண்டும்
உறுதுயர் செய்துதீர்ப்பார்
மற்றவர் தம்பால் அன்போ
வன்கணோ அதுபோல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான்
பரமனும் இவைகள் செய்தான்

குமரக் கடவுளின் பிறப்புக்கு வழி காணாமல், தேவர்கள் வைகுந்தம் சென்று திருமாலைக் கண்டனர். ''சிவ பெருமானின் யோக நிலை கலைந்து பார்வதி தேவியை அவர் மணந்து கொண்டால்தான் தேவர்கள் துயர் நீங்கத் தனிப் பெருந் தெய்வமாம் சுப்பிரமணியப் பெருமான் அவதாரம் செய்வார். பிரம்மனே! நீ உடனே மன் மதனை அழைத்துச் சிவபெருமானிடம் அனுப்பி அவர் மனத்தில் மலைமகள் பால் மயல் உண்டாக்கச் செய்'' என்று பிரம்மனைப் பணித்தார் திருமால்.

மனோவதி நகருக்கு வந்து பதும பீடத்து மலர்த் தவிசின் மீது வீற் றிருந்த பிரமன் தனது தம்பி மன்மதனை வரவழைத்தான்.

மன்மதன் என்றால் மனத்தினின்று தோன்றியவன் என்பது பொருள். திருமால் மனத்தினின்று தோன்றியவன் மன்மதன். ஆசை தோன்றுமிடம் மனம் தானே?

''தம்பி! தேவர்கள் துயர் தீர நீ போய்ச் சிவபெருமான் மீது பாணம் போட்டுப் பார்வதி அம்மையாரை அவர் மணந்து கொள்ளும்படி வ்
தாபம் உண்டாக்குவாய்'' என்று பிர
உத்தரவிட்டார்.

மன்மதன் பதறிப் போனான்.
பெருமானின் மோன நிலையை அக
வேண்டும் என்ற சொல்லே மன்மதன
உள்ளத்தைச் சுட்டு விட்டது.

''அண்ணலே! எவ்வளவு கெ
யோரானாலும் தம்மிடம் வந்துவ
டால் உய்யும் வழியைச் சொல்லுவ
பெரியோர்க்கு அழகு. ஆனால் அறிவ
சிறந்த தங்களை நாடி வந்த என்னிட
தங்களுக்குச் சிறிதும் கருணை இல்லைய
பங்காளியாகிய என்னைத் திரும்பி வரா
படி அனுப்பிவிட்டு நீங்களே தே
லோகத்தைச் சுகமாக ஆளலாம் என்
நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா
அண்ணா! நான் உலகத்தை மெ
லாம் மயக்குவேன். என்னைப் பெற்
தந்தை நாராயணரையும் பிருந்த
யிடம் நான் மயக்கி யிருக்கிறேன். எ
திலோத்தமையைக் கண்டு விரும்ப
படி உங்களையே மயக்கி யிருக்கிறே
இந்திரனை மயக்கி அகலிகைமீது ஆ
கொள்ளச் செய்தேன். அருணன் பெ
வடிவம் எடுத்தபோது சூரியனை அந்த
பெண்மீது ஆசை கொள்ளச் செய்தேன்
சந்திரனைத் தாரையின்பால் காம
கொள்ளச் செய்து புதன் என்ற புத
வன் தோன்றச் செய்தேன். பல முனிவ
களின் தவ வலிமையை இமைப் பொ
தில் மயக்கி என் வசப்படுத்தினேன்
என் கணைக்குத் தப்பியவர்கள் மூவு
லிலும் யாரும் இல்லைதான். ஆனாலும்..
ஆனாலும் சிவபெருமானை — துறவிகளி
தெய்வமான சிவபெருமானை — என
கணையால் மயக்க முடியாது. ஏ
முடியாது தெரியுமா?

கையும் நகையும்
கதிரார் விழியும்
மெய்யும் தழலாம்
விமலன் தனையான்
எய்யும்படி சென்றிடின்
இவ்வுயிர் கொண்டு
உய்யும் திறமும்
உளதோ உரையாய்

''சிவபெருமான் கையில் நெருப்பு;
சிரித்துப் புரமெரித்த அவரது வாயில்
நெருப்பு; கண்ணிலும் அக்கினி; அவரது
திருமேனி அக்கினி வடிவம். தழலே
உருவான சங்கரனை எதிர்த்து உயிருடன்
திரும்ப முடியாது. அண்ணா, இந்தக்
கரும்பு வில் சிவன் தந்தது; புஷ்ப
பாணம் அவன் தந்தது. நீட்டிய மரத்
திலா கூர் பார்ப்பது? ஆகவே இந்தக்
காரியத்தில் மட்டும் ஏவாதீர்கள்''
என்று பலவாறாகக் கூறினான் மன்மதன்

ன்மதனின் நிலை கண்ட பிரமன் து வருந்தினன். ''தம்பி! நீ ன்னவையெல்லாம் உண்மைதான். பெருமானை வெல்ல யாராலும் யாது. எனினும் அவரது நல்லரு ல் உன் காரியம் இனிது முடியும். இப்போது எம்பெருமானை மயக்கச் ல்வதும் அவன் செயலே. மன்மதா! வர்களின் நன்மைக்காகத்தான் உன் ப் போகச் சொல்கிறேன். நீ போய்ச் பெருமானால் உயிரிழந்தால் அது வருக்காகச் செய்த பெரிய தியாகம் ல்லவா? துன்பத்திலாழ்ந்து கிடப்ப கள் ''உதவி செய்'' என்று வந்தால் வர்களின் துயரைப் போக்காமல் னுயிர் பெரிது என்று எண்ணி நப்பது தருமமாகுமா? விருத்திரா னை வதைக்கும் பொருட்டு, ததீசி னிவர் தம் முதுகெலும்பைத் தந்து பிரிழந்த செய்தியை நீ கேட்ட ல்லையா? பாற்கடலில் வடவாமுகாக் னி போன்று விஷம் வந்தபோது ம்மையெல்லாம் காப்பாற்றுவதற்காக ராயணர் அந்த விஷத்தின் எதிரில் ணப்பொழுது நின்று தமது வெண் மயான திருமேனியைக் கருமை ாக்கிக் கொண்டதை நீ அறிந்ததில் யா? சூரபதுமனால் தேவர்கள் அனை ரும் வருந்திக் கொண்டிருக்கிறோம். த்துயரைப் போக்கக் குமரக் கடவுள் தான்றுவார் என்று சிவபெருமான் றியிருக்கிறார். குமரக் கடவுள் அவ ாரத்துக்காக நீ பஞ்சபாணங்களுடன் வபெருமானிடம் போகத்தான் வேண் ம்'' என்று பிரமன் மீண்டும் மீண்டும் ண்டிக் கூறினார்.

மன்மதன் மீண்டும் மீண்டும் மறுத் ான். பிரமனுக்கு ஆத்திரம் வந்தது. 'மன்மதா! நான் சொன்னபடி செய் ால் உயிர் பிழைப்பாய். செய்கிறாயா, ாபம் தரட்டுமா? உனக்கு எது வேண் டும் சொல்'' என்றார்.

மன்மதன் சிந்தித்தான். பிரமனால் அழிவதைவிடச் சிவபெருமானால் அழிந் தாலே உய்வதற்கு மார்க்கம் உண்டு என்ற முடிவுக்கு வந்தான்.

''நல்லது அண்ணா! போய் வரு கிறேன்...இல்லை...போகிறேன். ஆனால் திரும்பி வரமாட்டேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

மன்மதன் தன் அரண்மனைக்குச் சென் றான். நன்றாக அலங்காரம் செய்து கொண்டான். கரும்பும், அரும்பும், கரும்புமே அவனது ஆயுதங்கள். தாழம் பூ அவனுக்கு உடைவாள். (புஷ்பங்களில் தேன் உண்டு. புஷ்பம் கட்டுகிறவர் களின் கைகளில் அந்தத் தேன் பட்டுப் பட்டு நைப்பு ஏற்படும். அந்த நைப்புத் தன்மையை மாற்றச் சாம்பலைத் தொட் டுக் கொள்வார்கள். தாழம்பூவில் ஒரு விதமான மகரந்தச் சாம்பல் இருக் கிறது. அதனால்தான் புஷ்ப பாணங்களை விடுகிற மன்மதன் அதனை உடை வாளாக வைத்திருக்கிறான்.) இந்த ஆயுதங்கள் அகிலாண்டம் முழுவதையும் அடிமைப்படுத்தக் கூடியவை. அவனுக் குக் குடை சந்திரன்; சமுத்திரம் நல்ல முழவு; தேர் தென்றல். அந்தப் பரிவா ரங்களுடன் புறப்பட்டான் மன்மதன்.

அவன் தேவர்களை மயக்கும்போது புஷ்ப வில்லில் புஷ்பபாணம் விடுப்பான். மனிதர்களை மயக்கும்போது கரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான். அசுரர்களிடம் போகும்போது இரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான்.

மன்மதன் புறப்படுவதை ரதி பார்த் தாள். ''சுவாமி! எங்கே போகி றீர்கள்?'' என்று கேட்டாள்.

''சிவ, சிவ! நீயும் அபசகுனத்தை உண்டாக்குகிறாயா? என் அண்ணாவின் பிடிவாதமான உத்தரவுப்படி சிவபெரு மான்மீது போருக்குப் புறப்படுகிறேன்'' என்று மன்மதன் கூறினான்.

ரதி துணுக்குற்றாள். ''சுவாமி! சிவ பெருமான்மீது போருக்குப் போய்த் திரும்பி வந்தவர் உண்டா? தாங்கள் தனித்துப் போக வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று புறப் பட்டாள் ரதி.

அனலில் விழுவதற்காக விட்டில் சென்றது. அதைக் காண்பதற்காக அன்றிக் காப்பதற்காக விட்டிலின் துணையும் உடன் சென்றது — அனலில் விழுந்த விட்டிலைத் தன் அன்பினால் மீட்டுத் தருவதற்காக. (தொடரும்)

ட்ருமனின் சலிப்பு

ட்ருமன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது வெள்ளை மாளிகையில் விருந்தொன்று நடந்தது. அதில் கலந்துகொண்டவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனால் ட்ருமன் தம் நண்பர்க ளிடம் ''இந்த உத்தியோகமே எனக்குப் பிடிக்கவில்லை'' என்றார். திடீரென்று எல்லோருக்கும் வியப்பு. ''அமெரிக்க ஜனாதிபதி பதவி உலகில் சிறந்த பதவி யாயிற்றே. ஏன் பிடிக்கவில்லை?'' என்று கேட்டார் நண்பரொருவர். ''பின் என்ன, நீங்களே சொல்லுங்கள். இந்த உத்தியோகத்தில் இருந்து என்ன பிர யோசனம்? பதவி உயர்வு பெற்று முன் னேறக்கூட வழியில்லையே!'' என்றார் அந்த அமெரிக்க ஜனாதிபதி.

கத்தோலிக்கப் பெருவிழா

பம்பாய் மாநகரத்தில் நவம்பர் 28ந் தேதி முதல் டிசம்பர் 6ந் தேதி வரை 38வது அகில உலக மஹா பிரஸாத (Thirtyeighth International Eucharistic Congress) மகாநாடு நடைபெறுகிறது. இம்மாதிரி மகாநாடு முதன் முதலாக பிரான்ஸ் தேசத்தில் உள்ள லில் நகரத்தில் 1881ம் ஆண்டில் நடைபெற்றது. அதன் பிறகு உலகில் பல பாகங்களில் கிறிஸ்துவக் கத்தோலிக்க மக்கள் பெருவாரியாக உள்ள நாட்டின் தலை நகரங்களிலோ, அல்லது இதர முக்கிய நகரங்களிலோ தான் இம்மகாநாடுகள் நடைபெற்றன. இவ்வாறு! பாரிஸ், ஜெருசலேம்... ஜெர் தெஸ், ரோமாபுரி, க்விபெக், சிக்காகோ, டப்ளின், சிட்னி, மணிலா முதலிய நகரங்களில் முன் ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன. கடைசி மகாநாடு ஜெர்மனியில் உள்ள மியூனிச் நகரத்தில் நடந்தது. கத்தோலிக்க மக்கள் சிறுபான்மையினராக உள்ள நாட்டில் ஒரே ஒரு முறை தான் இம் மகாநாடு நடைபெற்றது. இது நிகழ்ந்தது லண்டன் மாநகரத்தில் 1908-ம் ஆண்டில்.

இந்தியா முழுவதிலுமுள்ள 450 மிலியன் மக்கள் ஜனத்தொகையில் ஆறுமிலியன் கிறிஸ்தவ கத்தோலிக்கர்களே உள்ள நமது நாட்டில் இம்மகாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவை. இதற்குக் காரணம் காலஞ்சென்ற போப்பாண்டவர் இருபத்து மூன்றுவது ஜான் அவர்களின் ஆரம்ப முயற்சியும் அவர் கூறிய ஆலோசனையுமே. போப்பாண்டவரின் ஆலோசனை என்பது அவர் விடுக்கும் கட்டளைக்குச் சமானம். கிறிஸ்தவர்களல்லாத பிற மக்களின் நலனில் அவர் கொண்டிருந்த அனுதாபமும் அக்கறையும் உலகம் அறிந்ததே. அவரது விருப்பத்துக் கிணங்கப் பாரதத்தில் நடைபெறும் இம் மகாநாட்டில் உலகத்தில் உள்ள எல்லாக் கிறிஸ்துவ நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுகின்றனர். இதர மக நாடுகளைக் காட்டிலும் பம்பாய் மக நாட்டுக்குத் தனிச் சிறப்பளிப்பது உல கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத் தல் வரான போப்பாண்டவர் நேரடியா இங்கே பிரசன்னமாக விருப்பதுதான் இவ்வாறு அவர் நேரடியாகப் பங்கு கொள்வது மஹாப் பிரஸாத மக நாட்டு வரலாற்றில் இதுதான் முத தடவையாகும்.

அகில உலக மகாப்பிரஸாத மக நாடு, அல்லது அதைவிட அடிக்க நடைபெறும் தேசிய மகாப்ரஸா மகாநாடுகள், இவற்றின் நோக்கம் — சமயச் சட ங்குகள் மூலமும், கலா சாரக் கூட்டங்கள் மூல மும் கத்தோலிக்க மக்க ளிடையே கர்த்தரிடப் நன்றி உணர்ச்சியையும் பக்தியையும் பரப்பி வளரச் செய்வதாகும். ''யூகேரிஸ்டு'' என்ற கிரேக்கப் பதத்துக்கு ''நன்றி செலுத்துதல்'' என்றுதான் அர்த்தம். மனித குலத்தை உய்விப்பதற்காகத் தமது புனிதப் புதல்வர் இயேசுநாதரை மக்களிடையே அருளிய அன்புக்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துதல் ஒன்று. புனிதமாக்கப்பட்ட ரொட்டித் துண்டையும் மதுவையும் மஹாப்பிரஸாதமாக உட்கொள்ளுவதன் மூலம் இயேசுநாதரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து, இப்பூமியில் அவர் அவதரித்து ஆற்றிய பணியிலும் தியாகத்திலும் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் அனைவரும் அவருடன் கலக்க வழி வகுத்த இயேசுநாதருக்கு நன்றி செலுத்துதல் மற்றொன்று.



புனிதமாக்கப்பட்ட மஹாப்ரசாதம் வைக்கப்பட்டிருக்கும் ''மான்ஸ்ட்ரன்ஸ்'' என வழங்கும் பொற் பாத்திரம்.

விவிலிய வேதத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் (New Testament) இம்மாதிரி பக்தி செலுத்தும் முறையை இயேசுநாதரே ஏற்படுத்திய விதம் விவரிக்கப்பட்டிருக்கிறது. ரொட்டித் துண்டையும், மதுக் கிண்ணத்தில் உள்ள மதுவையும் அடுத்தடுத்துத் தமது புனித கரங்களில் ஏந்தி அவற்றை அநுக்கிரகித்

பேராசிரியர் எம். ரத்தினசாமி

யுப் பின் அவர் சீடர்களைப் பார்த்துச் சொன்னார்: ''இது என்னுடைய தேகம்'' ''இது என்னுடைய இரத்தம்.'' இவ்வாறு கூறிவிட்டு, தமது சீடர்களை யும் ஒவ்வொருவராக இவ்வாறே சொல் லும்படி பணித்தார். இதன் பின் அவர்களை நோக்கி, ''பாபங்களிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ள விரும்பி னல் நீங்கள் இந்தப் புனித ரொட்டித் துண்டையும், மதுவையும் உட்கொள் ளுங்கள். இவை இரண்டும் என்னுடைய தேகமும் ரத்தமும் ஆகும்'' என்று கட்டளையிட்டு அருளினார்.

இந்த வழிபாட்டு முறையில், எல்லா வற்றுக்கும் மையமாகவும், எல்லா ருடைய கவனத்தையும் ஈர்ப்பதாகவும் அமைந்துள்ளது வட்ட வடிவமான ரொட்டி. புளிக்க வைக்காத கோதுமை மாவால் ரொட்டியாகச் சுடப்பட்டது. இது வெண்மை நிறமுள்ளது. கத்தோ லிக்கர்களுடைய எல்லா தேவாலயங்களி லும் உயர்ந்த பீடத்தில் (வேதிகையில்) 'மான்ஸ்ட்ரன்ஸ்' என்று வழங்கும் பொற் பாத்திரத்தில் இது வைக்கப்பட் டிருக்கும். அல்லது அவ்வப்போது எல் லோருடைய பார்வைக்கும் புலப்படும் வண்ணம் காண்பிக்கப்படும். இப்புனித சடங்கில் மதிப்புக்குரியதென கருதப்படு வதும் இந்தப் புனிதவஸ்துவே. இதைத் தான் ஹோஸ்ட் (host) என்று இவ்வழி பாட்டு முறையில் சொல்லப்படுகிறது. எல்லாக் கத்தோலிக்கத் தேவாலயங் களிலும் இந்தச் சம்பிரதாயம் அநுஷ் கப்படுகிறது. பம்பாயில் நடை றும் மஹாப்பிரஸாத மகாநாட்டி லும், பிரதான சடங்காகிய மஹா பூஜையின் போது பொற் பாத்திரத்தில் இப்புனித ரொட்டி எல்லோரும் பார்க் கும் வண்ணம் வைக்கப்படும். கிறிஸ்துவ சமய கோட்பாடுகளின்படி, இயேசு நாதர் திருவாய் மலர்ந்தருளிய பிர காரம், இச்சடங்கில் இயேசுநாதரே பிரத்யட்சமாக இந்தப் புனித ரொட்டி யில் ஆவிர்பவித்து வீற்றிருப்பதாக எல்லாக் கத்தோலிக்க மக்களும் திடமாக நம்புகிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவ தேவாலயத்திலும் இச்சடங்கின் மைய மாக அமைந்துள்ள இப்புனித வஸ்துக் களிடம் கத்தோலிக்க மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்த பக்தியும், வற்றாத அன்பும் பெருக்கெடுத்தோடுகின்றன. பம்பாய் மகாநாட்டின் சமயச் சடங்குகளிலும் இதே போன்ற பக்தி வெள்ளம் பெருக் கெடுத்து ஓடும்.

மகாநாட்டில் மஹா பூஜைகள், ஆசிகள் கூறுதல், யாத்திரை, ஊர் வலங்கள் முதலிய அங்க உப அங்கங் களாகிய நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் நடை பெறும். ஆனல் மகாநாட்டில் இவை மட்டுமே இருக்கும் என்று எண்ண லாகாது. நிகழ்ச்சி நிரலில் இதர பல கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன. இவற்றில் கிறிஸ்துவ சமயாசாரத் தத்துவங்கள், வரலாறு, இவ்வழிபாட் டின் பக்தி தத்துவம் போன்ற பல அம் சங்கள் ஆராய்ந்து விவாதிக்கப்படும். கத்தோலிக்கர்களல்லாத நாடுகளில், கிறிஸ்துவர்கள்கூட இல்லாத பகுதி களில் வாழும் கத்தோலிக்க மக்களது அரசியல் — சமூக — கலாசாரப் பிரச்னை



கத்தோலிக்க மகாப்ரஸாத (Eucharist) வழிபாட்டு முறைக்கு ஆதாரமாக அமைந்த இயேசுநாதரின் புனித விருந்து (Lord's supper). இயேசுநாதரின் இரு பக்கங்களிலும் அவரது பன்னிரண்டு சீடர்களும் அமர்ந்திருக்கின்றனர்.

களும் பல கூட்டங்களி லும் விவாதங்களிலும் ஆராய்ந்து பரிசீலிக்கப் படும்.

பட்டினியினல்வாடிய மக்களுக்கு உணவு அளித்தும், கண்ணிழந் தவர்களுக்குப் பார்வை அருளியும், செவிடர்க ளுக்குச் செவிப் புலன் அளித்தும், பிணியால் வருந்திய வர்களுக்குப் பிணி தீர்த்தும் தமது வாழ்நாள் முழுவதை யும் மக்களுக்கு நன்மை செய்தே ஜீவியத்தைக் கழித்த ஒரு புனித ஆத்மா — இயேசுநாத ரின் - மீதே கத்தோ லிக்க மக்களின் பக்தி முழுவதும் ஒருமைப்பட் டிருப்பதால், பம்பாய் மகாநாட்டிலும், நமது மக்களை வாட்டும் சமூக, பொருளாதாரப் பிரச் னைகளும், முக்கியமாக முன்னேற்றம் அடை யாத நாட்டு மக்கள் வாழ்க்கைப் பிரச்னை களும் விவாதிக்கப் படும். இவ்வகையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாப னத்தைச் சேர்ந்த உணவு, விவசாய ஸ்தா பனம் (F.A.O.) பின்தங்கிய நாடுகளின் உணவுப் பிரச்னையை விவாதிக்க இந்தச் சமயத்திலேயே ஏற்பாடு செய்திருப்ப தைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும்.


மயிலாப்பூர் கிறிஸ்தவ தேவாலயத் திலுள்ள மேரி மாதாவின் சிலை.

இந்தியாவில் தற்போது காணப்படும் உணவு நெருக்கடியில் அகில உலக ஸ்தாபனத்தின் இப்பணி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது சொல்லாமலே நன்கு விளங்கும்.

நம் இந்தியாவில், பம்பாய் நகரத் தில் முதன் முதலாக நடைபெறும் இந் தக் கத்தோலிக்க மகாநாட்டு நிகழ்ச்சி களில் கலாசார அம்சங்கள் பலவும் இடம் பெற்றிருக்கின்றன. நடனங்கள், நாட்டிய நாடகங்கள், இசை அரங் குகள், இந்தியாவில் கலைச் செல்வங் களின் பொருட் காட்சிகள் ஆகியவை யெல்லாம் நடைபெறுகின்றன. இந்தக் கலாசார நிகழ்ச்சிகள் நடத்துவதன் நோக்கம் வெளிநாடுகளிலிருந்து இந்தி யாவுக்கு வந்துள்ள பெருமக்களுக்கு, பாரத கலாசாரத்தின் மேன்மைகளை யும், அவற்றில் கத்தோ லிக்கர்களுடைய ப எத்தகையது என்பை யும் விளக்கிக் காட் வதே ஆகும்.

கிறிஸ்துவ ரல்லா கத்தோலிக்க ரல்ல இந்திய மக்களு பம்பாய் மகாநாட்டு சமயாசார சட களும், நிகழ்ச்சிகளு அமானுஷ்யமா தொரு சக்தியை நே காண்பது போல் உணர்ச்சியைத்தோற் விக்கும். ஹிந்துக்க மலிந்துள்ள பாரத துக்கு, பிற மதங்களி பால் சகிப்புத்தன்ை யும் அனுதாபமும் ச பிரதாயமாகவே உ ளது. அவர்களுக் பம்பாய் மகாநாட் நிகழ்ச்சிகள் புரிந் கொள்ள முடியாதன யாகவோ, புதிய வாகவோ, விகாரம கவோ தோன்று ஆண்டவனிடம் மனி னுக்குள்ள பக்தியு நம்பிக்கையும் எவ் வளவு ஆழ்ந்தது எ பதை வெளிப்பன யாக உலகினருக்கு காட்டவே இம் மகாநாடு நடை பெறுகிறது. லோகாயதக் கொள்ை களும் கருத்துக்களும் வேகமாக பரவிவரும் இக்காலத்தில் இவற்றை தீரத்துடனும், துணிவுடனும் எதிர்த் நிற்க இம்மகாநாடு உதவும்.

இங்கே காணும் பக்தியும் ஆடம்ப மும் இந்திய சம்பிரதாயங்களுக்கு ஒத் வகையில் இருப்பதாகவே தோன்றுப் சமயப் பற்று கொண்ட இந்தியா, தன; தெய்வ வழிபாட்டையும், தெய்வ பக் யையும் ஆடம்பரமான முறையி வெளிக் காண்பிப்பதில் லஜ்ஜைப்ப வதே இல்லை. பம்பாய் மகாநாடு இம்மாதிரி பக்தியின் பெருக்கை உ லினர் நன்கு கண்டு தெரிந்து கொ ளும் வண்ணம் அமைந்துள்ளது.

மனிதனின் தெய்வ நம்பிக்கைக் அகில உலக அடிப்படையில் அமைந் அரும் பெரும் பகிரங்க அத்தாட்சி பம்பாய் நகரில் நடைபெறும் கத்தோ லிக்கப் பெருவிழா.

(தமிழாக்கம்: எம். எஸ். சிவஸ்வாமி)



எங்கள் சிந்தால் சோப்பு வாங்குவோர்களுக்கு ஒரு விசேஷ சலுகை! சோப்பின் உறையில் அடங்கியுள்ள சலுகை கூப்பன் உங்களுக்கு ஒவ்வொரு சிந்தால் டால்கம் பவுடர் டின்னின் விலையில் 30 பைசா சலுகை அளிக்கும்.

கயல்விழி

அகிலன்

இருபத்தேழாம் அத்தியாயம்

சித்திரை நிலவு

அமைதி பொங்கச் சலசலத்தோடும் ஆற்றின் போக்கை ஒட்டி ஒரு வண்ணப் படகு மிதந்து கொண்டிருந்தது. அதைத் தன் போக்கில் போக விட்டு மெய்ம்மறந்து இயற்கையழகில் ஒன்றியிருந்தான் பைந்தமிழ்க் குமரன். கயல்விழி அவன் கழுத்தில் அணிவித்த மலர் மாலையிலிருந்து சுழன்ற நறுமணம் அந்தப் படகு முழுவதிலும் வட்டமிட்டது. கயல்விழியும் அப்போது இறங்கித்தான் போயிருந்தாள்.

யோகத்தின் எல்லையிலும் மௌனந்தான்; இன்பத்தின் எல்லையிலும் மௌனந்தான். அங்கும் அப்படியோர் எல்லையற்ற இன்பத்தின் மௌனம் நிலவிக் கொண்டிருந்தது.

அந்த மௌனத்தினூடே இழையோடும் நுண்ணிய மெல்லிசையை ஆற்று நீர் எழுப்பிக் கொண்டிருந்தது. தொலைதூரத்து யாழ் ஒலியின் நாதம் போன்ற ஒரு மௌன கீதம்....

புலன் பெற்ற இன்பங்கள் அனைத்தையும் முதன் முறையாக அன்றுதான் பைந்தமிழ்க் குமரன் உணரத் தொடங்கினான் போலும்! கண்களை அகலத் திறந்து கொண்டு ஆற்றங்கரையின் இரு புறங்களையும் பார்த்தான். சித்திரை நிலவில் அது ஓர் அற்புதமான உலகம் என்பது தெரிந்தது. வானத்திலே வண்ணப் படகாக மிதந்த முழுமதிச் செல்வத்தையும், தன்னுடைய வண்ணப் படகையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, ''கயல்விழி! கயல்விழி! அதோ அங்கு பார்!'' என்று அவளுக்கு வானத்தைச் சுட்டிக் காட்டினான்.

கயல்விழி ஆவலோடு விழிகளைத் திருப்பினாள்.

''நம்முடைய வண்ணப் படகின் பிரதிபிம்பந்தான் அந்த முழு ,நிலவு. கூர்ந்து பார்த்தால் நம்முடைய உருவங்களைக்கூட நீ அங்கே காணலாம். நான் அமர்ந்திருக்க, நீ அருகில் துவண்டு கிடக்கும் அதே தோற்றம் நில தெரிகிறதல்லவா? நாம் ஆற்றில் இரோம்; அது வானத்தில் மிதக்கி அடடா, எவ்வளவு அழகு!''

கலீரென்று சிரித்து விட்டாள் விழி. அவளுடைய நகைப்பின் ணம் தெரியாமல் அவன் விழித்தான்.

''நான் இங்கு வந்து இத் நாட்களுக்குப் பிறகு இன்றுதா கொடுங்குன்றத்தின் இளங்கவிஞ காணுகின்றேன். இயற்கையின் அ கூடத் தங்கள் கண்களுக்குத் தோ கின்றதே!''

பைந்தமிழ்க் குமரனுடைய உள் தில் து மலர்க் கணையாகப் பாய் வருத்தியது. திடீரென்று உறக்க திருந்து விழித்துக் கொண்ட உண அவனை ஆட்கொண்டது. 'ஆம கொள்ளை கொள்ளையாக இயற் யின் எழிலெல்லாம் ஒன்று திர கிடந்த இந்த இடத்தின் அருமை நான் ஏன் இதுவரை உணரவில் வானுற ஓங்கி வளர்ந்த இத்த மரக் கூட்டங்களையும், வண்ண வண் மான தோற்றங்களுடன் சிறகடித் பறக்கும் புள்ளினங்களையும், பூத்



ரியும் மலர்க் கூட்டத்தையும்,
ங்கித் தாவும் அருவிகளையும்
ர ஏன் இதுவரை காண மறந்தேன்?
நனே மாதங்களாக எப்படி என்னல்
ந இன்பங்களையெல்லாம் மறந்
க்க முடிந்தது ?'
'கிடைத்தற்கரிய பெருஞ் செல்வ
ன இந்த இன்பத்தை யெல்லாம்
ன் மறந்தே போய் விட்டேன், கயல்
} !'' என்ருன் அவன்.
' இயற்கை அழகை மட்டுந்தான
ங்கள் மறந்திருந்தீர்கள்?'' என்று
ட்டு விட்டு, இப்படிக் கேட்டதற்
க நாணப்படுபவள் போல், தன்
முகத்தை மலர்க் கரங்களுக்குள்
தைத்துக் கொண்டாள் அவள்.
அவள் தொடுத்த இந்த இரண்
ாவது சொற்கணை அவனுடைய இத
ந்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்
து. தன் விழிகளால் அந்தப் பேர்
ிற் செல்வியின் பொன் மேனி
ண்ணத்தை அன்பின் வேட்கை
ாடு பருகினன். 'அழகுச் சுடரால்

தான் மற்ருேர் அழகையும் சுட்டிக்
காட்ட முடியும் ! கண்களுக்குப் புத்
தொளியும், உள்ளுணர்வுக்கு அன்ப
முதமும், ஆவிக்கு எல்லே
யற்ற இன்பத்தையும்
இவள் ஒருத்தியால்தான்
வாரி வழங்க முடியும்!'
''கயல்விழி! இதுவரை
யில் என்னுடைய சிந்தனே,
பேச்சு, செயல் யாவும்
ஒன்றே ஒன்றின் மீதுதான்
குவிந்திருந்தன. விழிகள்,
செவிகள், உடல், செயல்
அனேத்திலுமே என்னு
டைய லட்சியத்தைத்
தவிர வேறெதுவும்
இல்லே. ஒரு வகையில்
லட்சியப் பித்தனுகி விட்
டேன் நான்.''



"தவம் செய்வது என்றால் என்ன என்பதை நான் கண்டுகொண்டேன்" என்று பெருமிதத்தோடு கூறினாள் கயல்விழி. "இந்திர பதவி வேண்டும் என்பதற்காக இப்படித்தான் முன்னோர்கள் புலனடக்கிக் கடுந்தவம் புரிந்திருக்கிறார்கள். விசுவாமித்திரர்கூட இப்படித்தான் தவம் புரிந்தாராம். நீங்கள் இந்திரனைவிட இன்னும் உயர்ந்தவராக வந்தாலும் நான் வியப்படைய மாட்டேன். அவ்வளவு மன வலிமை பெற்றவர் தாங்கள்!"

இந்திரனைப் போன்ற பெரும் பேறு கிடைக்கும் என்று அவள் கூறிய சொற்களை அவன் மதுரைத் திருநகரில் கோயில் கொண்டருளிய அங்கயற்கண்ணியின் வாக்காகவே எடுத்துக் கொண்டான். அந்தக் கணத்திலேயே பாண்டிய நாடு அவன் இதயத்துக்குள் தன்னுரிமை பெற்று விளங்கியது!

"கயல்விழி! இந்திரப் பேறு பெறுவதற்காகக் கடுந் தவம் புரிந்தவர்களைப் பற்றி நீ கூறுகிறாய். அந்தப் பேறு பெறுவதைவிட நம்முடைய லட்சியம் மிகவும் கடுமையானது. சோழ சாம்ராஜ்யத்திடம் நாம் மூந்நூறு ஆண்டுகள் அடிமைப்பட்டு வாழ்வதுதான் உனக்குத் தெரியும். அதற்கும் முன்பே பல்லவர்களிடமும் களப்பிரரிடமும் பாண்டிய நாடு பல நூறு ஆண்டுகள் அடிமைப்பட்டு விட்டது. ஓராயிரம் ஆண்டாக அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாட்டை விடுவிப்பதற்காக நான் உன்னிடம் சபதம் செய்து கொடுத்து விட்டேன். உன்னிடம் வைகைக் கரையில் சபதம் செய்து கொடுத்தபோது நான் எப்படியிருந்தேன் தெரியுமா?"

"குற்றுயிரும் குலை உயிருமாக இருந்தீர்கள். விழுப்புண்கள் பட்டு மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தீர்கள்" என்றபோது கயல்விழியின் குரல் தழுதழுத்தது.

"ஆம்! அந்த நிலையில் இருந்த நான் ஒரு பித்தனைப் போல் உன்னிடம் சபதமிட்டேன். என்னுடைய முதல் வெற்றி அதே கணத்தில் கிடைத்தது. உன்னை மரணத்திலிருந்து காப்பாற்றி விட்டேன். அப்போதே எனது நாட்டையும் மக்களையும் அழிவிலிருந்து காப்பாற்றிவிட முடியும் என்ற எண்ணம் எனக்கு வந்து விட்டது. அந்த எண்ணம் எப்படி வந்தது என்று மட்டும் கேட்காதே! ஒரு வேளை, நீயே அந்த நம்பிக்கையை உனக்குத் தெரியாமல் எனக்குக் கொடுத்திருப்பாய். இவற்றையெல்லாம் நீ நினைத்துப் பார்: என்னுடைய லட்சியத்தின் லட்சியம் நீ! நான் உன்னை மறந்து விட்டேனென்றோ என்னால் உன்னை மறக்க முடியுமென்றோ நீ நினைக்கிறாயா?"

பைந்தமிழ்க் குமரன் மெல்ல கயல்விழியின் கரங்களைப் பற்றித் தன் அருகில் இழுத்துக் கொண்டான். கயல்விழிக்கு அவனுடைய சாதனைகள் ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்கப் பிரமிப்புத்தான் மேலிட்டது.

"ஆயிரம் யானைகளைப் பிடித்துப் போர்ப்பயிற்சி அளிக்கும் வித்தகர் தாங்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இங்கே இந்தக் காட்டுக்குள் மட்டும் இந்த அதிசயம் நடக்கிறது. இன்னும் வேறிடங்களில் எப்படிப்பட்ட சாதனைகளைச் செய்கிறீர்களோ, யார் கண்டார்கள்!"

"விரைவில் நீ காணப் போகிறாய்! அதி விரைவில் வெற்றியைக் காணப் போகிறாய்!" என்றான் பைந்தமிழ்க் குமரன். "எல்லா ஏற்பாடுகளுமே முடிந்து விட்டன. காலத்துக்காகக் காத்திருக்காமல், காலத்தை வெற்றியை நோக்கி விரட்டிக் கொண்டிருக்கிறேன். பிறகுதான் இந்தப் பித்தன் யார் என்பதும் தெரியும்."

"பித்தர்தாம் தாங்கள்!" என்று நகைத்தாள் கயல்விழி. "வெறும் கற்பனைப் பித்தரல்லர். எதைக் கற்பனை செய்கிறீர்களோ அதைச் செயலாகவும் மாற்றி விடுகிறீர்கள். கூத்துப் பாடல் புனைந்ததோடு நிறுத்திவிடுவீர்களென்று நினைத்தேன்,..."

"பாண்டிய நாட்டு மக்களை ஆனந்தக் கூத்தாடச் செய்து நாம் இருவரும் கண்டு மகிழப் போகிறோம்."

படகு உல்லாசமாக மிதக்கத் தொடங்கியது. குளிர் காற்று அப்போதே அவர்கள் மீது ஆனந்தக் கூத்தாடியது. நிலவிலாடிக் களித்த அந்தக் கானாற்று வெளியில் அவர்கள் இருவர் மட்டிலுமே தனித்திருந்தனர். உலகம் தோன்றிய காலத்தில் தோன்றிய தனித் தலைவனும் தனித் தலைவியும் போல் அவர்கள் மெய்ம்மறந்திருந்தனர்.

"கயல்விழி!" என்று அவளைத் தன் இரு கரங்களாலும் வாரி எடுத்து, அவள் செவிகளில் எதையோ உருக்கமாகக் கூறினான் பைந்தமிழ்க் குமரன்.

"இனி என்னால் ஒரு கணமும் இந்தத் தவமாகிய தீயில் வெந்து கொண்டிருக்க முடியாது. நீ எனக்கு மாலை அணிவித்தாயல்லவா? இதே மாலையை நான் உன் கழுத்திலும் அணி

தலைவலியிலிருந்து

நல்ல, நிச்சயமான நிவாரணம்



அனஸின் இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம் அது ஒரு டாக்டரின் குறிப்பைப்போன்று மருந்துகளின் சேர்க்கையாகும்—துரிதமாகவும் நிவாரணமளிக்கிறது.

- வலியிலிருந்து துரித நிவாரணம் அளிப்பதற்கென அனஸினில் ஒரு பிரத்தியேகமான முறையில் பொருள்கள் சேர்க்கப் பட்டுள்ளன.
- அனஸின் சாதாரணமாகத் தலைவலிக்குக் காரணமான நரம்புகளின் படபடப்பைப் போக்குகிறது.
- அனஸின் ஜலதோஷத்திலும் இன்ப்ளுவென்ஸாவிலும் ஏற்படும் ஜுரத்தைத் தணிக்க உதவுகிறது.
- அனஸின் உபயோகிப்பதால் வலியுடன் அடிக்கடி தோன்றும் சோர்வு நீங்கிவிடுகிறது.

Registered Users: GEOFFREY MANNERS & CO: LTD.

அனஸின்

சிறந்தது ஏனெனில் அது

4 வழிகளில்

வேலை செய்கிறது

2 வில்லைகளுக்கு 13 பைசேதான்

க்கப் போகிறேன். நம்முடைய திருமணமும் இப்போதே நடைபெற வேண்டும். இன்று சித்திரா பௌர்ணமி. நெருப்பு நம் உள்ளத்தின் சாட்சியாகக் கொழுந்து விட்டெரிகிறது. நீரும் நிலமும், வானும் காற்றும் நமக்கு வாழ்த்துக்கள் கூறுகின்றன.... கயல்விழி! கயல்விழி!''

மெல்லக் கயல்விழி அவன் பிடியிலிருந்து நழுவினாள். ''வேண்டாம்! தயைசெய்து இப்போது வேண்டாம்!'' என்று அவன் பாதங்களில் வீழ்ந்து பற்றிக் கொண்டாள். ''நம் இலட்சியம் இன்னும் நிறைவேறவில்லை; இப்போது திருமணம் வேண்டாம்'' என்று மன்றாடினாள் அவள்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

படகின் துடுப்பானாள்

அவர்களுடைய சின்னஞ்சிறு திட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்துக் கொண்டு சென்றது அந்த வண்ணப் படகு. ஆற்றின் ஓட்டத்துக்கெதிராகப் படகைச் செலுத்த வேண்டியிருந்ததால் துடுப்பு வலிக்கத் தொடங்கினான் பைந்தமிழ்க் குமரன். கயல்விழியும் அவன் அருகில் வந்து துடுப்பைப் பற்றினாள்.

''வேண்டாம்!'' என்று உற்சாகமிழந்த குரலில் கூறினான் அவன். அவனுக்குக் கயல்விழியிடம் கோபம் வந்து விட்டது. அவளிடம் சினந்துகொள்ளவும் அவனால் முடியவில்லை. பாதங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வடிப்பவளிடம் எப்படிச் சினந்து கொள்ள முடியும்? என்றாலும் அவனுக்குப் பிணக்கம் தீரவில்லை.

கயல்விழி மெல்ல அவன் விழிகளைப் பார்த்து விட்டுப் புன்னகை பூத்தாள். ''தங்களை மிகப் பெரிய புலவர் என்றும் வீர மறவர் என்றும் நினைத்தேன். தாங்கள் சின்னஞ் சிறு குழந்தை; பிடிவாதம் நிறைந்த குழந்தை!''

''சித்திரா பௌர்ணமியைப் பற்றியோ, ஓடத்தில் சுற்றி வரவேண்டும் என்பது பற்றியோ நானாக ஒன்றும் உன்னிடம் கூறவில்லை. இந்த மலர் மாலையைத் தொடுத்து நீ என் கழுத்தில் அணிவித்து விட்டாய். அது கொடுக்கும் துன்பம் உனக்குத் தெரியுமா?''

கயல்விழி அவனிடம் ஆறுதல் கூறினாள். தன்னுடைய தவறுதலையும் வெளியிட்டாள். ''எனக்குக் கொடுங்குன்றத்தின் நினைவு வந்து விட்டது. நீங்கள் இங்கே எனக்கு அருகிலிருந்தும் தொலைதூரத்துக்கு விலகிச் செல்வது போன்ற ஓர் அச்சம் ஏற்பட்டது. அதனால்தான் சிறு பொழுதை இப்படி மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்று நினைத்தேன். மேலும் இது இளவேனிற் காலம். இப்படி ஓடத்தில் நாம் ஒன்றாகச் சுற்றி வருவது எவ்வளவு குதூகலமாக இருக்கிறது!''

துடுப்பை அவனோடு பற்றிப் படகை விரைவாய்ச் செலுத்தினாள் கயல்விழி. நீரைக் கிழித்துக் கொண்டு சென்ற அதன் வேகத்தில் ஒரு வேடிக்கையிருந்தது.

''என் தலைவர் வள்ளுவர் கூறியுள்ள குறள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது'' என்றான் குமரன்.

''**'பிணிக்கு மருந்து பிறமன், அணியிழைதன் நோய்க்குத் தானே மருந்து'** வேறு பிணிகளுக்கு மருந்து உண்டு. கயல்விழியினால் உனக்கு நோய் வருமானால், அதை அவளே தீர்க்க வேண்டும் என்கிறார் அவர். திடசித்தத்துடன் இருந்த எனக்கு......''

''வள்ளுவரை இப்போது துணைக்கு அழைக்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டு, ''அவரே தாம் மற்றொரு குறளும் பாடியிருக்கிறார்'' என்றாள். ''**'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்; மற்றல்லார் அவம் செய்வார் ஆசையுள்பட்டு'** என்ற குறளைத்தான் இப்போது நீங்கள் உறுதியோடு கடைப்பிடிக்க வேண்டும். லட்சியத்தின் வெற்றிக்காக உழைக்கும்போது, இடையில் சலனத்துக்கு இடமளிக்கலாகாது. விசுவாமித்திரரின் தவத்தைக் கலைத்த மோகினியாக நான் இருக்க விரும்பவில்லை. தங்கள் தவத்தின் வெற்றிக்காக நானும் தவக் கோலம் பூணப் போகிறேன்!'' என்றும் கூறினாள்.

பைந்தமிழ்க் குமரனுக்கு அப்போது மெய்சிலிர்த்தது. புலன்களைக் கடந்த ஏதோ ஒரு பேரின்பப் பெரு வெள்ளத்தில் அவர்கள் ஒன்றாக மிதப்பது போன்ற ஓர் உணர்வைக் கொடுத்து விட்டாள் கயல்விழி. மீண்டும் அவர்களிடையே மௌனம் நிலவியது.

''போர் நடத்தி வெற்றி பெற்ற பிறகு நாம் மீண்டும் இங்கு வர முடியுமா?'' என்று கேட்டாள் கயல்விழி.

''முதலில் திருக்கொடுங்குன்றத்துக்குச் சென்று மங்கையொரு பாகரின் முன்பாக இந்த மங்கையின் கரம் பற்ற



''என்னய்யா எழுதறே!''
''அரிசி ஸ்டாக் இல்லே என்று.''
''பூ! அது தெரிந்த விஷயம்தானே? அதைப் போய்ப் பெரிசா அச்சடித்த மாதிரி எழுதுவானேன்!''

வேண்டும். அடுத்தாற்போல் பற்றிய கரத்தை விடாமல் நேரே அவளை இந்த அரண்யக் குடிலுக்கு அழைத்துக் கொண்டு வர வேண்டும். இது வரையில் நடத்திய போராட்டங்களின் களைப்புத் தீரக் களிப்போடு நாம் வாழ வேண்டும். அப்போது இன்பத்துப் பாலைத் தவிர வேறு எதையுமே எனக்கு நினைவூட்டக் கூடாதென்று கயல்விழிக்கு நான் கட்டளையிடுவேன்!''

''பிரிவுத் துன்பத்தைப் பற்றியும் அதில் உங்கள் தலைவர் பாடியிருக்கிறாரே?'' என்று கேட்டாள் கயல்விழி. விளையாட்டாகத்தான் கேட்டாள்.

துணுக்குற்றான் பைந்தமிழ்க்குமரன். ஏனோ அவன் உள்ளம் இந்தச் சிறு சொல் தாங்காமல் நடுங்கியது.

''கயல்விழி! நான் நம்முடைய லட்சிய வெற்றிக்குச் சிகரமாக இங்கு வாழப் போகும் வாழ்வைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறேன். ஆண்டுக்கு ஒரு முறையாவது இளவேனிற் காலம் தவறாது நாம் இங்கு வந்துவிட வேண்டும். இந்தக் கானகத்தில் நீயும் நானும் ஒன்றாகக் காண வேண்டிய காட்சிகள் எவ்வளவோ இருக்கின்றன. நாம் ஒன்றி வாழும் நாளைப் பற்றி நான் கூறும் போது, நீ பிரிவுத் துன்பத்தைக் குறிப்பிடுகிறாய். இனி பிரிவு என்ற பேச்சே நமக்குள் வேண்டாம்.''

விளையாட்டாகக் குறிப்பிட்ட சிறு சொல்லையும் தாங்காத அவனுடைய அன்பு மனம் அவளுக்கு அந்த அரண்யத்துக் குடிலைக் காட்டிலும் இன்பம் நிறைந்ததாகத் தோன்றியது.

''நான் எதைத் தங்களிடம் கேட்க வேண்டும் என்று விரும்பினேனோ, அதுவே தங்கள் விருப்பமாகவும் இருக்கிறது. நம்முடைய இலைக் குடிலையும், அதைச் சூழ்ந்துள்ள சிறு தீவையும், அதைச் சுற்றி ஓடும் ஆற்றையும், இந்த கானகத்தையும் என்னால் மறக்கவே முடியாது. மறவாது நம் திருமணத்துக்குப் பிறகு தாங்கள் என்னை இங்கு அழைத்து வரவேண்டும்.''

''கட்டாயம் வருவோம்!''

சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, ''ஆமாம், போரின் வெற்றிக்குப் பிறகு, பாண்டியர் தங்களைத் தங்கள் போக்கில் விட்டு விடுவாரா? என்று கேட்டார்.

''வேறு என்ன செய்வார்?''

''ஆற்றல் மிக்க வீரர் என்பதால் தங்களையே படைத் தலைவராக இருக்கும்படி அரசர் கட்டளையிடலாம். பிறகு வேறு நாடுகளின் மீது போர்கள் தொடுக்கும்படி கூறலாம். அரசரின் அன்புக்குப் பாத்திரமாகி விட்டால்,...... பிறகு..... பிறகு....

''பிறகு...?''

''இந்த ஏழைப் பாணர் குலப் பெண்ணை நினைத்துப் பார்க்கவே நேரமில்லாமலும் போகலாம்.''

''பாண்டியரிடம் நான் வேறு எந்த வெகுமதியையும் கோரப் போவதில்லை. அவர் எனக்குப் பெருமையளிக்க விரும்பினாரானால் அவரே முன்னின்று நம் திருமணத்தை நடத்தி வைக்கட்டும். பிறகு இந்த ஏலமலைக் காட்டை ஆட்சி செய்யும் உரிமையை மட்டும் நமக்கு அரசர் அளித்து விடட்டும்!''

''அது மட்டிலும் போதும் நமக்கு.''

''ஏன், அதைவிடப் பெரிய பொறுப்புக் கிடைத்தால்?''

''ஏற்றுக் கொள்ளாதீர்கள்!''

பைந்தமிழ்க் குமரன் நகைத்தான். கயல்விழியின் அச்சத்தை அவனால் உணர முடிந்தது. போராட்ட வாழ்க்கை ஒன்றைத்தான் இது வரையில் அவன் அவளோடு கண்டிருக்கிறான். அமைதியும் இன்பமும் நாடி அவன் இதயம் துடிக்கத் தொடங்கி விட்டது. 'நாளைக்கு நான்தான் சுந்தரபாண்டியன் என்பதை அறிந்தால் எவ்வளவு ஆனந்தப்படுவாள் இவள்!' என்று உளம் பூரித்தான் அவன்.

தோணி கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவரும் அதிலிருந்து குதித்து இறங்கினார்கள். அதைப் பற்றி இழுத்து மூளையில் கட்டினான் அவன்.

''வைகாசி பௌர்ணமிக்கும் இப்படி ஒரு முறை சுற்றி வருவோமா?'' என்று ஆவலோடு கேட்டாள் கயல்விழி.

''அடுத்த பௌர்ணமியின் போது நாம் பெரும்பாலும் திருமூலைப்பாடி நாட்டிலோ அல்லது தொண்டை மண்டலத்திலோ அல்லது மதுரையிலோ இருப்போம்!''

வியப்பும் திகைப்பும் அடைந்தாள் ல்விழி.

''ஆம், எல்லா முன்னேற்பாடு நம் முடிந்து விட்டன. இனி நமக்கு ப்போதைக்கு இந்த ஏலமலைக் காட் ல் வேலையில்லை. வெற்றிக்குப் பிறகு ான் நாம் இங்கு திரும்பி வரப் பாகிறோம்.''

''இப்போது, அடுத்த வேலை?''

''ஓலையை எதிர்பார்த்துக் கொண் ருக்கிறேன். திருமுனைப்பாடி நாட் க்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து ருகில்தான் காஞ்சிப் பெருநகரம் இருக் றது. பிறகு நம்முடைய பணியெல் பாம் மதுரைமாநகரத்தில்தான்.''

கயல்விழி நடுங்கினாள். ''நம் இரு வரையுமே சிறைப் பிடிக்கச் சொல்லிக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் கட்டளையைப் பாண் டியராலும் புறக்கணிக்க முடியாது.''

''கட்டளை பிறப்பித்த அந்த ராஜ ராஜனையே நாம் அப்போது சிறையிடு வோம்'' என்றான் பைந்தமிழ்க் குமரன். கயல்விழி அப்படிக் கூறியவ னின் திண்தோளில் தன் விழி பதித்துப் பொற்சிலையாக அந்த நிலவொளியில் நின்றாள். இதைவிட மற்றோர் அதிசயம் அவளுக்குக் காத்திருந்தது. விரைவில் அவளே காஞ்சியில் பாமினியை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பச் சூழ்நிலை உருவாகி றது என்பதைக் கண்டாளா? (தொடரும்)

எலிக்குக் கொண்டாட்டம்!





பல கட்சிகள் மலிந்து கிடக்கும் இந்நாட்டில் ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட படம்.

கதை: சாதாரணக் கதைதான். மீனவர்கள் மத்தியில் இரண்டு குப்பங்கள். அவர்களுக்கிடையில் பரம்பரைப் பகைமை. ஒரு குப்பத்தைச் சேர்ந்த படித்த இளைஞன் மற்றொரு குப்பத்தின் மக்களையும் ஒன்றுசேர்க்கப் பாடுபட்டு வெற்றி அடைகிறான். அவனுக்குக் கிடைத்த பரிசு ஒருபெண்.

கதாநாயகன்: எம். ஜி. ஆர். படித்த வாலிபனாக நடித்து ஓர் அளவு வெற்றி கண்டிருக்கிறார். அவரைச் சரவணா பிலிம்ஸார் முருகனை மனத்தில் கொண்டு, வேலன், வேடன், விருத்தனாக நடிக்க வைத்திருக்கிறார்கள். விருத்தனாக வரும் இடத்திலும், வளையல்காரனாக வரும் இடத்திலும் மற்றும் சண்டைக் காட்சியிலும் புரட்சி நடிகர் ரசிகர்களுக்கு ஒரு விருந்து.

கதாநாயகி: அபிநய சரஸ்வதி சரோஜாதேவி. கன்னடத்துப் பைங்கிளியைக் கேரளத்து மண்ணில் விளையாட விட்டிருக்கிறார்கள். அவரது சதங்கை ஒலி நடையும் வனப்பும் ஓரளவு நடிப்பும் நன்றாக அமைந்துள்ளன.

காதல் காட்சிகள்: நெகடிவையும், பாஸிடிவையும் ஒட்டிப் பிரிண்ட் எடுப்பது போல் கதாநாயகனையும், கதாநாயகியையும் ஒட்டிக் காதல் காட்சிகளை எடுத்திருக்கிறார்கள். ''தொட்டவுடன் மலரும் பூ தொடாமல் நான் மலர்ந்தேன்'' என்ற பாட்டுக்குக் கைகொட்டிக் கன்னம் தட்டி அவர்கள் ஆடிப்பாடுவது நன்றாக அமைந்துள்ளது. இரண்டு பூக்களை அப்படி வளைத்து முட்ட வைத்திருக்க வேண்டாம்!

வில்லன்: அமெரிக்கப் படங்களில் காணும் 'பேட் மேன்' பாத்திரத்தை நம்பியார் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவருக்குத் தூபம் போட்டு ஒத்துழைக்கிறார் அசோகன்.

நகைச்சுவை: நடமாடும் வலை வீசுவோர் சங்கத்தின் தலைவராக வந்து, தம் பலத்தைக் கிராமபோன் பிளேட் மூலம் ஞாபகப்படுத்திக் கொள்ளும் நாகேஷ் கொஞ்சம் 'ஓவராக'வே நடமாடியுள்ளார்.

குற்றம் குறைகள்: கடலில் வலையில் கட்டி எறியப்பட்ட கதாநாயகன் எப்படித் தப்பினான்? கடல் தேவதை உதவி புரிந்தாளோ என்னவோ? சதங்கை ஒலி ஒரு மீனவப் பெண் வரும்போதுதான் கேட்கிறது. மற்ற மீனவப் பெண்களுக்குச் சதங்கைகள் இல்லையா? நள்ளிரவில் ரகசியமாக வெளி
யேறும் கதாநாயகியின் சதங்கை
ஒலி நமது காதுகளையே துளை
கும்போது அவனுடைய தந்தை
எப்படித்தான் தூங்கினாரோ
வளையல் வியாபாரியைச் சிறை
பிடிப்பதும், அவர் படித்தவரா
தலால் மின்சாரத்துடன் விளை
யாடிக் கதவுக்கு மின்சார
பாய்ச்சுவதும் நல்ல திட்டம்
ஆனால் அந்த அறையில் அவரு
காகக் கை உறைகளும், வய
களும் எப்படி வைக்கப்பட்டன
பின்னால் வரும் கை உறை சம்
காட்சிக்காக முன்கூட்டியே
வேலை செய்துள்ளார்களோ
மனிதன் தன் பலத்தை ஓ
அளவுதான் உபயோகப்படுத்
லாம். பிரம்மாண்டமான உ
திரத்தைத் தாங்குவதும் கட
பாறையை வளைப்பதும் இயற்
கைக்கு மாறுபாடுகள்.

முக்கிய அம்சம்: இப் படத்தின் முக்கிய அம்சம் வர்ணப் படப்பிடிப்பு. அதற்காகவாவது இப் படத்தைப் பார்க்கலாம்.

கேரளத்துத் தென்னஞ் சோலைகளையும், உப்பங் கழிகளையும், சூரிய அஸ்தமனக் காட்சியையும் இயற்கையன்னையின் ஒத்துழைப்பின் பேரில் அழகாகப் படமாக்கியுள்ளார்கள். கதாநாயகன் படகில் தத்தளிக்கும் காட்சி நன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை உடையிலும் பார்க்கக் கவர்ச்சிகரமான வர்ணப்படம் எடுக்கலாம் என்பதைக் காட்டியுள்ளார்கள். படகுப் போட்டி பூஜையைச் சமுத்திரக் கரையில் அழகாக நிறுவப்பட்டிருக்கும் படகுகளுக்குச் செய்து விட்டு, உப்பங்கழியில் நடத்துவது ஏனோ? சமுத்திரத்தில் போட்டி நடத்த முடியாதே! படப் பிடிப்பாளர் பி. எல். ராய்க்கும், உதவியாளர் ஸ்ரீ ராமகிருஷ்ண ராவுக்கும் பாராட்டுகள்.

விமர்சனம் செய்பவர்கள் ஏனோ ஸ்டில் போட்டோகிராபர்களைப் பற்றி எழுதுவதில்லை. ஒரு படத்தின் வெற்றி தோல்விக்குக் காரணமாக அமைவது அதன் விளம்பரம். விளம்பரத்துக்குத்தேவையானது ஸ்டில்ஸ்: முப்பது வருஷமாக ஸ்டில் எடுத்து வரும் ஆர். என். நாகராஜராவ் அவர்களுடைய போட்டோ ஸ்டில்கள் நம்மைக் கொட்டகை வாயிலில் வாருங்களென்று வரவேற்கின்றன.

என். ராமகிருஷ்ணா

மாயூரம்

'பெண்களைப் பற்றிப் பேசுவோம்' என்று ஒரு மேல்நாட்டு ஹாஸ்யப் படம். ரோம் சகோதரத்து இளைஞர்களைப் பரிகசிக்கக் கூடிய வகையில் உள்ளது அது. நடிப்பில் புலியான விட்டோரியா காஸ்மான் இப்படத்தில் ரோம் சகோதரத்து இளைஞர்களாக ஒன்பது வகை வேடங்களில் திறம்பட நடிக்கிறார். பலதரப்பட்ட பெண்களைச் சந்திக்கும் அவர் பொறுப்பற்ற முட்டாளாகவும், சும்மாளமிடும் குடிகாரனாகவும், பொறுமையற்ற உல்லாச புருஷனாகவும் வந்து நவரசங்களையும் அள்ளித் தெளிக்கிறார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது ஸ்ரீ விஜயலட்சுமி பிக்சர்ஸாரின் 'நவராத்திரி' கதை, மேற்கண்ட படத்தின் திரைக் கதையை ஓரளவு ஒத்திருக்கிறது என்றுதான் சொல்ல வருகிறேனே ஒழிய வேறொன்றுமில்லை. அட ஏதோ இருவரின் மனம் ஒரு விஷயத்தில் ஒன்றுபடுவது இல்லையா, என்ன? விடுங்கள்!

இப் படத்தின் கதையைப் பொறுத்த மட்டில் அதில் நம்ப முடியாத, புரிந்து கொள்ள முடியாத சில நிகழ்ச்சிகள் உள்ளன. பெற்றோர்கள் நிச்சயித்த திருமணத்தில் விருப்பமில்லாத பெண் நளினி (சாவித்திரி) அவர்களுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள். கயவர்கள் பலர் நிறைந்த இவ்வுலகில் அவள் ஒன்பது விதமான மனிதர்களைச் சந்தித்து மீளும் போது, தனக்கு ஏற்ற கணவனைத் தானே தேர்ந்தெடுத்து விடுகிறாள். என்னதான் பெற்றோருடன் மன வேற்றுமை இருந்தாலும், பாரதப் பெண் வீட்டை விட்டு ஓடி 'ஓடிப்போனவள்' என்ற அவச் சொல் அவளைச் சூழ விடலாமா?

ஒன்றுக்கொன்று குண வேறுபாடுகள் பல கொண்ட ஒன்பது வகையான பாத்திரங்களை ஏற்று நடிக்க எத்துணை திறமையும், சாமர்த்தியமும் வேண்டும் என்பதை நன்கு தெளிவுற எடுத்துக்காட்டுகிறது 'நவராத்திரி.' அற்புதம், பயம், கருணை, கோபம், சாந்தம், அருவருப்பு, சிருங்காரம், வீரம், ஆனந்தம் முதலான நவரசங்களையும் திறம்படக் கையாண்டு வெற்றி வாகை சூடுகிறார் சிவாஜி கணேசன். தங்கள் குரலைச் சமயத்துக்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ள முடியாத சில நடிகர்களால் நடிக்கப்பட்ட இரட்டை வேடங்கள் புஸ்வாணம் போலாகி விட்ட நிலையில், சிவாஜியின் ஒன்பது வகை வேடங்கள் ஒன்றையொன்று மிஞ்சுகின்றன.

அற்புதராஜாக வந்து அவர் அலுக்கிக் குலுக்கி நடக்கும் நடை, ஆஹா! கல்லூரி மாணவர்களின் ஏகபோக சொத்தாகிவிட்டதே! 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்னும்படி சாது வேடம் போடுகிறார். குஷ்டரோகியாக வந்து சில இடங்களில் கண் கலங்க வைப்பதுமல்லாமல், வாய் விட்டுப் பரிதாபப்படவும் வைத்து விடுகிறாரே!

சிவாஜிக்குத் தாம் சற்றும் சோடையல்ல என்று நிரூபிக்கிறார் சாவித்திரி. பைத்தியங்களிடம் சிக்கி அவைகளிடமிருந்து மீளத் தானே பைத்தியமாக நடிக்கும் காட்சியும், ஓரிடத்தில் சிவாஜி பாணியிலேயே பேசி அவரையே அயர வைப்பதும், நளினமுடன் பாராட்டத் தகுந்த முறையில் உள்ளன. டாக்டரிடம் சில நிமிடங்கள் ஆங்கிலத்தில் பேசி அவரை மட்டும் திக்குமுக்காட வைக்கவில்லை, தியேட்டரில் உள்ள சிலரையும்தான்!

திரைக் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ள ஏ. பி. நாகராஜன் தம் வேலையை ஓரளவு வெற்றியுடன் முடித்திருக்கிறார். வசனம் அர்த்தபுஷ்டியுடனும், நகைச்சுவை நிரம்பியதாகவும் அமைந்திருக்கிறது. எட்டு சிவாஜி கணேசன்களை ஒருங்கே காட்டுவது 'சபாஷ்' போட வைக்கிறது.

சிவாஜி கணேசன் சாவித்திரி அற்புத நடிப்புக்காக ஒரு முறை, ஏன், பல முறை பார்க்க வேண்டிய படம் 'நவராத்திரி!'

பா. கண்ணன்

மந்தைவெளிப்பாக்கம்


சென்னை — 28



இந்தியாவில் கிறிஸ்தவச் சின்னங்கள்


‘ சரித்திரகன் ’

ஹிந்து, பௌத்த, இஸ்லாமிய சமயப் பண்பாடுகளுக்குச் சம்பந்தப்பட்ட சின்னங்கள் மட்டுமே இந்தியாவின் தேசியப் பரம்பரைச் செல்வங்கள் என்று சாதாரணமாக நினைப்பதுண்டு. ஆனால் இந்தப் பரந்த பரத கண்டத்தில் வெவ்வேறு மூலைகளில் மிகப் புராதனமான, சரித்திரப் புகழ் பெற்ற பல கிறிஸ்தவச் சின்னங்களும் இருக்கின்றன என்பது பலருக்குத் தெரியாது. ஐரோப்பாவில் கிறிஸ்தவ நாடுகளிலுள்ள புராதனச் சின்னங்களுக்குச் சமமான முக்கியத்துவமும் புனிதத் தன்மையும் வாய்ந்த இச் சின்னங்களில் சிலவற்றைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



கிறிஸ்தவ சமய வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ள அக்பர் சக்கரவர்த்தி ஃபடேபூர் சிக்ரியில் எழுப்பிய வெற்றி ஸ்தூபி.

இவற்றில் மிகப் புனிதமான செல்வம் சாது ஃப்ரான்ஸிஸ் ஜேவியரின் திவ்விய உடல். இது நன்கு பாதுகாக்கப்பட்டு மேற்கு இந்தியப் பகுதியில் உள்ள கோவா நகரத்தில் பாம் ஜீஸஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு வந்த பல கிறிஸ்தவப் பாதிரிகளுள் சாது ஃப்ரான்ஸிஸ் ஜேவியர் மிகப் புகழ் பெற்றவர். இந்தியாவில் மதப் பிரசார வேலைகள் முடித்ததும் தூரக் கிழக்குப் பிராந்தியங்களுக்கு இவர் சென்று, சீனாவின் தெற்குக் கரை சமீபத்திலுள்ள ஸான்சென் தீவில் தமது நாற்பத்தியாறுவது வயதில் உயிர் நீத்தார். அவருடைய உடல் தாளிக்காத சுண்ணாம்புக் கற்கள் பரப்பப்பட்ட சாதாரண சவப் பெட்டி ஒன்றில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. சுண்ணாம்புக் கற்கள் அவருடைய உடலை ஜீரணித்த பின் எலும்புக்கூட்டைப் பத்திரமாகக் கோவாவுக்கு எடுத்துச் சென்று இறுதியாக அடக்கம் செய்ய வேண்டும் என்பது ஏற்பாடு. இரண்டு வாரங்கள் கழித்து அவருடைய சில சிஷ்யர்கள் சவப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். சுண்ணாம்புக் கற்களால் உடம்புக்கு எந்தவிதச் சேதமும் அடையாமல் வைத்தது வைத்தபடி இருந்தது. சுண்ணாம்பு வாசனை மட்டும் வீசிக்கொண்டிருந்தது. பின்னர் இது மலாக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப் பட்டது. ஆனால் சவக் குழி மிகக் குறுகலாக இருந்ததால் சடலத்தைக் கீழே இறக்கும்போது உடலுக்குச் சிறிது சேதம் ஏற்பட்டது. இந்நிலையில் சுமார் ஐந்து மாதங்கள் அது இருந்தது. இறுதியாக 155 ஆண்டு மார்ச் 15ந்தேதி இது கோவா நகரத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அங்கே போர்ச்சுகீஸிய வைஸிராயின் உத்தரவுப்படி வைத்திய நிபுணர்கள் சடலத்தைப் பரிசோதித்துப் பார்த்து, சடலத்தில் எவ்வித மாறுதலோ, வற்றலோ தென்படவில்லை என்று ஊர்ஜிதம் செய்தனர். சடலம் தேவாலயத்தில் உகந்த மரியாதைகளுடன் வைக்கப்பட்டது.



கோவா நகரத்தில் ''பாம் ஜீஸஸ்'' தேவாலயத்திலுள்ள புனித ஃப்ரான்ஸிஸ் ஜேவியரின் திவ்ய உடல்.

1554ம் ஆண்டு பக்தி மிகுந்த இஸாபெல் டி. கார்ம் (Isabelle de Corm) என்ற போர்ச்சுகீஸிய சீமாட்டி தொழுகைக்கு வந்த ஒரு சமயம் ஜேவியர் சடலத்துக் காலின் சிறு விரலைக் கடித்து எடுத்துச் சென்று புனித சின்னமாகத் தன்னிடம் வைத்துக் கொண்டு விட்டாள். இச்சம்பவத்துக்குப் பின் இப் புனித உடல் கண்ணாடி மூடியிட்ட ஒரு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டு, மூன்று பூட்டுகள் பூட்டிப் பாதுகாக்கப்பட்டது. யாரும் இதைத் தொடக் கூடாது என்று கடுமையான ஏற்பாடும் செய்யப்பட்டது. முன்னர் எடுத்துச் செல்லப்பட்ட கால் விரலின் ஒரு பகுதி 1557ம் ஆண்டில் ஜெஸ்யிட் பாதிரிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப் பட்டது. மற்றொரு பகுதி அந்தப் போர்ச்சுகீஸிய சீமாட்டியின் வாரிசுகளுக்குக் குடும்பச் சொத்தாகப் போய்ச் சேர்ந்தது. 1622ம் ஆண்டு, அதாவது சாது ஜேவியர் மரித்த எழுபது ஆண்டுகளுக்குப் பின்னர் அப்போதைய போப் ஆண்டவர் ஐந்தாவது பால் அவர்களின் ஆணைப்படி, ப்ரான்ஸிஸ் ஜேவியர் பூஜனைக்குரிய தேவதையென மதிக்கப் பெற்று, சடலத்தின் வலது கரத்தைத் துண்டித்து ரோமாபுரிக்குப் புனித சின்னமாக எடுத்துச் செல்லப்பட்டது. 1949ம் ஆண்டு

ரத்தினங்களால் இழைக்கப்பட்டு இவ்வலது கரம், ாமாபுரியிலிருந்து ஜப்பாக்கு பிரான்ஸிஸ் ஜேவி‑து ஜப்பான் யாத்திரைன் 400வது வருஷ விழாக்காக எடுத்துச் செல்லப்ட்டு, பின்பு இந்தியா வழிாகத் திரும்பி ரோம் நகரத்க்குக் கொண்டு செல்லப்ட்டது.

கோவாவில் பாம் ஜீஸஸ் ,லயத்தில் சடலம் வைக்கப்ட்ட நூற்றைம்பது ஆண்டுளுக்குப் பின்னர், பிர்ஜாஸப் ஸைமன்ரவார்ட்ன்ற பிரஞ்சு பாதிரியும் ஸ்பியோனெலா என்றதருருவும் சடலத்தை மறுறை பரிசோதனை செய்துதில் உலர்ந்து போகும்றிகுறிகள் ஏதும் காணப்ட வில்லை என்று ஊர்ஜிதம்செய்தனர். ஆனால் சிலநூண்டுகளுக்குப் பின்னர்மாதா கோவிலுக்கு வந்தயாத்ரிகர்கள் சிலர் சடலத்தில்'கருமை ஏறிக் கொண்டுவற்றல் நிலை தோன்றுகிறது' என்று அபிப்பிராயப்பட்டனர். இந்த மாற்றம் சென்ற 250 ஆண்டுகளாகச் சிறிது சிறிதாக நிகழ்ந்து கொண்டே யிருக்கிறது.

இந்திய போலீஸ் நடவடிக்கையின்போது, இந்தப் புராதனச் சின்னத்தைப் போர்ச்சுகீஸியர் லிஸ்பன் நகரத்துக்கு எடுத்துச் செல்லக்கூடும் என்ற பீதி பரவலாக இருந்தது. ஆனால் சாது ஜேவியர் கோவாவிலேயேதான் நிரந்தரமாக இருக்க விரும்பினார் என்ற ஐதிகம் வேரூன்றி இருந்தமையால், தங்களுக்குத் தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பின்னரும், இச்சின்னத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைப் போர்த்துகீஸியர் கைவிட்டனர். சாது ஜேவியரின் சடலத்துக்கு அமானுஷ்யமான சக்திகள் உண்டு என்று திடமாக நம்புபவர்கள் பலர் இருக்கின்றனர். பல அற்புதங்கள் அதன்மூலம் நிகழ்கின்றன என்றும் நம்பப்படுகின்றன. கோவா நடவடிக்கையில் உயிர்ச்சேதம் குறைவாக இருந்ததற்குக்கூட இப்புனித உடல்தான் காரணம் எனக் கருதுவோரும் உண்டு.




இயேசுநாதரின் சீடர்களில் ஒருவரான புனித தாமஸ்.

வட இந்தியாவிலும் கிறிஸ்துவமத சம்பந்தப்பட்ட சில புராதனச் சின்னங்கள் உள்ளன. ஆக்ராவுக்கு அருகில் உள்ள ஃபடேபூர் சிக்ரியில், மொகலாய சக்கரவர்த்தி அக்பர் தமது கோட்டைச் சுவர்களில் விவிலிய வேதத்திலிருந்து பல காட்சிகளை ஓவியர்களைக் கொண்டு சித்திரித்துள்ளார் என்று கூறப்படுகிறது. இவற்றைப் பல நூற்றாண்டுகளாகக் கவனிக்காது விட்டபடியால் சேதமானது போக எஞ்சியுள்ளதை, இன்றும் அங்கே காணலாம். அக்பரின் ராணிகளில் ஒருத்தியான மிரியமின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பெற்ற மிரியம்-உஜ்ஜமானி என்ற அரண்மனையில் ஒரு சித்திரத்தில் தேவ தூதன் மேரி மாதாவுக்கு இயேசுநாதரின் அவதாரத்தை அறிவிக்கும் காட்சி வரையப்பட்டுள்ளது. தேவதூதனின் இறக்கைகள் மட்டுமே இப்போது அதில் காணப்படுகின்றன.

இச்சித்திரங்களைவிட சாசுவதமானவை பூலன்தர்வாஜாவின் 176 அடி உயரமுள்ள விஜயஸ்தம்பத்தில் பொறிக்கப்பட்டுள்ள பல விவிலிய வாசகங்கள். இவை அக்பருடைய ஆணையால் ஆக்கப்பட்டவை. அவற்றில் ஒரு ாசகம், ''ஈசா—(இயேசு) அவர் மீது சாந்தி நிலவுக—சொல்லுகிறார்: 'இவ்வுலகம் ஒரு பாலம். இப்பாலத்தின் மீது நீ நடந்து செல்; ஆனால் மனை, வீடு ஒன்றும் கட்டாதே. உலகம் நிலைத்திருப்பது ஒரு மணி நேரம்தான். இக்காலத்தைப் பக்தி செலுத்தியே கழி.'' பிற மதவாசகங்களைத் தமது வெற்றிக் கம்பத்தில் எழுத வேண்டுமானால் அந்த முகலாய சக்கரவர்த்தியின் மனப்பான்மை எவ்வளவு விரிந்தது என்பதை நன்கு உணரலாம்.

ஆக்ராவில் அக்பர் காலத்தில் பதினாறுவது நூற்றாண்டில் கட்டப்பட்ட பழைய கத்தோலிக்க மாதாகோவிலில் ஒரு பளிங்குச் சிலை இருக்கிறது. பெண் வடிவம். மேல்நாட்டு முறைப்படி காலில் பாத அணியுடன் கைகள் இரண்டையும் அஞ்சலி செய்யும் அமைப்பு. நின்று கொண்டு தியானத்தில்



சென்னைக்கடுத்த பரங்கிமலை புனித தாமஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள ''ரத்த சிலுவை.''

இருக்கும் பாவம். இது மேரி மாதாவின் சிலை வடிவம் என்று அங்கே கருதப்படுகிறது.


இவற்றைத் தவிர முன்னாள் சமஸ்தான மன்னர்களான உதயபுரி மகாராஜா, ராமபுரி ராஜா இவர்களுடைய சேமிப்புச் செல்வங்களில் விவிலிய வேதத்திலிருந்து வரையப்பட்ட பல அற்புதமான ஓவியங்கள் இருக்கின்றன.



புனித தாமஸ் கழுத்தில் அணிந்த மேரி மாதா ஓவியம்.

கிழக்கிந்தியப் பிராந்தியத்தில்—கல்கத்தாவில் அருகில் உள்ள ஸெராம்பூரின் டேனிஷ் பிரசார ஸ்தலத்தில், காரே (Carey) தொகுத்த பைபிளின் முதல் பதிப்பும், மார்ஷ்மன் எழுதிய நாற்பது மொழி பெயர்ப்புக்களும் இன்றும் இருக்கின்றன. கிறிஸ்துவ சமய சம்பந்தமான பல ஏடுகள் பாலி மொழியிலும், திபேத்திய பாரசீக மொழிகளிலும் உள்ளன. இவ்வேடுகளில் இயேசுநாதரின் வாழ்க்கை வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அக்பர் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி ஜெரோம் ஜேவியர் என்ற பாதிரி இதற்கு உதவி செய்ததாகச் சொல்லப்படுகிறது.

தென்னிந்தியாவில் முக்கியமாகச் சென்னைக்கும் அதற்குத் தெற்கேயும்தான் மிக அதிகமான கிறிஸ்துவக் கோயில்களும் புனித ஸ்தலங்களும் பரவிக் கிடக்கின்றன. இதற்கு ஒரு காரணம் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் கிறிஸ்துவர்கள் இருந்ததுதான். பிற்காலங்களில்கூட "பிராடெஸ்டெண்ட்" கிறிஸ்துவர்களும் இப்பகுதியில் விசேஷ கவனம் செலுத்தினர். சென்னையில் இயேசுநாதரின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான சாது தாமஸின் சின்னங்கள் இருக்கின்றன. கோவாவில் சாது ஜேவியர் எப்படியோ, அப்படித்தான் சென்னையில் சாது தாமஸும்.



மவுண்ட் ரோடிலுள்ள கான்வென்ட்.

ஆனால் தாமஸ் சின்னங்கள் ஜேவியர் சின்னத்தை விடக் காலத்தில் 1500 ஆண்டுகள் முந்தியவை. இச்சின்னங்கள் சென்னையில் சாது தாமஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சாது தாமஸ் கி. பி. 52ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தார். மயிலாப்பூரில் கி. பி. 68ம் ஆண்டில் கொல்லப்பட்டு இறந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருடைய உடல், அவர் மயிலையில் கட்டின சிறு மாதாகோவிலில் அவரது சீடர்களால் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் நான்காம் நூற்றாண்டில், இவ்வுடலின் ஒரு பகுதி மத்திய ஆசியாவில் யூப்ரெடிஸ் நதிக் கரையில் உள்ள எடிஸ்ஸா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மத்திய கால சகாப்தத்தில், பிற மதத்தினர்களால் சேதமாகாமலிருப்பதற்காக அங்கிருந்து அகற்றப்பட்டு இத்தாலி நாட்டு ஏட்ரியாடிக் கடலோரம் உள்ள ஆர்டோனா என்னும் நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.


இயேசு நாதரின் சீடர்களில் "சம்சயாத்மா தாமஸ்" என்று குறிப்பிடப்பட்டவர் இவர்தான். இயேசு புனர் ஜனனம் அடைந்து காட்சி தந்த போது அவருடைய புனித உடலில் ஆணிகள் அறையப்பட்டுப் புண்ணான இடங்களையெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தாராம் சாது தாமஸ்.

அந்தப் புனித விரல்கள் — இயேசுநாதரைத் தொட்ட விரல்கள் அல்லவா? — இப்போதும் ரோமாபுரியின் ஸெயின்ட் ஜான் லாடிரென் தேவாலயத்தின் கர்ப்பக்கிருஹத்தில் பாதுகாத்து வரப்படுகிறது. 1523ம் ஆண்டில், இத்தேவாலயம் பழுதடைந்த போது புனர் நிர்மாணத்துக்காகப் போர்ச்சுகீஸியர் சவக்குழியைத் திறக்க நேரிட்டபோது, கண்டெடுத்தனராம். சவப் பெட்டியில் சில எலும்புத் துண்டுகளும், மர ஈட்டியின் முனையும், ரத்தம் தோய்ந்த மணல் நிரம்பிய மண் பாண்டமும் இருந்தனவாம்.

1683ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த எலும்புத் துண்டுகள்கூட எக்காரணத்தாலோ பின் தலைமுறைகளுக்குக் கிடைக்காமல் நஷ்டமாகி விட்டன. யாராவது தனியார் வசம் ஏதாவது இருக்கிறதா, அல்லது சென்னைச் சுற்றுப்புறத்தில் உள்ள மாதாகோவில்களில் எங்கேயாவது வைக்கப்பட்டிருக்கிறதா என்பதும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. கிடைத்துள்ள எலும்புத் துண்டுகளும், ஈட்டியின் முனையும் சென்னை ஸாந்தோம் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இயேசுநாதரைத் தொட்ட விரல்களின் ஒரு பாகமும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதை 1953ம் ஆண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்த கத்தோலிக்க உயர் குரு டிஸ்ஸராண்ட் இத்தாலியிலிருந்து கொண்டு வந்து கொடுத்தார்.

1788
THE E.I.D.-PARRY GROUP
1964

அந்நியச் செலாவணியும் பாரியும்



அந்நியச் செலாவணி* — நாட்டின் இன்றைய பொருளாதாரத்திற்கு அந்நியச் செலாவணி எப்படி மிகவும் முக்கியமான அம்சமோ, அப்படியே தான் இ.ஐ.டி. பாரி குழுவைச்சேர்ந்த தொழில்களின் வளமிக்க வருங்கால வளர்ச்சிக்கும் இது முக்கியமானது.

உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கவும் இறக்குமதி செய்யப்படும் ரசாயன உரங்களின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும் இ. ஐ. டி. - பாரி ஸ்தாபனங்கள் எப்படி உதவுகின்றன என்பதற்கு இங்கே உற்பத்ியாகும் ரசாயன உரத்தை ஒரு நல்ல உதாரணமாகச் சொல்லலாம். 1963-64ம் ஆண்டில் உள்நாட்டு ரசாயன உர உற்பத்திக்கும் நாட்டின் தேவைக்கு மிடையே உள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க ரசாயன உர இறக்குமதிக்காக ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே ஆண்டில் இ. ஐ. டி. பாரி ஸ்தாபனம் 250,000 டன் ரசாயன உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும். மூன்றாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் இதன் அளவு மேலும் விரிவடைந்து உற்பத்தி அதிகமாகப் பெருகும்.

உரத்தைத் தவிர இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒன்பது இதர கம்பெனிகள் உற்பத்தி செய்யும் பொருள்களாவன—சர்க்கரை, மிட்டாய் வகைகள், பீங்கான் சுகாதாரச் சாமான்கள், அமிலங்கள், ரசாயனப் பொருள்கள், கரியமிலவாயு மற்றும் தொழில்களுக்கும் இதர உபயோகத்துக்கும் தேவையான ஆல்கஹால் ஆகியவை.

இ. ஐ. டி. — பாரி குரூப், மதராஸ்

* மூன்றாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் அந்நியச் செலாவணி தேவை ரூ. 1900 கோடிக்கும் அதிகம்

தேசியப் பாதுகாப்புக்கு உங்கள் பணியைச் செய்யுங்கள்


FDS-P.P-368

இந்தியாவுக்கு நஷ்டமான ஒரு ாதனப் புனிதச் சின்னம் மேரி மாதாவின் ட்டியாணம். சிரியன் கிறிஸ்துவ ஐதிகப் ்ட. இந்த ஒட்டியாணத்தை மேரி மாதாவிட ருந்து சாது தாமஸ் பெற்றாராம். மேரி ன்னை ஸ்வர்க்கம் சென்ற போது இதைத் ாமஸுக்கு அளித்துவிட்டுச் சென்றாராம். தைக் கொண்டு சாது தாமஸ் சென்னையில் ல அற்புதங்களைப் புரிந்தாராம். ஒரு சமயம் யிலாப்பூர் ராஜாவின் அரண்மனையின் கட்டு ான வேலைக்குப் பெரிய மரத் திம்மையைக் காண்டு வர வேண்டியிருந்ததாம். ஸ்தலத் லே பல யானைகளைக் கொணர்ந்து அதை கர்த்த முயன்றபோதும் முடியவில்லையாம். ாது தாமஸ் தம்மிடமிருந்த ஒட்டியா ாத்தை வீசி, அதை வெகு சுலபமாக இழுத் ுச் சென்று அரண்மனையில் சேர்த்தாராம்.

சாது தாமஸின் மரணத்துக்குப் பின் ந்த ஒட்டியாணம் பரங்கிமலை தேவாலயத் ில் வைக்கப் பட்டிருந்தது. பின்னர் 883ம் ுண்டில் இங்கிலாந்தை ஆண்ட ஆல்ஃப் ிரட் மன்னன் தாம் சாது தாமஸுக்குச் ெய்துகொண்ட விரதத்தைப் பூர்த்தி ெய்யச் சென்னைக்கு உயர் அர்ச்சகர் ஸிக்லெம் Siglem) என்பவரை அனுப்பி, அவர் திரும் ிச் சென்றபோது இந்த ஒட்டியாணத்தை ும் எடுத்துச் சென்றாராம். இது இப்போதும் ண்டன் மாநகரில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் ேதவாலயத்தில் வைக்கப் பட்டிருக்கிறது ான்று பாதிரியார் ஹாஸ்டன் (Father Hosten S.J.) கூறுகிறார்.

பரங்கிமலையில் உள்ள மேரி மாதா தேவா லயத்தில் இரண்டு புனிதமான கிறிஸ்தவச் சின்னங்கள் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒன்று தாமஸ் வைத்திருந்த ஓவியம், மற்றொன்று தாமஸின் இரத்தம் கசிந்த சிலுவை. ஓவியத்தில் குழந்தை இயேசுநாதரை மதோனா (மேரி அன்னை) அணைத்துக் கொள்ளும் காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது. இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் மற்றொருவரான ஸ்லூக்காவே இவ்வோவியத்தைத் தீட்டினாராம். இதைச் சாது தாமஸ் தமது கழுத்தில் தொங்கவிட் டுக்கொண்டே எங்கும் செல்வாராம். இத ளால் இதற்குச் சாது தாமஸ் ஓவியம் என்றே பெயர் வந்து விட்டது. படம், ஒரு பலகை யில் வரையப்பட்டுள்ளது. சிவப்பு, நீலம், மஞ்சள் வர்ணங்கள் சிறப்பாகத் தீட்டப் பட்டுள்ளன. இந்தப் படம் மிகவும் புராதன மானது. ''ஆகவே இந்தியாவில் உள்ள எல்லா கிறிஸ்தவச் சின்னங்களைக் காட்டிலும் இது மிக மிகப் புனிதமானது'' என்று பாதிரி யார் ஹாஸ்டன் சொல்லுகிறார்.

சாது தாமஸ் இந்தியாவில் இருந்த ஆண்டு களில் அவர் பிரசாரம் செய்த இடங்களிலெல் லாம் சிலுவைச் சின்னத்தைச் செதுக்கி வைத் தாராம். நமக்குத் தெரிந்தவரை அவர் செதுக் கிய ஏழு சிலுவைகள் இந்தியாவில் இருக் கின்றன. இவற்றில் ஐந்து மலபார் பகுதியில் உள்ளன. சென்னையில் இரண்டு இருக்கின் றன. ஒன்று சாந்தோமுக்கு அருகில் உள்ள சின்ன மலையில் (Little Mount) உள்ளது. மற் றொன்றுதான் ஸெயின்ட் தாமஸ் மௌன்ட்



தரங்கம்பாடி கிறிஸ்தவ ஆலயத்தில் உள்ள புராதன ஜெர்மன் உபதேசக் குறிப்பு

என்ற பரங்கிமலையின் மேரி மாதா தேவால யத்திலுள்ள புகழ் பெற்ற தாமஸ் சிலுவை. ஐதிகப்படி இந்தச் சிலுவையை அவர் தாமே செதுக்கிவைத்ததாகவும் அதன் முன்னாலேயே தான் அவர் கொல்லப்பட்டதாகவும், ஏசு நாதர் செய்தது போலவே அதை அணைத்துக் கொண்டே உயிர் துறந்ததாகவும் சொல்லப் படுகிறது. இந்தத் தேவாலயம் கட்டி முடிக் கப்பட்டதும் 1551ம் ஆண்டில், தாமஸின் சிலுவை இதன் சுவரில் பதித்து வைக்கப்பட் டது. அப்போது இந்தச் சிலுவையிலிருந்து காண்போர் பிரமிக்கும்வண்ணம் சிறிது ரத்தம் கசிந்து கொண்டிருந்ததாம். அது முதல் ஆண்டுதோறும் டிசம்பர் 18ந் தேதி யன்று இச்சிலுவையில் ரத்தத் துளிகள் கசிந்து கொண்டே இருந்ததாம். இப்படி 1704 வரையில் நடைபெற்றது. சிலுவையில் பொறிக்கப்பட்ட வாசகங்கள் வழக்கில் இல்லாத ஸஸ்ஸேனிய பஹ்லவி அல்லது புராதன பாரசீக மொழியில் உள்ளன. 'சிலுவையின் மூலம் தேவதூதன் உலக முழுவதற்கும் மோட்சம் அருளினான்' என்று பொருள்பட வாசகம் அமைந்துள்ளது. சில அறிஞர்கள் சாது தாமஸின் புனித மர ணத்தைப் பற்றி இது குறிப்பிக்கிறது என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

பதினாறுவது நூற்றுண்டின் மத்திய காலத் தைச் சேர்ந்த பல உருவச்சிலைகள் — இவை மேரி மாதா, ஏசுநாதருடையவை — இந்தி யாவின் பல பாகங்களில் காணப்படுகின் றன. இவற்றுள் மயிலாப்பூர் தேவாலயத்தில் உள்ள மேரி மாதா சிலைதான் மிகப் புனித மானதும் அழகானதும். 1543ம் ஆண்டில் இந்தியாவுக்கு இது கொண்டுவரப்பட்டதாம்.

பிராடெஸ்டென்ட் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் சிலைகள், விக்கிரகங்கள், சின் னங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்காத வர்களாகையால் அவர்கள் சம்பந்தப்பட்ட சின்னங்கள் அதிகம் இல்லை. எனினும் தென் னகத்தில் சென்னைக்கு இருநூறுமைல் தெற்கே தரங்கம்பாடியில் ஆதிகால கிறிஸ்தவச் சின் னங்கள் சில உள்ளன.

இந்தியா முழுவதும் சிதறிக் கிடக்கும் இத்தகைய கிறிஸ்தவச் சின்னங்கள் புராதன மானவை மட்டும் அல்ல; இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு இவை அணைத்தும் சான்று கூறுகின்றன.




ராஜ யோகம் -11-
கதை: தம்பு
சித்திரம்: செல்லம்
யோகம் தன் கண்கள் பிதுங்க அந்த உருவத்தைப் பயத்துடன் கவனித்தாள். மேலும் கத்தத் தயாராக.
உஸ்... உஸ்...
யார் நீ?
என்ன, என்ன, என்ன?
ஓஹோ! ராஜாவா?
யோகமா, யோகமா?
ஆமாம்!


யாரோ வருகிறாற் போல் இருக்கிறது.
உன்னை எனக்குத் தெரியாது. நீ யாரோ?
எனக்கு உங்களைத் தெரியாது. நீங்கள் யாரோ?
ஊமை ஜாடையாக அபிநய பாஷையில் பேசுவாரோ?
தனி மாடிக் கட்டடம் — கீழ் ஜன்னல் — மாடி ஜன்னல் — எதிரில் தோட்டம்.
தைரியமாயிருங்கள். வந்துகொண்டிருக்கிறேன்.
உனக்கு என்ன மனக் கோளாறு?
ஆமாம். யாரோ வந்து கொண்டிருக்கிறார்கள்...



ஹரா ஹரா ஹர!
ஹரா ஹரா ஹரா, ஹரா!
நான் ஒரு நாளும் நம்ப மாட்டேன். தாங்கள் மௌனக்கல்யர் அல்ல. என் நாதன் ஒரு நாளும் இந்த உடை...
நான் மாடர்ன் திடீர் இல்லை திடீர் கல்யர்!
எங்கே இங்கே வந்தாய்?
ராஜா! நீ வெளியே வந்தால் அறையைப் பூட்டி
என் அறையைத் தேடிக்கொண்டு வந்தேன்.
டாட்டா, டாட்டா!

இரு சகோதரர்கள்



காட்சி 1

இடம் : மாணவர் ஹாஸ்டலில் ஓர் அறை.

காலம்: ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை நேரம்.

[மாணவன் ஹரியும் அவன் தம்பி ரவியும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

ஹரி: ரவி, அதிகாலையில் எழுந்து படித்தால்தான் படிப்பு வரும் என்று அப்பா எத்தனை தடவை சொல்லி யிருக்கிறார்? ஹாஸ்டலுக்கு வந்தது தூங்குவதற்கா? நான் எழுப்பா விட்டால் நீ எழுந்திருக்க மாட்டாய். அப்படித்தானே?

ரவி: என்ன அண்ணா, இன்றைக்குக் கெடுபிடி பிரமாதமா யிருக்கிறதே! உன்னை நான் எத்தனை தடவை எழுப்பியிருக்கிறேன்? நினைத்துப் பார். என்னவோ இரண்டு மூன்று நாட்களாக நீ என்னை எழுப்பி விட்டதற்குப் பிரமாதப்படுத்திக் கொள்கிறாயே!

ஹரி: ரவி! நீ சுத்த முட்டாள். அப்பாவின் கடிதத்தைப் பார்த்தாயே, என்ன எழுதி யிருக்கிறார், நினைவிருக்கிறதா?

ரவி: நினைவில்லாமலென்ன? 'அண்ணாவை எதிர்த்துப் பேசாதே. அவன் சொல்படி நட' என்று எழுதியிருக்கிறார்.

ஹரி: எழுதி யிருக்கிறாரா? ஆனால் நீ இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

[குரலில் இலேசாகக் கோபம் தொனிக்கிறது.]

ரவி: என்ன செய்து கொண்டிருக்கிறேனா? படுக்கையில் உட்கார்ந்து சோம்பல் முறித்துக் கொண்டிருக்கிறேன்!

ஹரி: முட்டாள்! இப்படித் தான் அண்ணாவுடன் வாதாடுவதா?

ரவி: என்ன அண்ணா இது? நான் உன்னுடன் வாதாடினேனா? நீ கேட்டதற்குப் பதில் சொன்னேன். அண்ணாவின் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது கூடத் தவறா? அன்று ஒரு நாள் நீ ஏதோ கேட்டதற்குப் பதில் சொல்ல வில்லை யென்பதற்காக, 'என்ன அவமரியாதை! உன் வாயில் என்ன கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது?' என்று கேட்டு எரிந்து விழுந்தாய். அதற்காகத்தான் இன்று.....

ஹரி: சரிதான் போடா. ரொம்பக் கெட்டிக்காரன். மா வின் வீட்டிலிருந்தால் சரியாய்ப் படிக்க மாட்டே என்பதற்காகத் தானே அ அப்பாவின் யோசனைப்படி நம் ஹாஸ்டலில் சேர்த்தார்?

ரவி: மாமா வீடு ரொம்ப சௌகரியமா யிருந்தது. இக் கண்ணராவி பிடித்த ஹாஸ்ட என்ன இருக்கிறது? (மு முறுக்கிறான்.)

ஹரி: தெரியும்டா உன் மாமாவின் பெண் கமலா அங் இருக்கிறதனாலே அந்த உனக்கு ரொம்பச் சௌகரிய யிருந்தது. சதா அவளைப் பார்த் இளித்துக்கொண்டு, வம்பளந் பொழுதைக் கழித்துக் கொண் ருந்தாய். இங்கே அது நடக் துடா அப்பனே! படிக்க வேண் டும். அதற்குத்தான் இங்கே இருக்கிறோம். தெரியுமா?

ரவி (பரிகாசமாகச் சிரித்து கொண்டே): அடாடா! இ எனக்குத் தெரியாதே. (ஸீரியஸாகக் குரலை மாற்றிக் கொண்டு) அண்ணா! எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு. நான் மாத்திர தான் மாமா பெண் கமலாவை பார்த்துப் பல்லை இளித்தேனா? நீ அவள் அக்கா விமலாவுடன் அந்தரங்கமாகப் பேசி உருகவி லையா? உங்கள் இருவருடைய காதல் காட்சிகளையும் 'கட் பண்ண'த்தானே மாமா நம் இருவரையும் ஹாஸ்டலில் சேர்த்தார்.

ஹரி: அது சரி. நான்தான் பொல்லாதவன். நீ பரம யோக்கியனாயிற்றே, உன்னையும் ஏன் ஹாஸ்டலில் சேர்த்தார்?

ரவி: உனக்குத் துணையாகத் தான் என்னைச் சேர்த்தார்.

ஹரி: சரி, சரி. நமக்குள் என்னத்துக்குச் சண்டை? நாம் ஹாஸ்டலில் சேர்ந்தும் ஒழுங்காய்ப் படித்துத் தேறவில்லை யென்றால், மாமா 'ஸீரியஸ் ஆக்ஷன்' எடுத்துக் கொண்டு விடுவார். நான் உன்னைவிடப் பெரியவன். பி. எஸ்ஸி. படிக்கிறேன். நீ புகுமுக வகுப்பில் இருக்கிறாய். உனக்குப் புத்தி சொல்ல நான் எல்லாவிதத்திலும் கடமைப் பட்டவன். உன்னைக் கவனித்துக் கொள்ளும்படி அப்பா எனக்கு எழுதியிருக்கிறார்.

ி: கவனிக்குக் கொள்'
ுன்றும் சதா உருட்டு
மிரட்டுவதும்தானு ?

(சிரிக்கிறுன்)

ரி: சரியான வாயாடி நீ.
ரம் பல்லைத் தேய்த்து
ு வா. காப்பி சாப்பிட்டு
ு நான் கொஞ்சம்
ியே போக வேண்டும்.

வி: இதோ நான் ஒரு
டியில் தயாராகி விடு
ன்.

[எழுந்து பல் தேய்க்க ஓடுகிறுன்]

காட்சி 2

ம் : அதே ஹாஸ்டல் அறை.

ம் : நள்ளிரவு.

ஹரி கட்டிலில் படுத்துத் தூங்குகிறுன். சுவர்க் கடிகாரம் 'டங், டங்' என்று பன்னிரண்டு தடவை அடித்ததும் பாதி ராத்திரி நன்றுய்க் களைகட்டுகிறது. மெல்லப் பூனை மாதிரி அடி மேல் அடி வைத்து ஓர் உருவம் உள்ளே நுழைகிறது.]

ஹரி (திடுக்கிட்டெழுந்து
ம்சார விளக்கின் 'ஸ்விச்'
சைப் போட்டு): யார்? ரவியா?

ரவி: ஆமாம், அண்ணு! நீ
ன்னும் தூங்கவில்லையா?


[அவன் குரல் இலேசாக நடுங்குகிறது. ரவியின் முகம் கோபத்தினுல் சிவக்கிறது.]

ஹரி: நீ ஊர் சுற்றி விட்டுப்
ாதி ராத்திரியில் வந்தால்
னக்கு எப்படியடா தூக்கம்
ரும்? எங்கே போயிருந்தாய்,
ரீட்சை சமயத்தில் துளிக்
டக் கவலையோ, அக்க
றயோ இல்லாமல்?

ரவி: கவலைப்பட்டால் பரீட்சையில் தேறிவிட முடியுமா, அண்ணு? அப்படியென்றுல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கலாமே! என்னத்துக்காக இரவும் பகலும் விழுந்து விழுந்து படிக்க வேண்டும்?

ஹரி (கோபத்துடன்): உன் பரிகாசம் இருக்கட்டும். என் கேள்விக்குப் பதில்சொல். எங்கே போயிருந்தாய்?

ரவி: எங்கேயும் போகவில்லை, அண்ணு....உம்.... வெளியே போயிருந்தேன்....!



ஹரி (கோபத்துடன்): நீ வெளியே போயிருந்தாய் என்பது எனக்கு நீ சொல்லாமலே தெரிகிறது. மணி என்ன ஆகிறது பார்.

ரவி: மணியா? மணி பன்னிரண்டாகிறது. இப்பத்தானே கடிகாரத்தில் மணி அடித்தது. நீகூடக் கேட்டிருப்பாயே!

ஹரி: உனக்கு எல்லாம் விளையாட்டாயிருக்கிறது. ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் குஷியாக ஊர் சுற்றி விட்டு வருகிறுய். சாயங்காலம் டிபன் சாப்பிட்டதும் ஐந்து மணிக்குப் புறப்பட்டவன் இப்பொழுது தானே வருகிறுய்? நான் இங்கே கவலைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்.

ரவி: நீ கவலைப்படுவானேன் அண்ணு?

ஹரி: கவலை ஏன் படுகிறேனு? நன்றுயிருக்கிறது உன் கேள்வி. பாதி ராத்திரியாகியும் தம்பியைக் காணும் என்றுல் அண்ணனுக்குக் கவலையாயிருக்காதா? இல்லை, கேட்கிறேன். உன்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு, கை கால் ஓடாமல் உட்கார்ந்திருக்கிறேன்.

ரவி: ஹ ஹ் ஹ ஹ் ஹா! அண்ணு, அப்படியா? உம்... எனக்காகவா கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாய்?

ஹரி: ரவி, உன்னிடம் விளையாடுகிறேன் என்று நினைத்தாயா? பொழுது விடிந்து பொழுது போனுல் பட்டணத்தில் கார் விபத்தும் லாரி விபத்துமாயிருக்கிறது. இந்த லட்சணத்தில் பாதி ராத்திரி பன்னிரண்டாகியும் உன்னைக் காணும். நான் கவலையோடு விழித்துக் கொண்டு கொட்டுக் கொட்டென்று எத்தனை நேரம் தான் உட்கார்ந்திருப்பேன்? நீயே சொல்லு.

ரவி (நாடக பாணியில்): ஓஹோ!

[ஹரியை உற்றுப் பார்க்கிறுன்.]

ஹரி (கோபத்துடன்): ஓஹோ என்னடா ஓஹோ? உன்னைப் பற்றிய கவலையில் எனக்குப் படிக்கவே ஓடவில்லை, தெரியுமா?

ரவி: ஓஹோ! அண்ணு, நீ படித்தாயா? இப்படித்தான் நீ படிக்கிற வழக்கமோ?

[ஒரு கேலிச் சிரிப்புச் சிரிக்கிறுன்.]



"நம்முடைய நாட்டு ஜனத்தொகை எவ்வளவுடா?

"நாற்பது கோடி!"

"சீ! அவ்வளவுதானா? நம் வீட்டையும் சேர்த்துக் கொண்டாயா?"

ஹரி (பரபரப்புடன்) என்னடா, என்ன?

ரவி: அண்ணா, தினம் இப்படித்தான் நீ கோட்டுப் போட்டுக் கொண்டு படுக்க உட்காருவது வழக்கமோ? (சிரிக்கிறான்)

ஹரி: ....என்னடா இது? உன் விளையாட்டுக்கு இதுதானா சமயம்?

ரவி: கோபித்துக் கொள்ளாதே, அண்ணா! நீ எனக்காகக் கவலையோடு காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததில் தந்தி வந்ததைக் கூடக் கவனிக்க வில்லை போல் இருக்கிறது. ஐயோ, பாவம். த்சொ, த்சொ, த்சொ....!

ஹரி: என்னடா த்சொ, த்சொ?

ரவி: ரொம்பக் கோபித்துக் கொள்கிறாயே, அண்ணா. தந்தி, அண்ணா! தந்தி!

ஹரி (திடுக்கிட்டு): தந்தியா....?

ரவி: அண்ணா, அதோ பார். ஒரு தந்தி கீழே கிடக்கிறது.

ஹரி: ......ஓ! ஆமாம்...... தந்தி! ராத்திரி வேளையில் தந்தியைப் படிக்க வேண்டாம் என்றிருந்தேன்.

ரவி: ஓகோ! நன்றாய்ச் சமாளிக்கிறாய்!

ஹரி: ஓகோ என்னடா ஓகோ, எதற்கெடுத்தாலும்? நீயும் வரவில்லை. தந்தியில் ஏதேனும் கெட்ட செய்தி இருக்கப் போகிறதே என்ற பயத்தினால் அதைப் பிரித்துக் கூடப் பார்க்க வில்லை. போதுமா? என்னமோ பெரிதாகத் துப்பு துலக்கிவிட்ட பாவனையில் கிண்டல் பண்ணுகிறாயே! பாதி ராத்திரி வரையில் எங்கே போயிருந்தாய் என்று கேட்டால் அதற்குப் பதிலைக் காணோம்.

ரவி: அண்ணா! நான் ஒன்றும் பச்சைக் குழந்தையில்லை. நான் எங்கேயோ சுற்றி விட்டு வருவதாக என்னைக் கண்டிக்கிறாய். நீ எவ்வளவு சாமர்த்தியமாக மறைத்துப் பேசினாலும் எனக்கு விஷயம் தெரிந்துவிட்டது.

ஹரி: என்னடா விஷயம் தெரிந்துவிட்டது? சொல்லேன், பார்ப்போம்.

ரவி: சொல்லட்டுமா? அப்புறம் வெளியே விடுவேன்.....!

ஹரி: என்னடா, நான் ஒன்றும் பச்சைக் குழந்தையில்லை. என்னமோ பிரமாதமாக கண்டு பிடித்து விட்டதாகப் பூச்சாண்டி காட்டுகிறாயே! சொல்லேன்.

ரவி: நீயும் எங்கேயோ சுற்றி வி(ட்டு) இப்பொழுதுதான் வந்திருக்கிறாய்! இல்லையா?

ஹரி: ரவி, நான் வெளியே போயிருந்தது உண்மைதான். ஆனால், உன்னைப் போல ஊர் சுற்றப் போக வில்லை. காரியமாக போயிருந்தேன்.

ரவி: ஓகோ! அதென்ன காரியம் அன்று ராத்திரி பன்னிரண்டு மணி வரையில்?

ஹரி (கோபத்துடன்): உனக்கு எ... வாட்டாயிருக்கிறது, ரவி. நான் படிப்பு உத்தேசித்துத்தான் போனேன்.

ரவி: ஓகோ!

ஹரி: ஓகோ என்னடா முட்டாள். கே... முத்தூர் போன மாமா திரும்பி விட்டதாகவும், என்னை அவசரமாக அழைப்பதாகவும் மாமா வீட்டு ஆள் வந்து சொன்னான். உடனே புறப்பட்டு நுங்கம்பாக்கம் சென்று மாமா வீட்டுக்குப் போனேன். அவரோடு பல இடங்களுக்குப் போக வேண்டி வந்தது. சற்று முன்புதான் அவர் என்னைக் காரில் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனார்.

ரவி: அப்படியா? எங்கே என்னை பார்த்துச் சொல்லு!

ஹரி: உன்னைப் பார்த்துச் சொல்லாமல் இத்தனை நேரமும் யாரைப் பார்த்து சொன்னேன்?

ரவி: ஓகோ! அப்படியா அண்ணா? முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயே! ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுகிறாய். அதனால் வகையாக அகப்பட்டுக் கொண்டாய். மாமாவோடு வெளியே போனதாகச் சொல்லியிருக்க வேண்டாம். வேறு யார் பெயரையாவது சொல்லியிருக்கக் கூடாதா? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா, அண்ணா? நான் மாமா வீட்டுக்குப் போய் அவரோடு ஒரு நாடகத்துக்குப் போய் விட்டு மாமாவை நுங்கம்பாக்கத்தில் இறக்கிவிட்டு அவர் காரில் சற்று முன்புதானே இங்கே வந்து இறங்கினேன்! ஒரேயடியாக 'ரீல்' விடுகிறாயே!

ஹரி (கோபத்துடன்): பொய், பொய். நீ சொல்லுவது அத்தனையும் பொய்.

ரவி: ஓகோ! பொய்யும் மெய்யும் பொழுது விடிந்தால் தானே தெரிகிறது.

[கீழே கிடந்த தந்திக் கவரை எடுத்து உறையைக் கிழித்துப் பார்க்கிறான். அவன் முகத்தில் அசடு வழிகிறது.]

ஹரி: என்னடா சமாசாரம் தந்தியில்?

ரவி: இந்தா அண்ணா, நீயே படித்துப்பார்.

ஹரி (தந்தியைக் கையில் வாங்கிப் படிக்கிறான்): "நாளைக் காலை நீலகிரி எக்ஸ்பிரஸில் வருகிறேன். கார் விபத்துக்குள்ளாகி விட்டது. அவசியம் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வரவும் — மாமா!"

[இப்பொழுது இரு சகோதரர்களின் முகத்திலும் அசடு வழிந்தது.]



பாமினிப் பறவை

கௌசிகன்

18. காசிம்கான் உதயம்

கோல்கொண்டா அரண்மனை கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்தது. விருந்தும் கேளிக்கைகளுமாகப் பாலா ஹிஸார் விழாக் கோலமே பூண்டிருந்தது. திட்டமிட்டபடி காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறி வருவதைக் கொண்டாடவே இப்ராஹிம் குதுப்ஷா தம் நண்பர்களை யெல்லாம் கூட்டியிருந்தார். அகமதுநகரின் நிஜாம் ஷாவும், பீடாரின் அலி பரீத் ஷாவும் விருந்தினர்களில் முக்கிய இடம் பெற்றிருந்தனர். நிஜாம் ஷாவுடன் பத்தாயிரம் குதிரைப் படைகளின் தலைவனாகப் பதவி யேற்றிருந்த யூசப் கானும் வந்திருந்தான்.

பாராதாரியின் பளிங்கு மண்டபத்தின் தரையிலே பொழிந்த நிலவு பாலாக வழிந்து கொண்டிருந்தது. அரை வட்ட வடிவமாக அமர்ந்திருந்தார்கள் மன்னர்களும் மற்றவர்களும். சாய்ந்து சரிந்து சொகுஸாக உட்கார்ந்து கொள்ளச் சுகமான திண்டுகள் போடப்பட்டிருந்தன ஒவ்வோர் இருக்கையிலும். இடையிடையே தட்டுக்களில் பழ வகைகளைக் குவித்து வைத்திருந்தார்கள். அவற்றின் அருகே மதுக் கிண்ணங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் குறையாமல் நிரப்புவதற்குப் போதை தரும் அழகுடைய கோதையர்கள் தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். அரங்கத்தின் நடுவே வார்த்தெடுத்த வெண்கலச் சிலையை யொத்த வனப்புடைய அழகி ஒருத்தி தன் அங்கங்களைக் குலுக்கி மினுக்கிய படி ஆடிக் கொண்டிருந்தாள். அவளை, அவள் உடலை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தன வாத்தியங்களும் வாய்ப்பாட்டும். உணர்ச்சிகளைக் கிளறும் அந்த இசைக் கேற்பத் தன் இடையை நெளித்தும், உடலைச் சிலிர்த்தும் ஒய்யாரமாக ஆடிக் கொண்டிருந்தாள் அந்தத் தாத்தாரியப் பெண்.

தட்டிலிருந்து எடுத்து உயர்த்திப் பிடித்த திராட்சைக் குலையிலிருந்து பழங்களைக் கையால் எடுக்காமல் வாயால் கௌவித் தின்று கொண்டிருந்தவர்களும், நங்கையர் கிண்ணங்களில் நிரப்பிய மதுவைச் சுவைத்துக் கொண்டிருந்தவர்களும், அந்த ஆடல் மங்கையின் மயக்கு நடனத்தில் மனத்தைப் பறிகொடுத்தவாறு, 'வாஹ்வா! வாஹ்வா!' என்று வாழ்த்தொலி எழுப்பித் தங்கள் வசமிழந்த நிலையில் மயங்கிக் கொண்டிருந்தார்கள். லஸ்தர் விளக்குகளின் ஒளியைத் தவிர ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த இரும்புக் கொப்பரைகளில் எரிந்து கொண்டிருந்த பந்தங்கள் இருளை விரட்டுவதோடு இதமான கதகதப்பையும் அந்தச் சூழலுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தன. தபலாக்கள் அதிர்ந்தன. நடன மாதின் வெறியூட்டும் ஆட்டத்தில் வேகம் மிகுந்தது.

விருந்தினர் வரிசையில் உட்கார்ந்திருந்த யூசப் கான் எழுந்திருந்து அந்தக் கூட்டத்திலிருந்து விலகி அமைதியை நாடி மதில் சுவரின் ஓரமாகப் போய் நின்று கொண்டான். குன்றின் உச்சியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது அந்தப் பாராதாரி. நிலவில் குளித்தபடி உறங்கும் கோல்கொண்டா நகரத்தின் அழகை அங்கிருந்தபடி ரசித்தான் யூசப்கான். கடந்த சில தினங்களாகவே தொன்மை மிகுந்த பாரதத்தின் வளப்பமான காட்சிகளைப் பார்த்துப் பார்த்துப் பரவசமாகிப் போயிருந்தான் அவன். கலையுள்ளம் படைத்த இந்திய மக்கள் கல்லை மெழுகாக்கி எழுப்பியுள்ள எழில் மிகு கலைக் கூடங்களைக் கண்டு வியப்பும் விம்மிதமும் அடைந்து போயிருந்தான். நல்முத்துச் சிப்பியிலே பிறந்தாலும், சிங்காரிகளின் கழுத்தில் இருக்கும்போதுதான் அழகு கொழிக்கும் அதன் சிரிப்பை அனுபவிக்க முடிகிறது. வைரம் நிலத்திலே பிறந்தாலும் நங்கையரின் உடலிலே இருக்கும்போதுதான் ஒளி சிந்திச் சிலிர்க்கும் அதன் ஜொலிப்பை உணர முடிகிறது. அது போல் பிறந்த நாட்டை விட்டுப் புகுந்த நாட்டிலே பெருமையோடு விளங்கும் இஸ்லாத்தின் ஏற்றத்தைக் கண்டு மகிழ்ந்தது அந்தத் துருக்கியனின் மனம். காபிர்களின் நாட்டில் தங்கள் இனத்தவர் கலைக் கூடங்களாக அமைத்திருக்கும் மசூதிகளின் எடுப்பான எழில் மிகு தோற்றத்தைக் கண்டு பூரித்துப் போனான் யூசப் கான்.

அகமதுநகரின் சேனாதிபதியாகிய சில தினங்களிலேயே இந்த நாட்டின் அரசியல் நிலையை ஒருவாறு தெரிந்து கொள்ளும்

வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. பாமினி சுல்தான்கள் தங்கள் பகைமையை மறந்து ஒன்று சேரும் அளவுக்கு ஏற்றம் பெற்றிருக்கும் இந்து சாம்ராஜ்யத்தின் பெருமையைப் பற்றியும் அறிந்து கொண்டிருந்தான். அதன் பலத்தையும் பராக்கிரமத்தையும் பற்றிப் பகைவர்களான பாமினி சுல்தான்களே புகழ்ந்து பேசுவதைக் கேட்டு அந்த விஜய நகரத்தைக் காண வேண்டுமென்ற ஆவல் உள்ளத்துக்குள் வளர்த்துக் கொண்டிருந்தான் யூசப் கான். இந்த ஆவலும் விரைவிலேயே பூர்த்தியாகும் என்பதையும் ஜாதகத்தினால் அறிந்திருந்தான். ஒரு பெரும் போரை எதிர் நோக்கி யிருக்கிறது இந்த நாடு என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு வெகுநாட்களாகவில்லை.

சல்லாத் துணி கொண்டு மறைத்ததைப் போலச் சந்திரனை மேகம் வந்து மூடிக் கொண்டது. கீழ் வானத்தில் மினுக்கட்டான் பூச்சிகளாக மொய்த்துக் கொண்டிருந்த நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. யூசப் கான் தன் கவனத்தைச் சற்றுத் தூரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த தாத்தாரியப் பெண்ணின் ஆட்டத்திலே திருப்பினான். வாத்தியங்களின் அதிர்வுக்கு ஏற்றபடி துவளும் தன் உடலை வில்லாக வளைத்துக் காண்போரின் உள்ளங்களில் வெறி ஏற்றிக் கொண்டிருந்தாள் அவள். சட்டென்று அவனுக்குத் தான் கப்பலில் மரக் கம்பத்திலே கட்டுண்ட நிலையில் கசையடி வாங்கியபோது தன் உடல் துடித்த அந்த நிலைதான் நினைவுக்கு வந்தது. அவன் தசைநார்கள் இறுகின. கூத்தைக் காண விரும்பாதவனாக முகத்தைத் திருப்பிக் கொண்டான். வெறித்த அவன் பார்வையின் முன்னே இருட் போர்வையில் மூடுண்டு கிடக்கும் கோல்கொண்டா ராஜ்யம் விரிந்து கிடந்தது. ஆனால் தன் முன்னே உள்ள எதையும் அவன் இப்போது பார்க்கவில்லை. தன்னையே தன்னுள் பார்த்துக் கொண்டு நின்றான் தன்னை மறந்த நிலையில்.

'என் வாழ்க்கையில்தான் சமீப காலத்துக்குள் எத்தனை சம்பவங்கள் — எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கும்படியான சம்பவங்கள் எல்லாம் எத்தனை துரிதமாக நடந்துவிட்டன? கப்பல் கவிழ்ந்ததுமே என் வாழ்வும் முடிந்ததாக எண்ணினேன். கைதியாகிக் கசையடி பட்டுக் கம்பத்தில் கட்டுண்டு கிடந்தபோது உயிர் ஆசையை உதறினேன். இவ்வளவையும் மீறி என்னை வாழ வைத்து இந்த நிலையில் இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் விதி இன்னும் என்னால் என்ன காரியங்களைச் சாதித்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறதோ?'

நினைவின் முடிவை நீண்ட மூச்சாக்கி வெளியேற்றி விட்டுத் திரும்ப நினைத்த யூசப் கானின் பார்வையை, கோட்டையை நோக்கி வளைந்து நெளிந்து வரும் பாதையிலே வெகு வேகமாக ஒரு தீவட்டி தாவி வரும் காட்சி தடைப்படுத்தி நிறுத்தியது. உற்றுக் கவனித்தபோது தீவட்டி தனியாக வரவில்லை. அதை ஏந்திய உருவம் ஒரு குதிரையையும் விரட்டிக் கொண்டு வெகு வேகமாகக் கோட்டையை நோக்கி வருகிறது என் தெரிந்தது. அடுத்த சில விநாடிகளில் பாவாஜியாரின் பாதாள வாயிலிலே ரொலி மாளிகையின் முன்னே வந்து றது. சங்கேதக் குறிப்புக்களைக் கொ ஓசை எழுப்பப்பட்டது அங்கிருந்து. அடு விநாடி அந்த ஒலி கோட்டையின் உச் ளுள்ள பாராதாரியிலே கூடி, கேளிக் யில் ஈடுபட்டிருப்போரின் கவனத்தைக் கவ ந்து. மது மங்கையரின் மோகத்திலே மூ ழ்கிக் கிடந்தாலும் குதப்ஷா எதிரொ கொண்டு வந்த செய்தியினால் உடன் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார் ந்தார். கையை உயர்த்திப் பாட்டையும் ஆ ட்டத்தையும் நிறுத்தினார். பாவாஜியாரிலிரு கைதட்டி எழுப்பும் மாறுபட்ட ஒலிகள் இ போது ஸ்பஷ்டமாகக் கேட்டன. செ தியை அறிந்தவர் 'மேலே வரச் சொ என்று உத்தரவுக்குக் காத்திருக்க தூத ரிடம் கூறினார். அவன் பாராதாரியி பிரதானமாக அமைந்த ஓர் இடத்துக் ஓடிச் சென்று குதப்ஷாவின் உத்தரவை கைதட்டி அதே சங்கேத ஒலிக் குறிகளா கீழே அனுப்பி வைத்தான். தீவட்டி தாங் வந்த குதிரை வீரன் பாராதாரியை நோக்கி தனது குதிரையைத் தட்டி விட்டான் குதிரையிலிருந்து இறங்கி மேலே ஏறிவரவில் அவன். ஓர் எல்லை வரை கோட்டையின் மீ குதிரையின் மீதே செல்லலாம். அத்தகை விசாலமான படிகளையும் பாதைகளையு கொண்டது அந்த அற்புதமான கோ கொண்டாக் கோட்டை.

எதிரொலியைப் பயன்படுத்திச் செ துள்ள இந்த ஏற்பாட்டைப் பார்த்து வியந்து போய் நின்று கொண்டிருந்தான் யூசப் கான் சற்று நேரத்துக்கு முன் பாட்டும் கூத்து மாக இருந்த கோட்டை உச்சியில் இ போது அமைதி நிலவியது. படிகளில் பாய்ந்து ஏறிவரும் குதிரைக் குளம்பொலி தான் அங்கிருந்தோரின் இதயத் துடிப்பைப் போலத் தனித்து ஒலித்துக் கொண்டிருந்தது. தூதுவன் என்ன செய்தியோடு வருகிறானோ என்ற தவிப்பே எல்லோருடைய நெஞ் சத்தையும் இறுக்கிக் கொண்டிருந்தது. யூசப் கான் கோட்டையின் மதிற் சுவரிலிருந்து தன் இருக்கைக்கு வந்தமர்ந்து கொண்டான்.

காத்திருந்தவரின் கவனத்தைக் கவரும் வகையில் தூதுவன் வந்தான். முழங்கால் வளையாமல் இடுப்பை வளைத்துச் சலாம் செய்து நிமிர்ந்தவனின் முகத்திலே நெடுந் தூரப் பிரயாணத்தின் களைப்பு இல்லை, களிப்பே மிகுந்திருந்தது!

வந்த தூதுவன் வேறு யாருமில்லை. விஜய நகர சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்துப் பகை தீர்க்க வேண்டுமென்று ஆதில்ஷா விடம் முறையிட்டு அவரால் நிராகரிக்கப் பட்ட மஹல்தார்தான் அவன். தனக்கு நேர்ந்த அவமானம் தன் இனத்துக்கே இழைக்கப்பட்ட அநீதி என்று வாதாடி வன்மம் தீர்க்கவே குதப்ஷாவைத் தேடிக் கோல்கொண்டாவுக்கு ஓடி வந்திருந்தான்.

னல் அவன் எதிர்பாராத வகையில் அங்கு ஜாம்ஷாவும், இமத்ஷாவும் கூட இருப்பதைக் கண்டதுமே வந்த காரியம் வெற்றி ன்று குதூகலப்பட்டது அவன் உள்ளம்.

மஹல்தாரைக் கண்டவுடனேயே புரிந்து காண்டார்கள் நிஜாம்ஷாவும் குதப்ஷாவும். ஜப்பூரின் அரண்மனையில் அவர்கள் எல்லோரும் சேர்ந்து இருக்கும்போதுதான் அவனை ஜயநகரத்துக்கு அனுப்பி வைத்தார்கள். த்தகைய ஓர் ஏற்பாட்டைச் செய்தவரும் தப்ஷாதான்.

''விஜயநகரத்துக்குப் போய் வந்த காரியம் வற்றிதானே?'' என்று கேட்டு மஹல்தாரின் மௌனத்தைக் கலைத்தார் குதப்ஷா.

மகிழ்ச்சி பூத்திருந்த அவன் முகம் மங்கியது. வதனை, வெறுப்பு, ஆத்திரம், அவமானம் கிய உணர்ச்சிகளின் கலவையாக உருமாறியது அவன் முகம். ''ஒரு விதத்தில் வெற்றி ான். தாங்கள் என்னை அனுப்பும் போது ந்த முடிவை எதிர்பார்த்து அனுப்பினீர்களோ அதுதான் நடந்தது. மண்ணை இழப்பது மானத்தை இழப்பது போலாகும் என்று ரிஹுன் மமதை பிடித்த அந்த மன்னன். னால் அதற்கும் மேலாக......'' என்று பச்சை அடக்கிய போது அங்கிருந்தவர்கள் ச்சடைக்க அந்த மௌனத்தை விரும்பாதவர்களாகித் தவித்தார்கள்.

''அதற்கும் மேலாக...?'' அந்த மஹல்தார் பேச்சை மறந்து விட்டாரோ என்று அடியெடுத்துக் கொடுத்தார் கோல்கொண்டாவின் இப்ராஹிம் குதப்ஷா.

''என்னை—உங்கள் பிரதிநிதியாகச் சென்ற என்னை — அவமானப்படுத்தி அனுப்பினார். அதற்கும் மேலாகப் போற்றுதலுக்குரிய நம் முஸ்லிம் இனத்தின் மானத்தையே மண்ணோடு மண்ணாகப் புதைத்து விட்டார்கள் அந்தக் காபிர்கள்'' என்று உருக்கமாக உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சிகளை உலுக்கி எழுப்பி இனவெறி கொள்ளும்படியாக விஜயநகரத்திலே வராகத்திலும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை வக்கணையாக விளக்கினான் அந்த மஹல்தார். கண்ணீர் ஒழுகக் கைகளை உயர்த்தி, அல்லாஹ்வின் பெருமைக்கு ஏற்பட்ட இந்தச் சிறுமையைத் துடைத்துத் தூய்மைப்படுத்த அவர்கள் உடனே வீறு கொண்டெழ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

பழி வாங்க வேண்டும், படை யெடுக்க வேண்டும், விஜயநகர சாம்ராஜ்யத்தை வேரோடழிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த குதப்ஷாவிற்கு, விஜயநகரம் பீஜப்பூருக்கு உரிமையான பகுதிகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று கூறியதே போதும். அதையும்விடப் பல படி அதிகமாகவே சாதித்துக் கொண்டு வந்து விட்டான் தூதுவன்.

''இதற்கு மேலும் பேசாமலிருப்பதா? இந்துஸ்தானத்தில் என்றைக்குமே அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு வகுப்பாக இஸ்லாமியரை ஆக்கி விடுவான் அந்த ஆனிட்டு ஆணவக்காரன்'' என்று கொதித்தார் குதப்ஷா.



''என்ன சார் ஆளுக்கொரு விறகுக் கட்டையைக் கையில் வைத்துக் கொண்டு கோபமா உட்கார்ந்திருக்கீங்க?''

''ஆமாங்க! இந்த ரேஷன் காலத்திலே நம்ம வீட்டுக்கு விருந்தாளிங்க வருவதாகக் கடிதம் எழுதியிருக்காங்க, அவங்களை எதிர் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கோம்!''

தூதுவனின் விளக்கம் இனப்பற்றுக் கொண்ட எவரையுமே வெறி கொள்ளச் செய்யும் வகையில்தான் இருந்தது. ''கோபப்பட வேண்டிய விஷயம்தான்'' என்றார் நிஜாம்ஷா நிதானமாக. ராமராயரை வெறுத்தாலும் பகைத்துக் கொண்டு படையெடுக்க ஏனோ அவருக்குத் தயக்கமாகவே இருந்தது.

''கோபப்பட்டால் மட்டும் போதாது! கொன்று குவிக்க வேண்டிய தருணம் இது. இனி சிந்திப்பதற்கே ஏதுமில்லை. போர், போர்! தன்மானமுள்ள எந்த முஸ்லிமும் இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கமாட்டான்'' என்று சீறினார் குதப்ஷா.

''நம்முள் ஒற்றுமை வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். முஸ்லிம் இனத்துக்கும் மதத்துக்கும் மாசு கற்பிக்கும் எவரையும் இலேசாக விட்டு விடுவதையும் நான் வெறுக்கிறேன். ஆனால்...'' என்று அழுத்தம் கொடுத்து நிறுத்தினார் பீடார் நாட்டின் பெருமைக்குரிய மன்னர் அலி பரீத்ஷா. குதப்ஷாவும் நிஜாம்ஷாவும் அவரைப் பார்வையால் குத்தினார்கள். அதனால் பயப்படவில்லை பரீத்ஷா. தொடர்ந்தார்: ''விஜயநகரத்தைப் பகைத்துக் கொண்டு படையெடுத்து வெற்றி கொள்வது என்பது விளையாட்டல்ல. அதனால் அந்தப் பேரரசின் பெருமை கண்டு நான் அஞ்சுவதாக நினைக்க வேண்டாம்'' என்றவர் இத்தனைக்கும் காரணமான அந்த மஹல்தாரைப் பார்த்து, ''பீஜப்பூரின் தூதுவனாகத்தானே விஜயநகரத்துக்கு

நீ சென்றீர்? அப்படியிருக்க அங்கு உனக்கு நேர்ந்த இந்த அவமானத்தை அலிஆதில்ஷாவிடம் சென்று முறையிடாமல் எங்களைத் தேடி வந்து விவரிக்கிறாயே, அது ஏன்?'' என்று கேட்டார்.

''அவரைக் காணாமல் நான் இங்கு வரவில்லை. அங்குதான் முதலில் என் கண்ணீரைச் சிந்தினேன். கதறினேன்.'' ஆதில்ஷாவிடம் தான் அடைந்த ஏமாற்றத்தை விளக்கினான் அந்தத் தூதுவன். '' 'மகாமண்டலேசுவரரால் மகனாக மதிக்கப்பெறும் மகிமையையும் தகுதியையும் அடைந்தவன் நான். அந்த நட்பை நான் நாசமாக்கிக் கொள்ள விரும்பவில்லை. அவருக்கு எதிரான எந்தச் செயலிலும் இறங்க மாட்டேன்' என்று கூறி விட்டார். அதன் பிறகே உங்களிடம் ஓடி வந்தேன்.''

நிஜாம்ஷாவும் குதப்ஷாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதிலே ஆயிரம் எண்ணங்கள் எதிர்நீச்சலடித்தன. 'என் முயற்சிகளெல்லாம் வீணாகி விட்டனவா? தென்னக முஸ்லிம் அரசுகளின் இணைப்பிலே இந்து சாம்ராஜ்யத்தின் அழிவுக்கு வழிவகுத்ததெல்லாம் வெறும் கனவாகப் போக வேண்டியதுதானா?' என்று கலங்கியது குதப்ஷாவின் நெஞ்சம்.

'மண உறவுகளால் மனம் மாறி விடும், பகை முடிக்கப் பக்கபலமாக இருப்பான்' என்று எண்ணி என் மகளையே அவனுக்கு மனைவியாக்கி வைத்தேனே! எல்லாம் வீணாத்தானா? குதப்ஷாவின் பேச்சைக் கேட்டு முட்டாளாகி விட்டோமோ?' என்று குமுறினார் நிஜாம்ஷா.



படை பலத்திலும் பரந்த நிலப் பரப்பிலும், செல்வச் சிறப்பிலும் மிகுந்த பீஜப்பூரை ஒதுக்கி விட்டு நாம் செயல்பட முடியாது'' என்று வெளிப்படையாகவே பேசிவிட்டார் பரீத்ஷா.

''ஆம்!'' என்று அலட்சியமாக முழுமுகம் கடுத்தார் குதப்ஷா. ''பீஜப்பூரை நம்பியா நாம் போர்த் திட்டம் வகுத்தோம்? இனத்தின் பெயரால் இணைய வேண்டும் என்று விரும்பினோம் — இவரில் ஒருவரை ஒதுக்கி ஒற்றுமை காண வேண்டாம் என்ற எண்ணத்தோடு. ஆதில்ஷா நம்முடன் ஒத்து வந்தாலும், வராவிட்டாலும், அதிகார வெறியும் சாம்ராஜ்யச் செருக்கும் கொண்ட அந்த ராமராயரின் கொட்டத்தை நாம் அடக்கியே தீருவோம். எப்படியும் போர். போரிட்டுத்தான் நம் புனித இஸ்லாத்தின் மதிப்பை உயர்த்தியாக வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?'' என்று நிஜாம்ஷாவைப் பார்த்துக் கேட்டார் இப்ராஹிம். எங்கே அவரும் தமது மருமகப் பிள்ளையின் பக்கம் சாய்ந்து விடுவாரோ என்ற ஐயம் அதில் கலந்திருந்தது.

யோசித்தார் அகமது நகர் சுல்தான். அவரது சிந்தனை தளபதி யூசப்கானைப் பேச வைத்தது. ''ஆரம்பத்தில் நம்முடன் ஒத்துழைப்பதாக உறுதி கூறிய ஆதில்ஷா அவர்கள் இப்போது இணைந்து வர மறுப்பதென்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டுமல்லவா?'' என்று கேட்டான் அந்தத் துருக்கிய வீரன்.

''வெறும் மயக்கம்!'' என்று வெறுப்போடு சிரித்தார் குதப்ஷா. ''யூசப்கான்! உனக்கு இந்த நாட்டு அரசியலைப் பற்றி அதிகம் தெரியாது. போகப்-போகப் புரிந்து கொள்வாய். பாமினி சுல்தான்களிடையே பகைமையை வளர்த்துத் தன் சாம்ராஜ்யத்தின் பலத்தையும் பரப்பையும் வளர்த்துக் கொண்டது விஜய நகரம். அந்த அரசியல் சூழ்ச்சிகளை அறியாத ஆதில்ஷா, தன்னை அந்தக் காபிர் அன்பு மகனாக ஏற்றுக் கொண்டான் என்பதற்காக நம் திட்டங்களுக்குக் கைகொடுக்கத் தயங்குகிறார். அந்த மயக்கத்திலிருந்து அவரை விடுவிப்பது என் பொறுப்பு. நிஜாம்ஷா அவர்களே! இன்னும் ஏன் யோசனை? ராமராயரின் படைகள் அகமது நகரிலே புகுந்து புரிந்த அட்டூழியங்களை அதற்குள் மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டார் இப்ராஹிம்.

சவுக்கடி பட்டவரைப் போல் உடலைச் சிலிர்த்துக் கொண்டார் அகமதுநகர் சுல்தான். ''எதையும் மறந்துவிடவில்லை. மறக்கவும் முடியாது. பழி வாங்கிப் பகை முடிக்க வேண்டும் என்ற என் எண்ணத்தையும் நான் மாற்றிக் கொள்ளவுமில்லை. ஆனால் நமது முயற்சிகள் பூரணமான, நிச்சயமான பலன்களைத் தர வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எதிலும் நாம் ஏமாந்து விடக் கூடாது என்பதே என் கவலை'' என்றார் நிஜாம்ஷா. பீஜப்பூரின் பிரிவு அவரைப் பெரிதும் பாதித்திருக்கிறது என்பதைக் கூறாமல் கூறியது அவர் குரல்.


"நம் இந்தக் கலக்கத்துக்கெல்லாம் உறக்
ஒரு தெளிவான முடிவைக் கொடுக்கும்
று நம்புகிறேன். காலையில் தொடர்ந்து
பாதிக்கலாமே?" என்று கூறி எழுந்தார்
த்ஷா. மற்றவர்களும் அதற்கு உடன்பட்
ர்கள். சற்று நேரத்தில் பாரதாரி வெறிச்
ாடிக் கிடந்தது.

"போர் போர், போர்! நமது புனித
மான இஸ்லாத்தின் ஏற்றத்துக்காகவும் தன்
மானத்தை இழக்காமல், முஸ்லிம் இனம்
அருமை குறையாமல் வாழவும் வேண்டு
மானால் பலம் பெற்று வரும் பகைவரை
ிக்க வேண்டும். இந்த லட்சியத்தை
அடைய நாம் போரிட்டே ஆக வேண்டும்.
நமது இந்த முடிவை இனி எதுவும் மாற்றாது."

காலையில் மூன்று சுல்தான்களும் மறுபடி சந்தித்த போது சொல்லி வைத்தாற்போல ஒரே விதமாக—வார்த்தையில்கூட மாறுதலின்றி இதையே கூறினார்கள்.

ஒருமுகமான இந்த ஒப்பற்ற முடிவுக்கு வந்த மூவருமே இரவு முழுதும் உறங்கவில்லை. உறக்கமற்ற இரவின் கிறக்கம்கூட இந்த மகிழ்ச்சியில் அவர்களிடம் காணப்படவில்லை. தங்கள் நட்பின் இறுக்கத்தை, இணைப்பை வெளிப்படுத்தக் சுல்தான்கள் மூவரும் தோளோடு தோள் சேர நன்றாகத் தழுவிக் கொண்டார்கள்.





''அரிசிக் கடைகளில் 'கியூ' இல்லை என்கிறார்கள்? இத்தனை பெரிய 'கியூ' எங்கே ஓடுகிறது!''

'' பட்டினிக் கார்டு கிடைக்காத இத்தனை பேரும் அந்தக் கியூ கலையாமல் புகார்க் காரியாலயத்துக்கு ஓடுகிறார்கள்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''ஆனால் ஒன்று. பீஜப்பூர் இந்தக் கூட்டிலிருந்து விடுபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எப்படியாவது ஆதில் ஷாவை நம் வழிக்குக் கொண்டு வந்தாக வேண்டும்'' என்றார் நிஜாம்ஷா.

''அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்'' என்றார் நம்பிக்கையுடன் குதுப் ஷா. ''இந்த விநாடியிலிருந்தே போருக்கான ஆயத்தங்களை நாம் முழு மூச்சுடன் தொடங்கியாக வேண்டும்.''

''அதற்கு முன்னும் நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது'' என்றார் பரீத்ஷா. ''ஒப்பற்ற ஒற்றர் படையை உடையவர் ராமராயர். காற்றின் போக்கிலிருந்தே காரியங்களின் கூறு அறியும் திறமைசாலிகள் உண்டு அவரிடம். நம்முடைய இந்தத் திட்டங்களை யெல்லாம் அவர் அறிந்திருப்பார். ஆகவே போருக்கு முன் விஜயநகரத்தின் நிலையை அதன் செயல் முறைகளை நாம் அறிந்து கொள்ளுவது அவசியம். தன் பலத்துடன் மாற்றான் பலத்தையும் அறிந்து கொண்டு போருக்குப் புறப்படுவதுதான் புத்திசாலித்தனம்.''

''உண்மைதான். திறமை மிக்க தோர் ஒற்றனை விஜயநகரத்துக்கு அனுப்பி உளவறிந்து வரச் செய்ய வேண்டும்'' என்றார் நிஜாம்ஷா. அப்போது பூசப்கான் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட குதுப்ஷா குதூகலத்துடன், ''இதோ, அந்தப் பிரச்னையும் தீர்ந்து விட்டது!'' என்றார். ''இந்தக் காரியத்துக்கு பூசப்கானை விடத் தகுதி வாய்ந்தவர் யாரும் இல்லை. இந்த வீரனைப் பற்றி அங்கு யாருக்கும் எதுவும் தெரியாது. அவர்கள் இவனைப் பார்த்தது கூட இல்லை. ஆகவே அந்நிய நாட்டானைப்போல ஆபத்தின்றி ஒரு நாட்டில் சுற்றலாம். உருமாறிப் போக வேண்டியது கூட இல்லை. பூசப்கான் அந்த நாட்டை இது வரை பார்த்திராததால் எதையும் ஆர்வமுடன் பார்க்கலாம். பாசாங்கு செய்யவோ நடிக்கவோ தேவையில்லை. என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார் பூசப்கானைப் பார்த்து.

ஏதும் புரியாத நிலையில் திகைத்தவனு(க்கு) விஷயத்தை விளக்கினார் நிஜாம்ஷா. ''விரோதியின் நாட்டுக்குச் சென்று உளவறிந்து வரும் பணியை உன்னிடம் ஒப்படைக்கலாம் என்றிருக்கிறோம். விஜய நகரத்துக்குள் சென்று அதன் படை பலத்தை அறிந்து வருவதோடு முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த தளபதிகள் பலர் அங்கு பணிபுரிகிறார்கள். நமக்குச் சாதகமாகச் செயல்படவும் அவர்களைத் திருப்பி விட வேண்டும். சிரமமான காரியம்தான். ஆனால் உன் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.''

விஜயநகரத்துக்குச் செல்ல வேண்டும் என்ற செய்தியே பூசப்கானுக்கு மகிழ்ச்சியளித்தது. அதுவும் தான் பணிபுரியும் நாட்டுக்குத் தன் பயணம் பயன் தரும் வகையில் அமைவதை நினைத்து ஆனந்தமடைந்தான்.

''என்னிடம் தாங்கள் கொண்டுள்ள அன்புக்கும் நம்பிக்கைக்கும் நான் கடமைப்பட்டவன். தங்கள் கட்டளை எதையும் நிறைவேற்றி வைக்கச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான் பூசப்கான்.

உடனே திட்டங்கள் வகுக்கப்பட்டன. விஜயநகரத்தைப் பற்றி அவன் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமான செய்திகளையெல்லாம் அவனுக்குத் தெரிவித்தார் குதுப்ஷா. நகரின் அமைப்பு, நாகரிகம், பழகும் முறை முதலியவைகளை அவனுக்கு விளக்கினார். அந்தப்புரத்திலுள்ளும் செல்வதற்கு ஏற்ப அவன் இளமைத் தோற்றத்திலே சற்றே முதுமையைப் புகுத்தி உருமாற்றம் செய்யப்பட்டான் பூசப்கான். பாரசீகத்திலிருந்து வரும் வைர வியாபாரியைப் போலப் பகட்டான ஆடை அலங்காரம் செய்துகொண்டான். கோல்கொண்டாவின் பொக்கிஷ அறையிலிருந்து விலைமதிப்பற்ற ஆபரணங்கள் அவனது வியாபாரப் பொருள்களாயின. வழிச் செலவுக்கும் விஜயநகரத்திலே டாம்பீகமான வாழ்க்கை நடத்தவும் ஏராளமான பொற்காசுகளையும் கட்டிக் கொடுத்தார்கள். நெடுந் தூரப் பிரயாணியைப் போல ஒட்டகம் ஒன்று அவனது மூட்டைகளைச் சுமந்தபடி பின்தொடருவதற்கு ஏற்பாடாயிற்று. விஜய நகரத்தின் மூலை முடுக்குகளையும் அறிந்த இரண்டு வீரர்கள் இந்த வைர வியாபாரிக்குப் பணியாளாகப் பின்தொடர்ந்தார்கள். அவ்விருவரின் உருவமும் கணிசமான அளவுக்கு மாற்றப்பட்டது. ஒப்பற்ற தனது வெள்ளைக் குதிரை மீது அமர்ந்து ஒய்யாரமாகக் கிளம்பினான் பூசப்கான் — இல்லை பாரசீகத்திலிருந்து வரும் வைர வியாபாரி! இப்போது அவன் பெயர் காசிம்கான்.

தனது கனவு நகரமும், மர்மங்கள் நிறைந்ததும், பகைவர்களின் இதயத்திலே முள்ளாகக் குத்தும் மகோன்னதமான வாழ்க்கையை உடையதும் தென்னகத்தில் தன்னிகரில்லாது விளங்குவதுமான விஜயநகரத்தை நோக்கிக் கிளம்பினான் காசிம்கான்.

அதே நேரத்தில் ஆதில்ஷாவின் அவையை நாடிப் பீஜப்பூரை நோக்கி மற்றொரு தூதுவன் குதிரையில் விரைந்து கொண்டிருந்தான். (தொடரும்)



ஸ்பார்ட்டன்

சூபர் **பிளாஸ்டிக்** பெயிண்ட்

வீட்டு அலங்கார வேலைக்கு

உங்கள் இல்லத்தின் அழகிற்கு பொருத்தமான அநேக அழகு வண்ணங்களில் கிடைக்கும். மழ மழப்பு, பளபளப்பு, தூர்க்கந்த மின்மை இத்தியாதி குணங்களுடன் பிரஷ்ஷினால் பூசிய கவடு தெரியாமல் சீராகவும் மிகச் சுலபமாகவும் பூசலாம். இது மட்டுமல்ல. கழுவினாலும் கலையாது. இது தான் **ஸ்பார்ட்டன்** சூபர் பிளாஸ்டிக் பெயிண்ட்.



ஸ்பார்ட்டன் – உயர்தரத்தின் சின்னம்

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்
செம்பியம், சென்னை - 11

இந்தியன் பெயிண்ட்ஸ் அசோஸியேஷனில் அங்கத்தினர்

கூடு

எல். லட்சுமி சுப்ரமணியம்

சீனிவாசன் காரியாலயத்துக்குக் கிளம்பி விட்டான். அவன் வாச ... வரும்வரையில் கல்யாணி இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. ... றுவதற்காகப் பிரிந்து புரண்ட கூந்தல். நெற்றியில் பொலிவாகத் ... ந்து. விழிகளின் மேல் கவிந்த இமைகள் முகத்தில் இரு நிழல்களாய்க் ... ன்றின. அவன் செருப்பை மாட்டிக் கொண்டு ஒரு கணம் நின்றான்; ... ம்ப்பாள் போட்டுக் கொள்ள அவள் வரும்வரையில். அவள் வந்ததும் ... சற்கதவு மூடின இருட்டில், தாழ்ப்பாள்மேல் தங்கிய அவள் கைமேல் ... ன் கை பொத்திற்று.

''நான் வருகிறேன்.''

அவள் முகம் நிமிரவில்லை. ஆனால் தலையசைப்புத் தெரிந்தது. இர ... ன் விடிவிளக்காய் இனி மௌனம்தான். இந்தத் தாழ்ப்பாளை மறு ... டியும் அவன் மாலையில் வந்த பிறகுதான் திறப்பாள். பூவுக்குள் சிக்கிய ... வண்டாய் அவள் மனம் அப்படித் தன்னைச் சுருக்கிக் கொள்ளும்போது ... ப்படித் தவிக்குமோ என்று அவன் நினைத்ததுண்டு. இப்போது சந்தேக ... ல்லை. அவளுக்கு அந்த மௌனமும், தனிமையும்தான் இயல்பு; குளிருக் ... க் கணப்படியைப் போலத் தன் நினைவே தனக்குத் துணையாக.

படி இறங்கித் தெருவில் நடந்தபோது முதல் நாள் நிகழ்ச்சி நினை ... ல் எழுந்தது.

வெளி இருட்டைப் பார்த்தபடி கல்யாணி சுவரைப் பிடித்துக் ... கொண்டு நின்றாள். விளக்கொளியில் அலை அலையாக மின்னும் கூந்தல். சதுக்கிய வடிவாய் இடையின் ... வெண்மை. ஏதோ ஓர் ஏக்கம் ... ன் நிற்க அவன் தோளை அவள் ... ணைத்துக் கொண்டான்.

''அடுத்த வருஷத்தோடு நமக் ... குக் கல்யாணமாகி ஒரு வருஷமா ... கிறது.—''


அவள் தலை அவன் தோள் மேல் ... ரிந்தது. குழையும் கன்னங்களின் ... மென்மையில் அவள் நெஞ்சம் ஆறு ... தல் காண விழையும் ஏக்கம் தெரி ... வது போன்ற உணர்வு. அவள் ... மனத் திரையில் புரண்டெழுந்த நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக ஓடும் காட்சியாகத் தெரிந்தன. அவன் பெயரைச் சொல்லி அழைத்ததும் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டவளைப் போல் நிமிர்ந்து பார்த்தாள்.

'பக்கத்து வீட்டுக்காரர் களையும் நண்பர்களையும்கூப் பிட்டு ஒரு சின்ன விருந்து வைக்கலாமா கல்யாணி?'

மௌனமான தலை அசைப்புத் தான் பதில்: வேண்டாமென்று.

அவன் எதிர் பார்த்ததுதான். ஆனால் கேட்காமல் இருக்க முடிய வில்லை. இப்போது பதில் கிடைத்ததும் கேட்டு இருக்க வேண்டாமென்று ஓர் ஏக்கம்.

''ஏன்?''



வெய்யிலின் வெப்பத்தைப் போல் அவன் பார்வையில் நிமிர்ந்த கண்கள் கூசி இமைக்கத் தவித்தன. சட்டென்று அவன் தோளில் அவள் இதழ்கள் பதிந்தன. அவள் புரியாப் புன்னகையின் மயக்கில் அவன் தன்னை இழந்து நின்றான். மேலும் வற்புறுத்த மனமில்லை.

''சரி, வெறுமனே கோவிலுக்குப் போய் ஓர் அர்ச்சனை செய்து விட்டு வரலாம். அது போதும். சரிதானே?''

''ஆகட்டும்.''

அவள் மறுப்பும் இப்படி ஒரு சிறிது விட்டுக் கொடுத்தாற் போன்ற பதிலும் அவனுக்கு எரிச்சலாக இல்லை. அவன் அவளை எப்போதும் கடிந்ததில்லை. அவள் பொறுமை இன்மையை அனுபவிக்கும் மோனச் சிரிப்பில் அவள் கண்கள் அவனைச் சிந்தித்து நிற்கும்போது அவனுக்கு உள்ளூற ஒரு வித பச்சாத்தாபம்தான் எழும். கூட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாய், தன்னை எந்நேரமும் சுருக்கிக் கொண்டு ஏன் இப்படி ஒதுங்குகிறாள் இவள்? தனக்கென்றே அவனை அடைந்த பின்னும் ஏற்று அனுபவித்த வாழ்க்கையிலும் அவள் அவனிடமிருந்து ஏனோ அப்படி இருண்ட சிந்தனைகளே துணையாய்ப் பிரித்துக் கொண்டு நிற்கிறாள்?

க்யூவில் நின்று பஸ்ஸில் ஏறின பிறகும் அதே கிறவில் நினைவு ஓடிக் கொண்டிருந்தது. இன்னும் இருபது நிமிடங்களுக்கு அதே இடம்தான். மற்றவர்களைப் பாராமல் வெளியே முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டால் தன் மனவோட்டம் கலையாமல், சிந்தனையில் லயித்தபடி போய்க் கொண்டே இருக்கலாம்.

ஏதோ ஒரு புத்தகத்தைத் தேடிக்கொண்டு அவன் யுனிவர்ஸிடி லைப்ரரிக்குப் போயிருந்தான். அங்கேதான் முதன் முதலில் அவன் அவளைச் சந்தித்தது. அவன் தேடிய புத்தகத்தையே அவள் கையில் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

''மன்னிக்கவும். ஒரு ஐந்து நிமிஷம் அந்தப் புத்தகத்தைத் தருகிறீர்களா? குறித்துக் கொண்டு உடனே கொடுத்து விடுகிறேன்.''

அவள் பதில் சொல்லாமல் புத்தகத்தை மட்டும் நீட்டினாள். கண நேர மருட்சியில் விழிகள் கூட அசையாமல் அப்படியே பிரமிப்பாய் நின்ற முகத்தை மறுபடியும் நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி அவன் புத்தகத்தை மட்டும் வாங்கிக் கொண்டான். அவன் உட்கார்ந்து ஏதோ எழுத ஆரம்பித்ததும் அவள் எதிரே மேஜையின் ஓரமாக நின்று கொண்டாள். மேஜையின் பரப்பில் விரித்தாற்போல் பதிந்து நின்ற விரல்களுக்கும், புத்தக வரிகளுக்கும் அவன் பார்வை மாறி மாறி ஓடிக் கொண்டிருந்தது. சற்று உட்கார்ந்திருந்தால் கொஞ்சம் பேசியிருக்கலாமோ?

அவன் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்ததும் அவள் புறப்பட்டு விட்டாள். அவன் நன்றி தெரிவித்தது கூட அவள் காதில் விழுந்திருக்குமோ என்னவோ?

நாலடி வைத்தவன் திரும்பியபோது மேஜை மேல் ஒரு பேனா இருந்தது கண்ணைக் பட்டது. அவளுடையதாக இருக்கு! அவன் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வருவதற்குள் அவள் பஸ்ஸில் ஏறி விட்ட. அவள் பஸ் போய்விட்ட திசையி பார்த்துக் கொண்டு நின்றான், எத்தனை விதக் கற்பனைகளோடு. அவள் விரல்க ளிருகளில், ஆழ்ந்த யோசனைகளில், இ களின் பதிவில், மூடியோடு கழுத்துப் பிறை செருகலில், பிடித்து எழுதும்பே ருணிந்த விரல்களின் அணைப்பில் — பேனா மறுபடியும் பார்த்தபோது எவ்வளவு தே றங்கள் தெரிந்தன அவனுக்கு? காரில் . கார்ந்து சாவியைப் பொருத்திய பிற கிளம்ப மனம் இல்லாமல் கால் அழுத் மல் தூர வெறித்த பார்வையோடு சாய் கொண்டபோது நெஞ்சம் எண்ணங்க ளாய் நிறைந்தது.

மறுபடியும் அவள் அவன் கண்ணில் பட்ட அவன் ஒரு கச்சேரிக்குப் போயிருந்தபோ தான். பாதியிலேயே அவள் முகம் அவனு ருத் தெரிந்து விட்டது. அவள்தான் பார் வில்லை. முடியும்வரை அவன் பார்வ அசையும் தலைகளைக் கடந்து அவள் புற லயித்திருந்தது. யாருடனும் பேசாம ஒரு புறமும் திரும்பாமல் கருத்தா கவனிப்பதில் மலர்ந்து போன விழிகளோ அவள் உட்கார்ந்திருந்த விதம்? தூரத் திருந்து வந்த இசை இதமாய் மனத்தி இறைவதை அனுபவிப்பதைப் போன்று அவ கன்னத்தைக் கையில் தாங்கியபடி கேட்டு கொண்டிருந்த பாவனை?

கூட்டம் கலைந்து வெளியே வரும்போ புடவையின் நிறத்தை அடையாளம் வை துக்கொண்டு அவன் முன் போய் நின்று அவன். அப்போதுதான் கண்டு கொண்ட ளாய் அவள் முகம் நிமிர்ந்தாள். சற் உயர்ந்த புருவங்களில், விரிந்த கண்களி அவனை அடையாளம் புரிந்து கொண்ட பாவனை. கூட்டம் வடிந்து ஒதுங்கிச் சற்று தனியாக வந்ததும் அவன் கேட்டான்:

''அன்று லைப்ரரியில் உங்கள் பேனாவை விட்டு விட்டுப் போய் விட்டீர்கள். நான் எடுத்து வைத்திருக்கிறேன்.''

வியப்புத் தெரிய அவள் திரும்பினாள். ''இன்னும் வைத்திருக்கிறீர்களா அந்தப் பேனாவை?''

''ஓ! ஏன் கேட்கிறீர்கள்?''

''அது என்னுடையது இல்லை. என் பேனா என்னிடம் பத்திரமாக இருக்கிறது.''

அவன் முகம் போன விதத்தைக் கண்டு அவள் 'களுக்'கென்று சிரித்துக் கொண்டாள்.

''இப்படியே போகலாம். நான் என் மாமாவின் காரை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.''

''நான் பஸ்ஸில் போய் விடுவேன்.''

''யாருடனாவது வந்திருக்கிறீர்களா? அவர்களையும்...''

''ஒருவரும் இல்லை. நான் யாரையும் துணை கூட்டிக் கொண்டு வரும் பழக்கம் இல்லை. இப்படிக் கச்சேரிக்கு வருவதும்கூட அபூர்வம்தான்.... வீட்டிலேயே அறையில்

டியோவுக்குத் துணை
க உட்கார்ந்து
ாண்டு கேட்டால்
ாதும் எனக்கு.''
''அப்படியானும் இந்த
் தடவை உங்களைக்
ாண்டு விட்டு விடு
ேறன். நீங்கள் இருக்
் இடத்தையும்
ரிந்து கொண்டாற்
ால் இருக்கும்.''
அவள் அப்புறம்
ருக்கவில்லை. ஆனால்
ருக்கு மேலும் மறுப்
ு பண்பு இல்லை என்று
ப்புக் கொண்டது
ாலத்தான் இருந்தது
து. பின் வீட்டில்
ட்கார்ந்து வேடிக்கை
ார்த்துக் கொண்டே
ந்தான். இறங்கும்வரை
ரவில்லை. இறங்கியே
ும் அவன் கேட்டான்.
அப்போது நான் என்ன
சய்யட்டும்?''
''எதை?''
''அந்தப் பேனாவை!''
அவள் பதில் ஏதும்
சொல்லாமல் சிரித்துக்
கொண்டே உள்ளே போய்விட்டாள். அவ
ளிடமிருந்து ஒரு துடிப்பு நிறைந்த குறும்புத்
தனமான பதிலை அவன் எதிர்பார்த்தான்.
ஏது கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு
ஏமாற்றம்தான். அவனை உள்ளே வரும்
படி அழைக்கவில்லை. தன்னைப் பற்றி
ஏதையுமே சொல்லிக் கொள்ளவில்லை, பெய
ரையும் கூட. அன்று லைப்ரரிப் புத்தகத்தில்
வைத்திருந்த கார்டிலிருந்து அவன் தெரிந்து
கொண்டதுதான் அந்தப் பெயரும் கூட.

டெலிபோன் டைரக்டரியைப் புரட்டிக்
கொண்டே வந்தபோது அந்த விலாசம்
கண்ணில் பட்டது. பிற்பகல் நேரம் அது.
வீட்டில் இருக்கலாமோ? அவள் தந்தை,
மற்றவர்களும் இருப்பார்களோ? நம்பரைத்
திருப்பி விட்டு மணியோசையைக் கேட்க
ஆரம்பித்த பிறகு, அது நிற்கும் வரையில்
மனம் எதிர்பார்ப்பில் உயர்ந்து நின்றது.
சட்டென்று குரல் கேட்டபோது உடனே
பெயரைச் சொல்ல, தன்னை அறிமுகப்
படுத்திக் கொள்ள முடியாமல் ஒரு தடு
மாற்றம். கடைசியில் அவன் பேசியபோது
அவள் பதில் பின்தங்கி நின்றது.

''வேறு முக்கியமான விஷயம் எதுவும்
இல்லையே?''

''இல்லை.''

''அப்படி யிருந்தாலும் நீங்கள் இங்கே
வீட்டுக்கு வந்து அப்பாவிடம் சொல்வது
தான் நல்லது என்று எனக்குப் படுகிறது.
நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?''

''ஆகட்டும் — தாங்க்ஸ்!''

அவள் மறு முனையில் போனை வைத்து
விட்ட சத்தம் கேட்டது. ஒளி மயமாய்



''ஏன் சார்; உங்களுக்கிருந்த சர்க்கரை வியாதி போயிடுத்தே. இன்னமும் ஏன் இந்தக் கவலை?''

''இதுவரை நான் உபயோகிச்சிண்டிருந்த சர்க்கரைக் கார்டு இனிமேல் டாக்டருக்கு வேணும்னு சொல்லிட்டாரே!''

எதிர்பார்த்த பொறிகள்
கணப்பொழுதில் மினுக்
கல் கூட இன்றி அடங்கி
விட்டன. மனக் குகை
யில் கலந்த இருட் பட
லங்கள் விரிந்து எழுந்து
திரும்பவும் மீண்டபோது
அந்த இருள் அவனையும்
கவ்வித் தன்னுள் இழுத்
தது.

பின்வாங்கும் அலை
போல் அவள் அப்படிப்
பின்னுக்கு மறைந்து விட்
டாள். ஆனால் அவனால்
மறந்து ஒதுக்க முடிய
வில்லை. அப்படி நெருங்க
இயலாத ஏக்கமே அவன்
ஆவலை விசிறி எழுப்பி
யது. சில சமயங்களில்
வாழ்க்கையின் இன்பப்
பகுதிகளைப் பலவந்த
மாகவே வாழ்க்கையி
லின்றும் பிடுங்கி அனுப
விக்கத் தோன்றும்.
அந்த வேகம் அவனுக்கு
அடங்கக் கூடியதாக
இல்லை.

ஒரு நாள் அவன்
எதிர்பாராமல் போய்
அவளைத் திகைக்க வைக்க வேண்டுமென்று
அவன் சென்றபோது அவள் இல்லை. அவள்
தந்தைதான் இருந்தார். அவளைப் பார்க்கவே
வந்து விட்டு அவள் இல்லாமல் தன்னை
அறிமுகப்படுத்திக் கொள்ளும் காரியம்,
எளிதாக இல்லை. ஆனாலும் அவர் பேச்சில்
சரளத்துக்குக் குறைவில்லை. வாழை இலை
மேல் அல்வாத் துண்டு போல் பேச்சு
விஷயத்துக்கு விஷயம் வழுக்கிக் கொண்டே
போயிற்று; கல்யாணியைப் பற்றிய பேச்சு
வரும்வரையில்.

''அவள் சிறு குழந்தையாக இருந்த
போதே தாயை இழந்து விட்டாள். நான்
மறுபடியும் மணந்து கொண்டேன்; அவளை
வளர்ப்பதற்காகவே என்று ஒரு சமாதானம்
சொல்லிக் கொண்டு. ஆனால் குழந்தை
ஒதுங்கி விட்டாள். இயல்பாகவே அதிகம்
வெளிப்படையாகப் பழகாத சுபாவம்.
தன்னைத் தானே பார்த்துக் கொண்டு பிற
ருடன் கலக்காமல் நின்று விடுவாள். ஒரு
வேளை அவள் தாயார் அவளைத் தன் அன்
பின் அணைப்பில் இழுத்துச் சேர்த்துக்
கொண்டிருக்கலாம். ஆனால் அவள் சித்தி
யால் அப்படிச் செய்ய முடியவில்லை. குடும்
பத்தில் அப்புறம் வந்து விட்ட குழந்தை
களுக்கு இடையில், எங்கள் எல்லோருக்கும்
நடுவில் அவள் மட்டும் தனி; ஒதுங்கினாற்
போல. அப்படியே வளர்ந்து விட்டாள்.
இப்போது அவளை மணம் செய்து கொடுக்க
வேண்டிய பருவம் வந்து விட்ட பிறகு,
எனக்குக் கவலை ஒன்றுதான். அவளுடைய
திரட்வான இந்தக் குணத்தின் அழகை
உணர்ந்து வர்ணிக்கக் கூடிய மென்மையும்

பொறுமையும் உள்ளவனாக அவளுக்குக் கணவன் அமைய வேண்டும்.''

அவன் அதிகம் யோசிக்கவில்லை; ஆனாலும் அப்படி இருக்க முடியுமா என்று. கல்யாணியை மணந்து அழைத்துக் கொண்டு வந்து விட்டபோது ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போன்ற பெருமையேதான் அவனுக்கு.

தனியாக அவர்கள் வந்து குடித்தனம் தொடங்கும் வரை அவள் தன் புடவைகள், நகைகள், திருமணப் பரிசுகளையும் கூட அவனிடம் காட்டவில்லை. அவனுக்கென அவளைப் பிரித்து உட்கார வைத்துக் காட்டச் சொன்னபோதும் கூட வெட்கம் கலந்த ஒரு தயக்கம்தான் இருந்தது அவளிடம்.

அவளை வெற்றி கொண்டு விட்ட உணர்வின் முறுக்கில அவளை அவன் வியப்பாக இழுத்துச் சேர்த்துக் கொண்ட வேளையிலும் கூட அவள் தனியே பிரிந்து நிற்பது போலத்தான் இருந்தது. வெறும் நாணத்தின் குறும்பு மட்டும்தானா அது? வெளிச்சத்தில் பளபளத்த அழகிய வாரிய கூந்தல். கைகளில் குலுங்கிக் கூட [illegible] அடுக்கிய வளையல்கள். அவளை ஒரு தங்கநிலவு போல் ஒளிரும் அழகின் மிளிர்ச்சி. அதை முழுதும் அடைந்து அதன் சோலையில் தன்னை இழக்க விரும்பும் அவன் கனவு மீதும் அவளுக்கு அவன் ஓர் அந்நியனாகத் தோன்றினான்.

''கல்யாணி! உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''நீ உனக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இலக்கியங்களை, என்னிடமும் கேட்டு, கலந்து, வாங்கியிருக்கலாம். அப்போது, எனக்கு உன்னிடம் ஏதோ ஒரு சுவாதீனம், அழுத்தமாக விழுந்திருக்கக் கூடுமென்று தோன்றுகிறது.''

அவள் சிரித்துக் கொண்டாள். தன்னை அவன் பிடியிலிருந்து நிதானமாய் விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றாள். ''இப்போது என்னமோ உங்களுக்கு [illegible]?'' என்று நளினமாகத் தலையை அசைத்து விட்டுப் போய் விட்டாள். அந்தப் போக்கு, அவனுடைய எண்ணங்கள் உருவாகி எழுந்து நின்ற நேரத்தில் அவள் விலகிக் கொண்டது சட்டென்று தனிமையில் தூங்கி விட்ட ஒதுக்கம் எல்லாம் அவனை ஓர் ஏக்கத்தில் கட்டி நிறுத்தியது போல இருந்தது.

பக்கத்து வீட்டுக்காரர் அவனுடைய தந்தைக்குத் தெரிந்தவர். அவனைப் பார்க்கும்போதெல்லாம் நிறுத்தி விசாரிப்பார். அந்த நாளில் அவர் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது நடத்திய வழக்குகள், பிடிபட்ட கடைக்காரர் இருந்து போட்ட உத்தரவுகள் எல்லாவற்றையும் கேட்கச் சுவாரஸ்யமாக இருக்கும். தெருவிலேயே நின்று நேரம் போவது தெரியாமல் பேசுவார்.

அவர்கள் குடித்தனம் தொடங்கிய புதிதில் அவர்களை வந்திருந்தார்கள். இருவரையும் பார்க்க. ஒரு கிண்ணத்தில் அருமையாகச் செய்து கொண்டு வந்திருந்த ஸ்வீட்டுப் பால். ''சங்கோசப்படாதே. அடிக்கடி வந்து கொண்டிரு. என்ன வேண்டுமோ தாராளமாக வந்து கேள்'' என்று சொ விட்டுப் போனாள் அந்த அம்மாள்.

அவர்கள் போனதும் ''நாம் ஏன் உ ளுக்குச் சிரமம் கொடுக்க வேண்டு'' என்று கேட்டாள் கல்யாணி.

''சிரமம் ஏதுவும் இல்லை. அந்த அம் உன்னைத் தாய் போலக் கவனித்துக்கொ வாள்.'' சொல்லி விட்டதும் அந்தக் குற் அவனுக்கே ஆத்திரமாக இருந்தது. அ மணியில் அலையும் நாக்கைப் போல அ கண்களில் அலைப்பு. மணிவேகத்தைப் போல அது நெடுநேரம் மனத்தில் ரோஷம் ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது.

அவன் சொன்னதுதான் மிச்சம். காமணி வீட்டை விட்டு இறங்கிய நாளில்

''உங்களை நான் இப்போது அதிகம் பார் தில்லை'' என்று ஒரு நாள் ஆரம்பித்த கஸ்தூரி, அவனைச் சந்திக்கும்போது.

''உங்களுக்குத் தொந்தரவாக இரு வேண்டாமென்று பார்க்கிறோம்.''

''அப்படி யார் நினைப்பார்கள்?''

''நீ நினைக்காமல் இருக்கலாம் கஸ்தூ'' என்று அவர் திருத்தினார். ''அவளுக் கல்யாணி வந்து போவதில்லை என்று பெ குறை....!''

அவனும் ஏதுவும் சொல்ல முடியவில்லை. தன் குறையை அவன் யாரிடம் சொல்லிக் கொள்ள முடியும்? தன் ஆசைப்படும் இள அழகையும் அருவியாய்ப் பாய்ந்து வோடும் ஒரு வாழ்க்கையே தன் வாழ்க்கை அவன் எதிர்பார்த்திருந்தான். ஆசை அன்பும் விளைந்து பொங்க, அவளை உ ளத்தில் இழுத்து வைப்பு செய்து தன்னி ஈர்க்க வைக்கும் மகிமையைத்தான் அ வேண்டினான். தனக்குள்ளேயே சுருங்கி ஒ டுக்கிக்கொண்டு எங்கும் காலைத்துப் பறவை போல் கூட்டில் அடைந்து நிற்கும் பெ ண்ணையா அவன் வேண்டினான்? வாழ்க்கை யின் பகுதிகளை மென்மையாய், மனதுவா ரசித்து அனுபவித்து மகிழ வேண்டியவ ளாக, பூவின் மணமாய், வான வில்லி அழகாய், நிலவின் ஒளியாய், இயற்கை யும் வெளிப்படைப் புரிவாய் பே இருப்பதுதான் தவம். குயிலை நாவிலு அனுபவிக்கலாம். இசையை வாய் திற பாட வேண்டாமா? கற்பூரம் தட்டிக் கொடுத்தாய் நிற்கலாம். குத்துவிள வெளியே ஒளி பரப்ப வேண்டாமா?

கல்யாணி அவன் வற்புறுத்தினாலொழி வெளியே வருவதில்லை. அப்போதும் ''நீ போய் மாதத்துக்கு ஒரு முறை போன போதும்'' என்று வரம்பு இட்டுக்கொ வாள். அவன் பொறுமை இழந்து பூக் கடைக்கும், கடற்கரைக்கும் கட்டாயப் அழைத்துச் செல்லும்போது அங்கே நிமிஷங்களை தன்னை மறந்து அவனுட கலகலவென்று பழகுவாள். மீண்டும் அ கேள்விகளுக்கு அதே மனத்துடன் ப கூறித் தன் கவசங்களுக்குள் புகுந்து கொ ள்வாள். இந்தக் கூட்டுப் புழு என்று வ ண்ணத்துப் பூச்சியாய் வெளிப் பறக்கும்? அ வாழ்க்கையில் வசந்தம் என்று?

அன்று ஞாயிற்றுக்கிழமை. அவன் வாசற்புறத்துத் தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். திடீரென்று ஸ்திரீயின் கரஸ்பரிசம் படவே அவன் சட்டென்று விழித்துக் கொண்டான். தவம் கலைந்த யோகியைப் போல் அவன் கண்களில் ஒரு திகைப்பு.

"என்ன யோசனை கல்யாணி?"

"ஒன்றுமில்லை."

"என்னிடம் சொல்லக் கூடாதா? உன் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளும் உரிமை கூட இல்லையா எனக்கு?"

அவள் விழியோரங்களில் கண்ணீர் புறப்பட்டது. கீழே உட்கார்ந்து அவன் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"எனக்கு உடம்பு சரியாக இல்லை.... நாளைக்கு லேடி டாக்டரிடம் காட்டலாமென்றிருக்கிறேன்."

"கல்யாணி...!"

வெளியே மரங்கள் அசைந்தன. அவள் அவனுக்கு இன்னும் நேர் முகம் கொடுக்கவில்லை. புதைந்த முகம் நிமிரவில்லை. அவளுக்குத் தாயிருந்தால் அவளிடம் சுவாதீனமாகச் சொல்லிப் பகிர்ந்து கொண்டிருப்பாளா அந்தச் செய்தியை? அவனிடம் அவளுக்கு ஏன் இந்தச் சுதந்திரம் தோன்றவில்லை...?

"கல்யாணி, என்னைப் பார்த்துச் சொல்."

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை."

அவளிடமிருந்து அதற்குமேல் பதில் புறப்படாது; அவனுக்குத் தெரியும். அவன் வற்புறுத்தவில்லை.

இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவனுக்கு அந்தப் பேச்சை மீண்டும் எடுக்கத் தோன்றியது.

"நீ ஏன் என்னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லை முதலிலேயே?"

"நிச்சயமாய்த் தெரிந்து கொண்டு சொல்லலாமென்று இருந்தேன்."

அவன் கை பிசைந்த சோற்றைத் துளாவியபடி நின்றது. சாப்பிடத் தோன்றவில்லை.

"நானும் கூட உனக்கு அந்நியன் என்று எப்படி நீ நினைக்கிறாய் கல்யாணி. நாம் மணந்து கொண்டவர்கள். உன்னை முழுவதும் என்னிடம் வெளியிட உனக்குச் சுவாதீனம் உண்டு. எனக்கும் அந்த உரிமை உண்டு. நான் பக்கத்து வீட்டு மனிதர்களோடு சேர்ந்தவனில்லை."

அவள் பதில் சொல்லவில்லை. சட்டென்று பொங்கிய அந்த வேகம் அவள் அதுவரை காணாதது. அசைவற்று நின்றாள். அவன் சாப்பிடாமலே எழுந்து போய் விட்டான்.

பஸ்ஸிலிருந்து எல்லோரும் இறங்கிவிட்டார்கள். வலைக்குள்ளேயே நகரும் சிலந்தியைப் போலத் தன் எண்ணங்கள் கலையாமல் அவனும் எழுந்து இறங்கினான்.

வேலைக்கு வந்து உட்கார்ந்தும் நினைவோட்டம் அடங்கவில்லை. அது தனி அறை. போன் உண்டு. கேட்டிருந்தால் அவனுக்கு போன் கிடைத்திருக்கும் வீட்டிலும் கூட. பதினொரு மணி ஆனதும் வீட்டுக்கு போன் செய்யலாம். ஆனால் அவன் கேட்கவில்லை. கல்யாணியுடன் என்ன பேச முடியும்? — அப்படி நேரில் கொட்டி ஆற்ற முடியாததை? அப்படி அவள் பேசினாலும் இரண்டு வார்த்தைகளுக்கு ஒரு தடவை "வைத்துவிடட்டுமா?" என்று கேட்பாள்; அவ்வளவுதான்.



"உங்க முகத்தைப் பார்த்து ரொம்ப நாளா உங்களைக் கேட்கணும்னு இருந்தேன். ஒரு நாளைக்கு நீங்கள் எத்தனை தடவை முக க்ஷவரம் செய்கிறீர்கள்?"

"சுமார் இருபது தடவை!"

"சிவ! சிவ! நாள் பூராவும் இதே தொழிலாவன்னு போய்விடும்."

"ஆமாங்க! தொழிலாத்தான் நடத்தறேன். நான் ஒரு ஸலூன்காரர்."

கல்யாணி மாறி விடுவாள் எப்படியும். அவள் வாழ்க்கையில் இது ஓர் இடைவேளை; அவ்வளவே. அடங்கா ஆர்வத்துடன் அவளை அவன் இறுகப் புல்லுகையில் ஒரு நாள் அவளைத் தன்னுடன் ஒன்றியவளாக உணர்ந்து கொள்வான். அவள் தன் கூட்டை உடைத்து வெளி வந்து விடுவாள்; நிச்சயமாக. அதுவரை அவன் தன்னைக் கட்டி நிலை நிறுத்திக்கொள்ளவேண்டும்; பொறுமையாக.

அவன் பொறுத்திருக்கலாம். அவர்கள் குழந்தை? அவளுடைய தாயன்பும் இப்படித்தான் குடத்துவிளக்காக இருக்குமா? அதன் இதம் காணக் குழந்தையால் பொறுத்திருக்க முடியுமா? அவ்வளவு தூரம் குழந்தைக்கும் தெரிய வேண்டியிருக்குமா? அவள் மடியில் குழைந்து அவள் முகம் பார்க்கும் குழந்தையும், "அப்பா! ஏன் அம்மா இப்படி இருக்கிறாள்?" என்று கேட்கும் பார்வையாகப் பார்க்குமோ? தன் குழந்தைப் பருவத்தில் இழந்து தவித்த தவிப்பைக் குழந்தையாவது உணராமல் இருக்கட்டுமென்று நினைப்பாளா கல்யாணி?

போன் மணி அடித்தது.

யாராக இருக்கும்? ஏதோ ஒரு கம்பெனி விலாசம் விவரம், விலை — இப்படி ஏதாவது

தான் இருக்கும். உத்தியோக பாணியில் அனுவலகத்தின் பெயரைச் சொன்னான்.

''யார் பேசுகிறது?''

அந்தப் பதில் அவனை உலுக்கிற்று. கனவு கலைந்தவனைப்போல் எழுந்து உட்கார்ந்தான். ''கஸ்தூரி — நீ?''

''நான்தான் பேசுகிறேன்.''

வெல்வெட்டுப் போல அந்தக் குரலின் மென்மை. அவன் அருகே. அவன் காதுமடலை அந்த முகம் நெருங்கி விட்டதைப் போன்ற உணர்வு. அந்தக் குரல் நிதானமாய் பூரண வடிவுடன் இருளிலிருந்து பிரிந்து வருவதைப் போலத் தோன்றியது.

''சொல்லு கல்யாணி.''

''நர்ஸிங் ஹோமிலிருந்து பேசுகிறேன். நீங்கள் முடியுமானால் லீவு போட்டுவிட்டு வருகிறீர்களா? ஒன்றுமில்லை. சும்மாத்தான். எல்லாம் நார்மல்.''

''ஆகட்டும். அரை மணியில் வந்துவிடுவேன். நீ அங்கேயே காத்திரு. என்ன?''

''சரி.''

அவன் போனை வைத்து விட்டான். அவன் லீவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டான். அவள் காத்திருப்பாள் இப்போது; அவனுக்காக. அவள் என்ன சொல்ல விரும்புகிறாள் அவனிடம். அப்பொழுதாவது அந்த வேளையிலாவது அவள் தன் மனத்தை அவனிடம் திறந்து காட்டுவாளா? அவள் அந்தரங்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் கவனம் அவனுக்குக் கிடைக்குமா?

டாக்ஸி போய் நின்றபோது அவள் கேட்டருகே காத்துக் கொண்டிருந்தாள். அவள் ஏறிக்கொண்டதும் அவன் கேட்டான்: ''எங்கே போகலாம்?''

''ஏன்? வீட்டுக்கு.''

''இல்லை. எங்கேயாவது போய்விட்டுப் போகலாம்'' என்று அவள் புறம் திரும்பினான். ''உனக்குத் தடை ஒன்றும் இல்லையே?''

நீட்டிய கைக்கு எட்டாது அவள் உடலை நெளித்துக் கொண்டாள்.

கடற்கரையை யொட்டிய ஹோட்டல் அது. ஜன்னல் திரையை இழுத்தால் வெளியே நீல வானத்தின் பிதுக்கமாய்த் தெரியும் கடல். பிற்பகலில் அலைகள் அடங்கிய வேளை. ஆரவாரமும் அலைகள் புரள்வதும் இன்றி அடக்கமான குளமெனத் தேங்கிய நீர். கல்யாணியைப் போலத்தானு அதுவும்?

''எனக்கே தெரியவில்லை. ஏதோ இனம் புரியாமல். எனக்கே கலக்கமாக இருக்கிறது.''

அவன் அவள் விரல்களை இதமாய் அழுத்தினான்; ஆறுதல் சொல்வதைப் போல.

''என்னுல் மறுக்க முடியவில்லை... என்னுள் ஓர் உயிர் வளர்கிறது. இப்போது... இனி நான் தனியில்லை.... தனியாக இருக்க முடியாது. என்னிடமிருந்து உயிரும் உணர்வும் அது பெறும்போது இனி நான் அதற்கு இடம் கொடுத்தே ஆக வேண்டும்.... நான் பங்கிட்டுக்கொண்டே ஆகவேண்டும். எனக்கு மட்டும் என்று இனி ஒதுங்க முடியாது.''

அவள் பேச்சு தயங்கி வந்தது; பூ மெல்ல மெல்ல இதழ் அவிழ்வதுபோல. அவள் உணர்வின் மணம் அவன் மேல் அலை மோதிற்று.

''இந்த மாறுதல் நான் இருபது வருஷங்களாய் உணராதது... இருட்டிலிருந்து வெளியே வருவதைப் போல் இருக்கிறது. அந்த அனுபவமில்லாத வெளிச்சத்தில் கண் கூசுவதைப் போல் என்னுள் ஒரு த மாற்றம்.... என்னுல் அதைத் தனியே சமாளிக்க முடியாது இனிமேல்.''

தந்தியிலிருந்து எழுந்து அடங்கிய நாத போல் அவள் குரல் மென்மையாய்ப் பிரிந்து அடங்கிற்று. மறுபடியும் மௌனமானுள் இரவின் தனிமையில் பனித் துளியை உதிர்க்கும் மலரிதழ் போல் அவள் கண்கள். த ஏக்கத்தில், தன்னை அதுவரை வெளியிடா மறுப்பில் அப்போது அதைத் திறந்துவிட்ட புதுமை உணர்வில் துடிக்கும் இதழ்கள்.

உதடுகள் அல்ல. இதயம்தானே?

அவன் அவள் கையைத் தன் மடிமேல் இழுத்துக் கொண்டான், ஆறுதலாக.

''உன்னோடு நான் இருக்கிறேன்...' எப போதும்... உன்னோடு.... தைரியமாக இரு போகப் போக எல்லாம் சரியாகி விடும்.'

அந்த ஆறுதல் சொற்களை அப்புறம் அவள் நினைத்துக் கொண்டே யிருந்தாளோ? தனிமையில் அவன் தோளில் அவள் முகம் பதிய அமர்ந்திருந்தபோது? விடி விளக்கு அடங்கும் வேளையில் அவன் மார்பில் அவள் கைகள் கோத்து நிற்க உறங்கியபோது?- கனவுகள் சித்திரம் விரிக்கும் உறக்கத்தில் மெல்லெனச் சிரிக்கும் இதழ்கள் அவன் கழுத்து வளைவில் மயங்கி ஒன்றியபோது?

காலையில் எழுந்திருக்கச் சற்று நேரமாகி விட்டது. அவன் காப்பியை முடித்துக் கொண்டு கண்ணுடிக்கு எதிரே உட்கார்ந்த போது ஜன்னல் வழியே பக்கத்து வீடு தெரிந்தது. வேலிக்கு அப்பால் பூந்தோட்டம். பூப்பறித்துக் கொண்டிருந்த அம்மாவின் பக்கத்தில் கல்யாணி நின்றுகொண்டிருந்தாள். ஒரு கணம் அதை நம்ப முடியாமல் ஜன்னலருகே நகர்ந்து நின்றான் கஸ்தூரி. பூங்கொத்துக்களுக்கு அப்பால் அவர்கள் நின்று பேசும் குரல் கேட்டது.

கல்யாணியின் தயக்கம் பிரிந்த குரல். கலகலவென்று பேசில்லாவிடினும் அதில் பழைய நிறுத்தம் இல்லை. வார்த்தைகளுக்கு நடுவே அந்த மென் சிரிப்பு, விசாரிக்கும் போது படியும் நயம், நெருங்கியது போலப் பேசும் மென்மை, இவைகளில் சட்டென்று ஓர் உண்மை தெரிந்தது இப்போது. தாய்மையைப் பற்றி, குழந்தையைப் பற்றி, ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாள். கனிவோடு வந்த பதில்கள், கடைசியில் அவள் புறப்பட்டபோது, கை நிறையப் பறித்துக் கொடுத்த மலர்களில் இயல்பான அன்பின் நெகிழ்ச்சியும் ஆதரவும் தெரிந்தன.

கல்யாணி உள்ளே வந்து கொண்டிருந்தாள். மனத்தில் ஒரு புத்துணர்ச்சியின் அடையாளம் தெரிந்தது.

கூடு உடைந்து விட்டது. அவன் கண்ணையும் அகத்தையும் குளிர வைக்கும் வண்ணத்துப் பூச்சி பறக்க ஆரம்பித்து விட்டது.

சிரிக்கவும் சிந்திக்கவும்

பிரபல ஹாஸ்ய ஆசிரியரான மார்க் ட்வெயினைப் பார்ப்பதற்காக, அவரது 'விசிறி' ஒருவர் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார். ட்வெயினின் அறையில் புத்தகங்கள் அங்குமிங்குமாகக் கிடந்தன.

"இவற்றை ஷெல்புகளில் வைக்கக் கூடாதா?" என்று வந்தவர் கேட்டார்.

"வைக்கலாம். ஆனால் என் நண்பர்களிடமிருந்து புத்தகங்கள் கடன் வாங்கி வரும்போது ஷெல்புகளையும் என் முதுகில் தூக்கிக் கொண்டு வருவது நன்றாக இராதல்லவா?" என்று ட்வெயின் புன்னகையுடன் பதிலளித்தார்.

* * *

துப்பறியும் சிங்கமான ஷெர்லக் ஹோம்ஸும் அவரது சகாவான வாட்ஸனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஹோம்ஸ்: பத்திரிகையைச் சிரித்துக் கொண்டே படித்துக் கொண்டிருக்கிறீர்களே, அப்படி என்ன குஷிகரமான விஷயம்?

வாட்ஸன்: ஒன்றுமில்லை. ஒரு சர்வகலாசாலை வாசகசாலையிலிருந்து சுமார் ரூ. 4000 பெறுமான 432 புத்தகங்கள் காணாமற் போய் விட்டனவாம். அதைப்பற்றி ஸெனேட்டில் பேசிக் கொண்டிருந்த போது திருபுகாரி என்ற அங்கத்தினர் "புத்தகத்தைக் கடன் கொடுப்பவன் ஒரு முட்டாள். அதைவிடப் பெரிய முட்டாள் அதைத் திரும்பக் கொடுப்பவன்" என்றாராம். அதைக் கேட்டு எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.



ஹோம்ஸ்: ஸெனெட் அங்கத்தினர்களே சிரிப்பது ஆச்சரியப்படத் தக்கதுதான். ஆமாம்! அந்தப் புத்தகங்கள் எப்படிக் காணாமற் போயினவாம்?

வாட்ஸன்: வாசகசாலைக்கு வருபவர்களே புத்தகங்களுள்ள ஷெல்புகளுக்குச் சென்று அவற்றை எடுத்துக் கொள்ள வசதி உண்டாம். வாசகசாலைக்கு வருஷமொன்றுக்கு லட்சம் பேர் வருகிறார்களாம். அவர்களைச் சோதனை செய்து பார்ப்பதென்பது நடைமுறையில் பின்பற்றக் கூடிய காரியமல்லவாம்.

ஹோம்ஸ்: ஆகவே, வாசகசாலைக்கு வரும் பட்டதாரி வாலிபர்கள், பெண்மணிகள் ஆராய்ச்சிக்காரர்கள் முதலியவர்கள் அவற்றைத் திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று மறைமுகமாகச் சொல்கிறார்களல்லவா? லட்சக் கணக்கான பேர் இப்படி அவமானப்படுத்தப் படுகின்றனர். ஏன் மிஸ்டர் வாட்ஸன்! தாங்கள் ஒரு முறை அந்த வாசகசாலைக்குச் சென்றிருப்பதாகச் சொல்லியதாக ஞாபகம். வாசகர் புத்தகத்தை வெளியில் எப்படி எடுத்துச் செல்ல முடியும்?

வாட்ஸன்: உள்ளேயிருந்து புத்தகத்தை எடுத்துக் கொண்டு வருபவர்கள் ஓர் ஆள் மட்டுமே நுழையக் கூடிய ஒரு கதவு வழியே வரவேண்டும். அங்கே குமாஸ்தாக்கள் இருப்பார்கள். அவர்களிடம் அவற்றையும், புத்தகம் பெறுவதற்கான டிக்கட்டுகளையும் கொடுக்க வேண்டும். அவர்கள் டிக்கட்டுகளை எடுத்துக் கொண்டு புத்தகத்தில் அது திரும்பக் கொடுக்கப்பட வேண்டிய தேதியைப் பட்டும் படாததுமாக முத்திரை போட்டுக் கொடுப்பார்கள். அதற்குப் பிறகே புத்தகங்களை வெளியில் கொண்டுவர முடியும்.

ஹோம்ஸ்: வாசகசாலைக்கு வருபவர்கள் எப்படி உடை உடுத்தியிருப்பார்கள்?

வாட்ஸன்: ஆண்கள் இடையில் பாண்ட்ஸ் தரித்து மேலே புஷ் அரை ஷர்ட் போட்டிருப்பார்கள். பெண்கள் மிக மெல்லியதான நாலே முக்கால் கஜம் புடவை அணிந்திருப்பார்கள். நம்மைப் போல் கோட்டுகள் போட்டுக் கொண்டு வருபவர்கள் இல்லை.

ஹோம்ஸ் பத்து விநாடி காலம் யோசனை செய்து பார்த்துவிட்டுக் கூறினார்:

ஒரு பையன் தன்னுடைய புஷ் சட்டைக்குள்ளோ ஒரு பெண் தன் ஜாக்கெட்டுக்குள்ளோ புத்தகத்தை எடுத்து ஒளித்து வைத்துக் கொள்ள முடியாது. குமாஸ்தாக்கள் சில சமயம் புத்தக டிக்கட் வாங்கிக் கொள்ளாமலே, தமக்கு வேண்டியவர்களுக்குப் புத்தகத்தைக் கொடுத்தனுப்பி விடலாம். வாசகசாலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, சர்வ கலாசாலை அத்யக்ஷகரோ, உப அத்தியக்ஷகரோ, ரிஜிஸ்திராரோ அல்லது முக்கியமான ஸெனெட் அங்கத்தினர்களோ புத்தகங்களை எடுத்துக் கொண்டு போனாலும் அவர்களை டிக்கெட் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அவர்களிடம் புத்தகங்களைத் திருப்பிக் கேட்கக் குமாஸ்தா துணிய மாட்டார். ஆகவே, வாசகர்கள் மீது குற்றத்தைச் சுமத்துவது தப்பு. நான் அந்த வாசகசாலை அங்கத்தினரா யிருந்தால் ஸெனெட் மீது மான நஷ்ட வழக்குத் தொடுப்பேன்.

* * *

குடும்ப ரேஷன் கார்டு சம்பந்தமாகத் தகவல் சேகரிப்பதற்காக ஒரு 'ஹோம் கார்டு' ஒரு வீட்டுக்கு வந்திருந்தார் :

ஹோ. கா. : தங்கள் குடும்பத்தில் பெரியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

வீட்டுக்காரர்: நான் ஒருவன்தான். எனக்குக் கல்யாணமாக வில்லை.

ஹோ. கா. : சரி, பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் எத்தனை பேர்?

கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏதோ மனஸ்தாபம். கணவன் அவளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகிறான். மனைவி வாயைத் திறந்து ஒரு வார்த்தை பதில் சொல்லவில்லை. ஆனால், உதட்டைப் பிதுக்குதல், பல்லைக் கடித்தல், பெருமூச்சு விடுதல், கண் கோடியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொள்ளுதல் முதலிய பல செய்கைகளால் தன் பதிலைத் தெரிவிக்கிறாள். ஸ்வீடன்தேசத்து நாடகாசிரியரான அகஸ்டஸ் ஸ்டிரின்ட்பர்க் இத்தகைய நாடகமொன்று எழுதியிருக்கிறார்:

சமீபத்தில் மாஸ்கோவில் கிட்டத்தட்ட இத்தகைய காட்சி ஒன்று நடைபெற்றது. ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி பிரெஷ்னெவ் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். சீனப் பிரதமர் சூ என் லாய் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ பிரெஷ்னெவ்: மங்கோலியா சுதந்திரமான நாடாகவே இருந்து கொண்டிருக்கும்.... இன்னொரு உலக யுத்தம் ஏற்படாமல் இருப்பது நல்லது.

[ஸ்ரீ சூ முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு மரக்கட்டை போல் உட்கார்ந்திருந்தார்.]

ஸ்ரீ பிரஷ்னெவ்: கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும்.

[சூ மிகவும் பலமாகக் கரகோஷம் செய்தார்.]

ஸ்ரீ பிரெஷ்னெவ்: உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றாக வேண்டுமென்று நான் திரும்பவும் வற்புறுத்துகிறேன்.

[ஸ்ரீ சூ அண்ணாந்து மேல் மண்டபத்தைப் பார்த்தார்.]

ஸ்ரீ பிரெஷ்னெவ்: சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான பெருமை...

[ஸ்ரீ சூ நாற்காலியில் அப்படியே ஒடுங்கிய வண்ணம் உட்கார்ந்து கைகளை ஒன்றன் மீது ஒன்றை மடித்து வைத்துக் கொண்டார்.]

தாம் இப்படி நடிக்க முடியும் என்பதைச் சீனப் பிரதமர் தம் எகிப்திய விஜயத்தின் போது நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அங்கே நீல நதியின் மீது கட்டப்பட்டுள்ள அஸ்வான் அணைக்கட்டைப் பார்த்தபோது கூவம் நதிக் கரையில் உலவிக் கொண்டிருப்பதைப் போன்று முகத்தை வைத்துக் கொண்டார்.

நல்லவேளை ஸ்ரீ பிரெஷ்னெவ் ''இந்தியாவுக்கு எம். ஐ. ஜி. விமானங்கள்...'' என்று ஆரம்பிக்கவில்லை.



''என்னங்க! இந்த அரிசிப் பஞ்சம் நம் சர்க்காரின் சாதனை என்கிறீரே; அது எப்படி?''

''ஆமாம்! ரஷ்யா அமெரிக்கா போன்ற தேசங்கள் செயற்கைக் கிரஹங்கள் விட்டுச் சாதிக்கிறார்களே, அதேமாதிரி நாமும் ஏதேனும் செய்ய வேண்டும் என்று செயற்கைப் பஞ்சத்தை உண்டாக்கி யிருக்கலாம்.''

சீனப் பிரதமர் அதைக் கேட்ட மாத்திரத்தில் நாற்காலியிலிருந்து மேலே மண்டபத்தை நோக்கி எழும்பியிருப்பார்!

* * *

ஒரு விசித்திரமான கற்பனை மனத்தில் எழுந்தது. கி. பி. 2964ம் ஆண்டு ஒரு சரித்திரப் பேராசிரியர் மாணவர்களுக்குப் பின்வருமாறு பிரசங்கம் செய்யக் கூடும்:

''அணுகுண்டு யுத்தங்களின் பயனாய் உலகத்தில் பெரும்பாகம் மண்மாரியால் அழிந்து போய் விட்டது. நாசமாகாமல் தப்பிய ஒன்றிரண்டு கட்டடங்களில் புதைந்து கிடந்திருந்த பத்திரிகைத் துண்டங்களைக் கொண்டே அவைகளைப் பற்றி ஒருவாறு ஊகிக்க முடிகிறது.

''பண்டையத் தமிழர்கள் அரிசி, கோதுமை முதலிய உணவுத் தானியங்களை வயல்களில் மட்டுமின்றித் துறைமுகங்களிலும் உற்பத்தி செய்தார்கள். கொழும்புத் திட்டம் பி. எல். 480 திட்டம் என்ற எருக்களின் உதவியால் தானியங்கள் கப்பல்களில் மூட்டை மூட்டைகளாகவே உற்பத்தியாயின.

''வயிறு என்றும் குடல், தொப்பை, இரைப்பை முதலியன சேர்ந்த பாகத்துக்குப் பொதுவான பெயர். ஆனால் தமிழர்கள் இதையறியவில்லை. இரைப் பை என்பதில் மட்டுமே உணவு செல்லும் என்பது அவர்களுக்குத் தெரியாது. வயிற்றை நிரப்ப வேண்டும் என்று எண்ணிக்கொண்டு தவறா வேளைக்கு ஓர் ஆழாக்கு விதம் சாப்பிட்டு வந்தார்கள். அரசாங்கம் தலையிட்டு அதை அரை ஆழாக்காகக் குறைத்தது!

''ஆனால் இதைப் பற்றி வேறு விதமாகவும் ஊகிக்கலாம். அந்தக் காலத் தமிழர்களின் இரைப்பையின் உள் பரிமாணம் நமக்கிருப்பதில் பாதி அளவே இருந்திருக்கக் கூடும். அல்லது அவர்களுக்கு ஜீரண சக்தி குறைவாக இருக்கக்கூடும்.

''மக்களின் நலனில் அக்கறை கொண்டு உணவைக் கட்டாயமாகக் குறைக்க அந்த அரசாங்கத்தை நடத்தியவர்கள் ஒரு விதமான வெள்ளை ரட்டுக் துணி அணிந்திருப்பார்கள். அவர்கள் தரித்துள்ள ஜிப்பாவின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு அடி ஆழமுள்ள பைகள் இருக்கும். தலையில் வெண்மையான குல்லாய் ஒன்று வைத்துக் கொண்டிருப்பார்கள்....''

வட்டமேஜை

இசைக்கு ஓர் ஐந்தாண்டு திட்டம்

அமெரிக்காவில் உள்ள கான்ஸாஸ் சர்வ கலாசாலையில் உதவிப் பேராசிரியர் பதவி வகிக்கும் ஸ்ரீ என். இ. அனந்தநாராயணன் அவர்கள் எழுதுகிறார்:

கனெக்டிகட்டிலுள்ள வெஸ்லியன் சர்வ கலாசாலையில் நமது சங்கீதத்தைப் போதிப்பதற்காக வந்துள்ள ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்கள் இங்கு அற்புதமான பணி புரிந்து வருகிறார். நம் இசையை அமெரிக்க மாணவர்களுக்கும், மற்ற இன மாணவர்களுக்கும் போதித்து வருகிறார். கூடிய விரைவில் சில இசை ஆராய்ச்சிகள் செய்யவும் அவர் திட்டமிட்டிருக்கிறார். இந்த ஆராய்ச்சியில் பங்கு பெறும் நல் வாய்ப்பு எனக்கும் கிட்டியிருக்கிறது.

சமீபத்தில் அவர் எனது இல்லத்துக்கு வந்து சுமார் இரண்டு மணி நேரம் வீணைக் கச்சேரி அளித்தார். வாய்ப்பாட்டு விருந்தும் அளித்தார். நகர மேயரும், கான்ஸாஸ் சர்வ கலாசாலைப் பேராசிரியர்களும் தொழில் துறைப் பிரமுகர்களும் குடும்பத்தோடு வந்திருந்து இசையைக் கேட்டு மகிழ்ந்தனர். வீணை, வாய்ப்பாட்டு இரண்டுமே மிகச் சிறப்பாக விளங்கின. நமது இசைப் பண்புகளுக்குப் பிரதிநிதித்துவம் தாங்கவும், அவற்றை விளக்கவும் ஸ்ரீ ராமநாதனை அனுப்பி வைத்தது மிகச் சிறந்த தேர்வு என்ற திருப்தி ஏற்பட்டது.



அனந்தநாராயணன்

ஒரு யோசனை. நமது சங்கீதத்தில் குறிப்பிட்ட அளவுக்குத் தரமான தேர்ச்சி பெறுவதற்குச் சுமார் நாலு அல்லது ஐந்தாண்டு தேவைப் படும். எனவே நம் சங்கீதத்தில் நல்ல பிட்சை பெற ஒரு குழுவை அமெரிக்காவில் தயாரிக்க வேண்டுமெனில் ஸ்ரீ ராமநாதன் இங்கு நாலு அல்லது ஐந்து வருஷங்கள் தங்கியிருப்பதற்கு வழி வகைகள் காண வேண்டியது அவசியம். ஸ்ரீ ராமநாதன் குறைந்தது ஒரு கோஷ்டியையேனும் நம் சங்கீதத்தில் நன்றாகப் பயிற்றுவிக்கவும், அவர் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சிகளை நிறைவேற்றவும் வசதிப்படுமாறு அவர் இங்கு சில ஆண்டுகள் தங்கியிருக்க இந்திய அரசாங்கமும் ரசிகர்களும் வழி காண்பரென நம்புகிறேன்.

எதற்குப் பஞ்சம்? அறிவுக்கா? அரிசிக்கா?

காங்கிரஸ் ஊழியர் ஒருவர் தம் கட்சிக்காரர்களுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையை நம் நேயர்களின் பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

மற்ற எதிர்க்கட்சிக்காரர்களைவிட ஆளும் கட்சியும் அதன் ஊழியர்களும் தம்முடைய பிரதிநிதிகளின் நிர்வாகத் திறனையும் அதன் விளைவுகளையும் மிகவும் உன்னிப்பாக, ஒரு சிறிய ஊசியைக் கூடக் குறி வைப்பவனை விட ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் அவசியம் உண்டு. தற்சமயம் அதற்கான அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விட்டன....

நமது பிரதிநிதி என்பதற்காகத் தகுதியற்ற நிர்வாகத்துக்கும் நடவடிக்கைகளுக்கும் தாளம் போடும் பழக்கத்தை ஒழிக்க வேண்டும்....

சென்ற செப்டம்பர் மாதம் புது அறுவடை இல்லாத நேரம். அப்பொழுதும் மூட்டைக்கு அறுபது எழுபது ரூபாய் விலையில் ஏழைகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் தாராளமாக ஒரு மாதக் கடனுக்குக் கூட அரிசி கிடைத்து வந்தது. ஆயிரக் கணக்கான மூட்டைகள் நகரங்களிலும் கிராமங்களிலும் குவிந்து கிடந்தன.

தற்சமயம் திருச்சி, தஞ்சை, நெல்லை, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களிலும் கோபி, உடுமலை, ஈரோடு, தாராபுரம், பொள்ளாச்சி, பவானி போன்ற தாலுக்காக்களிலும் லட்சக்கணக்கான டன்கள் நெல் அறுவடையாகிற நேரம். வெளி மாநிலங்களுக்கு லட்சக் கணக்கில் மூட்டைகள் அனுப்பிக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.

அப்படியிருந்தும் இம்மாநில மக்களுக்கு என்ன விலை கொடுத்தாலும் ஒரு படி அரிசி கிடைக்கவில்லை என்றால் இவர்களுடைய நிர்வாகத் திறனை எப்படிப் பாராட்ட முடியும்?

நிர்ணய விலைக்கு அரிசி கிடைப்பதற்காகச் சர்க்கார் எடுத்த தவறான நடவடிக்கைகளினால்தான் இவ்வளவு பயங்கரமான நிலை ஏற்பட்டது என்பதை இன்னும் உணரவில்லை. அதற்குப் பதிலாக வியாபாரிகள், விவசாயிகள், எதிர்க் கட்சிக்காரர்கள் என்று குற்றம் சாட்டுவதிலேயே இருக்கிறார்கள்.

இவர்களால் மற்றவர்களை ஒத்துழைக்க வைக்க முடியவில்லை என்றால், உணவுப் பிரச்னையைச் சமாளிக்கத் தகுதியும் திறமையும் இல்லை யென்றால் மந்திரி சபையை விட்டு வெளியேற வேண்டும். தகுதியும் திறமையும் உள்ளவர்கள் ஆள வழிவிட வேண்டும்.

நாடு யுத்த காலத்தில் இல்லை. பதினேழு ஆண்டு காலமாக ஒரே ஆட்சியில் இருக்கிறது. தற்பொழுது உள்ள நிலைமை திறமைக்கும் அறிவுக்கும்தான் பஞ்சம்; அரிசிக்குப் பஞ்சம் என்று கூற முடியாது. திறமையும் தகுதியும் இல்லாத நிலை ஏற்பட்டால் ஊழியர்கள் விரட்டி விடுவார்கள் என்ற எண்ணம் நமது மந்திரிகளுக்கு ஏற்படும்படி செய்ய வேண்டும்... தற்பொழுதுள்ள மந்திரிகளால் நாட்டில் பயங்கரமான நிலைமை ஏற்பட்டு மக்கள் சித்திரவதைக்கு ஆளாகு முன் இவர்களை அப்புறப்படுத்த வேண்டும்.

சி. பி. பழனியப்பன்,
காங்கிரஸ் ஊழியர், காரமடை.

பாசம்

தினஜா

"கெட்டிமேளம்", "கெட்டிமேளம்" ...று மண மேடையில் உள்ள பெரியவர்கள் ...ல் கொடுத்ததும் கெட்டி மேளம் வாசிக்கப் ...டது. மலர்மாரி பொழியும் மணப் ...தலிலே மணமகன் ராமச்சந்திரன், என் ...ன் வைதேஹியின் கழுத்திலே மங்கல ...ணைப் பூட்டினான். என் கண்களில் ஆனந்தக் ...ணீர் பொங்கியது. மணமக்கள் என் ...ர்வையில் தெய்வத் திரு உருவங்களான ராமனும், வைதேஹியும் போலவே ...ாற்றமளித்தனர். பரிசுத்தமான அன்பு ...ாண்ட இரு உள்ளங்கள் ஒன்றுசேருமிடத் ...் தெய்வீகம் நிறைந்து நிற்பது ஓர் அதிசய ...லலவே.

சென்ற வாரம் வரை பாசம் என்ற ...த்தை அறுத்தெறிய முடியாமல் குமுறிக் ...ாண்டிருந்த எனக்கு இந்த ஆனந்தம் ...டைத்தது பெரும் ஆச்சரியமே. ஸ்ரீ காத்த ...ந்த ராமன் அருளால் அற்புதம் நிகழ்ந்தது!

மண மேடையில் என் பங்கு ...லவல் முடிந்து விடவே மெள ...த் தனியிடம் சென்று சற்று உட் ...ார்ந்தேன். என் மனக் கண் முன் ...ழைய சம்பவங்கள் ஒன்றன்பின் ...ன்றாய் ஓடி வந்தன.

பாசம்' அதுவும் ...டன் பிறந்த பாசம் ...த்தனை இன்பத்தைக் கொடுக்குமோ, அத்தனை துன்பத்தையும் கொடுக்கும் என்பது என் அனுபவத்தில் கண்ட உண்மை.





செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில்தான் நானும், என் தம்பியும் பிறந்தோம். ஆனா ...லும் தந்தையின் தூர்க் குணத்தால் அதை அனுபவிக்கும் பாக்கியம் எங்களுக்கு இல்லை.

தந்தையின் தூர்க் குணங்களில் பிரதான மாக நின்றது சீட்டாட்டம். அதில் உட் கார்ந்து விட்டால் அவருக்கு இந்த உலகமே மறந்துவிடும். அவருடன் போராடிய தாயார் மனம் சலித்து அகாலத்தில் அந்த ராமன் அடி சேர்ந்து விட்டாள். அன்னையை இழந்த அந்தச் சின்ன வயதிலே என் மனத்தில் பட்டது இதுதான்: 'அருமைத் தம்பிக்கு இனித் தாயாக இருக்க வேண்டியது என் பொறுப்பு' — மனத்தில் எழுந்த எண்ணம் பலவிதத்தில் செயலாகப் பரிணமித்தது.

தந்தையால் தாய் பட்ட கஷ்டம் என் கண் முன் நின்றதால், அவரது தூர்க்குணங்கள் தம்பிக்கும் படியாமல் இருக்க வேண்டுமே என்று இரவும் பகலும் ராமனைத் துதிப்பேன். ஸ்ரீ ராமபிரானின் வீர பராக்கிரமங்களையும், அவரது நற்குணங்களையும் என் தம்பிக்கு எடுத்துச் சொல்லி அவன் புத்தியை விசால மாக்க முயல்வேன்.

சீட்டாட்டத்தில் மூழ்கிவிடும் தந்தை எல்லாவற்றையும் மறந்து விட்டார். ஆனால் ஊரார் எதையும் மறக்கவில்லை. அதன் பலன் எங்களை ஆள ஒரு சித்தி வந்து சேர்ந்தாள். வரும்போது சித்தி நல்லவளாகவே வந்தாள். தந்தையின் தூர்க் குணங்களை அனுபவிக்கத் தொடங்கியதும் அவள் ஆதங்கமெல்லாம் எங்கள் மீது அனல் மழையாகப் பொழிந்தது. அம்மாவின் பொறுமையைக் கண்டிருந்த எனக்குச் சித்தியின் கொடுமையைப் பொறுக்கத் தைரியமிருந்தது. தம்பியோ பொறுமை யற்றுப் பொருமுவான். 'கொடுமையை எதிர்க்கக் கொடுமை செய்வதுதான் சரி' என்று சொல்லித் தூர்க் குணங்களுக்கு ஆளாக முற்படுவான். அப்போதெல்லாம் அவனுக்குப் புத்தி சொல்லி அவன் மனம் தூர்க் குணங்களில் விழுந்து விடாமல் தடுக்கப் படாத பாடுபடுவேன்.

சித்தியின் கொடுமை ஒரு நாள் உச்சத்தை அடைந்த போது, அதிகம் மனம் குமுறிய என் தம்பி ராஜா எங்கேயோ போய் விட்டான். சாப்பாட்டுக்கும் அவன் வரவில்லை. என் மனம் பதறியது. சித்திக்குத் தெரியாமல் பல இடம் சென்று தேடினேன். கடைசியாக எங்களூர் ஏரியை அடைந்த போது, அங்கே ராஜா இருந்த நிலை கண்டு திடுக்கிட்டேன். ஏரியின் நடுத் திட்டில் தன் தோழர்களுடன் சீட்டுக் கச்சேரியில் மூழ்கி

பிறந்தவனுக்கு எப்படிப் பசி தாகம் தெரியும்? அருமைத் தம்பியைச் சீட்டாட்டத்தில் கண்ட எனக்கு ஆத்திரம் வந்தது. அவனை அடிக்கும் வேகத்தில் ஏரியில் இறங்கியவள் மீண்டும் திடுக்கிட்டேன். ஏரியில் நீர் வரத் தொடங்கி விட்டது. இனித் திட்டில் இருப்பது அபாயம். எல்லாரையும் கைதட்டி அழைத்து அபாயத்தை நான் அறிவித்து அவசரப்படுத்தினேன். திடுக்கிட்டு எழுந்த மற்றவர்கள் இடுப்பளவு ஜலத்தில் இறங்கி ஓடி வந்து விட்டார்கள். என் தம்பியோ பிடிவாதமாக வர மறுத்தான். நீரின் அளவோ ஏறிக் கொண்டே வந்தது. பாசம் என்னை உந்தித் தள்ளியது. அன்று ஏரி காத்த எங்கள் ராமனைத் துதித்தபடி நீரில் இறங்கி ஓடிச் சென்று என் தம்பியை இழுத்துக் கொண்டு திரும்பினேன். போகும்போது இடுப்பளவு இருந்த நீர் திரும்பும்போது கழுத்து வரை ஏறி விட்டது. எப்படியோ தட்டுத் தடுமாறிக் கரை சேர்ந்தோம்.

அன்று நடந்ததை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. ஏரி காத்த என் ராமனின் கருணை என்னுள் ஆழமாகப் பதிந்தது. அன்று ஏரி உடைப்பால் மூழ்க இருந்த எங்கள் ஊரைத் தன் தம்பியுடன் நின்று காத்த அண்ணல் இன்று என் தம்பியையும் மூழ்காமல் காத்தார். அவன் வாழ்வில் துணை நின்று காக்கும்படி வேண்டினேன்.

''பெண்'' என்று பிறந்தவள் ஒரு நாள் பிறந்த இடத்துப் பாசத்தை உதறிப் பிறர் வீடு செல்ல வேண்டியவளே என்பதை நானும் உணரும் நாள் வந்தது. பெற்ற தந்தையின் பொறுப்பின்மை, பொறுத்த தாயின் கொடுமை இவைகளுக்கிடையே எனக்கும் அந்த மங்கல நன்னாள் வந்தது. என்னை ஏற்றவர் வயதில் சற்றுப் பெரியவர்தான். ஆனாலும் அவரது கண்களில் ஒளிர்ந்த அன்பு என்னை ஆட்கொண்டது.

''இதோ பார், கமலா! சீட்டாடும் சோம்பேறிகள் உள்ள இடங்களில் இருக்கவே எனக்குப் பிடிப்பதில்லை. உன் அடக்கமும், அழகும் என்னைக் கவரவே உன்னை அழைத்துச் செல்லவே வந்தேன்'' என்றார் என் கைப் பிடித்தவர். அவர் எண்ணம் அறிந்து இன்பம், துன்பம் இரண்டும் என் மனத்தைச் சூழ்ந்தது. பண்பற்றவர் உள்ள பிறந்த வீட்டை மறக்கும்படி அவர் மறைமுகமாக இட்ட கட்டளை என் மனத்தை வருத்தினாலும், கண்ணியமும், குடும்பப் பொறுப்பும் உள்ள அவரைக் கணவனாகப் பெற்றதில் பெருமையும், பூரிப்புமே என் மனத்தில் நிறைந்தது. 'அம்மாவைப் போலக் கஷ்டப்பட மாட்டோம்' என்ற நிம்மதி உடலை இலேசாக்கியது.

மண நிறைவுடன் மனையில் புகுந்த என்னை மஞ்சள் நீர் சுற்றி வரவேற்றாள் ஒரு சின்னப் பெண். அவள் அழகு என்னைத் திகைக்க வைத்தது. ''ஒன்றுவிட்ட தங்கை; தாயற்றவள்'' என்று அறிமுகப்படுத்தினார் அவர். உள்ளம் தம்பியின் பாசத்தில் அலைமோத உள்ளே நுழைந்தேன். எந்தத் தாயன்புக்காக நானும் என் தம்பியும் ஏங்கி நின்றோமோ, அதே ஏக்கம் கண்களில் மின்ன மிரட்சியுடன் நின்ற இரு சிறுவர்களைக் கண்டதும் என் கண்களில் நீர் முட்டியது. அவர்களை அள்ளி அணைத்துக் கொஞ்சினேன். மிரட்சியிலிருந்து மீண்டதும் அவர்களும் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு, 'அம்மா' என்றார்கள். அந்த அமுத வார்த்தை என்னை இன்ப உலகுக்கே இழுத்துச் சென்றுவிட்டது.

கண்ணியம் மிக்க அன்புக் கணவன்; அழகு மிக்க அருமைக் குழந்தைகள்; 'ஐயே இப்படிப் பொறுப்பற்றுச் சூதாடித் திரிறாரே' என்ற ஆற்றாமை இல்லாத இல்வாழ்க்கை. ஒரு பெண்ணுக்கு இதைவிட இன்பம் வேறு ஏது? இந்த இன்பத்தில் தம்பியின் மீது உள்ள பாசத்தைக் கூடச் சற்று மறந்திருந்தேன்.

வீட்டிலேயே வளர்ந்த பெண் கமலிக்கு கல்யாண வயது வந்த போது பாசம் என் நெஞ்சில் ஆசையைக் கிளறியது. அழகும் அறிவும் நிறைந்து நிற்கும் கமலியை ராஜுவுடன் இணைத்துப் பார்க்கும் மனம். ஆனால் விஷயத்தை அவரிடம் விண்டு சொல்லத் தைரியம் இல்லை. 'தந்தையைப் போல் அவனும் 'ஆடி'க் கொண்டிருந்தால்?' நினைக்கும் போதே மனம் கசந்தது.

''உன் தம்பிக்கு ரயில்வே இலாகாவில் வேலை கிடைத்து, வேலை ஒப்புக் கொண்டு விட்டானாம்! இனியாவது அவன் நல்லபடி முன்னுக்கு வரலாம்'' என்று அவர் ஒரு நாள் சொல்லிக் கொண்டு வந்தார். வியப்புடன் நிமிர்ந்தவள் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு, ''அப்பாவை விட்டு அகன்றாலே அவன் நல்லபடி ஆகி விடுவான்'' என்றவள் அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினேன். மலர்ந்த அவர் முகத்தில் விரிந்த புன்னகை என்னை ஊக்கவே மீண்டும் தொடர்ந்து ''கமலியின் அழகும், அறிவும் அவனை அடிக்கடி நினைக்கும்படி செய்கிறது'' என்று மையமாகச் சொல்லித் தலை கவிழ்ந்தேன். அச்சம் என் உடலை அதிர வைத்தது. அடக்கமும், பொறுப்பும் மிக்க இந்தக் குடும்பம் எங்கே? அகம்பாவமும், பொறுப்பின்மையும் மிக்க அந்தக் குடும்பம் எங்கே? பாசம் பேச வைத்து விட்டது!

அவர் சிரித்தபடி, ''ம்.. விண்டுதான் சொல்லேன், கமலா! எனக்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனாலும் தந்தையின் குணம்... அவனையும்.....'' என்று அவர் மேலே தொடருமுன், நான் இடைமறித்து, ''என்னுடன் வளர்ந்த அவன் அப்படி ஒரு நாளும் ஆகமாட்டான்'' என்று உறுதியாகச் சொன்னேன்.

அவர் நீண்ட யோசனைக்குப் பிறகே என்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற ஒப்புக் கொண்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் ஊர்ப் பக்கம் சென்ற ராஜா என்னைக் காணவும் வந்தான். மனம் விட்டுப் பேசும் கமலியை அவனுக்குப் பிடித்து விட்டது.

ஊருக்குப் புறப்படும் அன்று பெட்டியை ஒழுங்குபடுத்த முனைந்தவன், எனக்காக வாங்கிவந்த சாமான்களை எடுத்துக் கொடுத்த

ரது. 'பொத்'தென்று கீழே விழுந்து நியது சீட்டுக் கட்டு. 'திக்'கென்று எனக்கு பே சற்று நின்று வந்தது. 'அடப் பாவி! தப் பாழும் ஆட்டம்......'' என்று ரம்பித்தவன் மேலே பேச்சு எழும்பாமல் ஈறினேன்.

என் நிலைகண்டு திகைத்த அவள், ''அக்கா! மை இப்படிப் பதறுகிறாய்? அறிவை வளர்க் ம் பல நல்ல ஆட்டங்களில் ஒன்றுதானே 'டாட்டம்?'' என்று அவள் கேட்டபோது இல்லை; அறிவைப் பாழ் செய்யும் ஆட்டம்; பின் விளைவை எண்ணாமல் எல்லாவற்றை ம் மறக்கச் செய்யும் ஆட்டம்; தன்னையே றந்து கடன் படவைக்கும் ஆட்டம்'' ன்று வந்த பதில் இருவரையும் திடுக்கிட வத்தது. அறையுள் என் கணவரும், தம்பியும் வந்து கொண்டிருந்தார்கள். பூமி வெடித்துப் புகுந்து கொண்டுவிட முடி ாதா என்று இருந்தது எனக்கு.

பாசத்தில் பிறந்த ஆசையைப் போகவி ட்டுச் சென்று விட்டான் தம்பி. நிமிர்ந்து மதினியையோ அவரையோ பார்க்க எனக்கு தைரியமில்லை.

கமலிக்கு ஒரு நல்ல வரனை நிச்சயித்த அவர் பெண் பார்க்க ஏற்பாடு செய்தார். அப்போதுதான் கமலி தன் மனத்தை அண்ணி யின் முன் திறந்து காட்டினாள்.

''எதற்காக இந்த ஏற்பாடு? நான் அவரை... அவரையே...'' என்று தலை கவிழ்ந் தாள் கமலி.

திகைப்புடன் நின்ற அவர், ''எவரை யம்மா? அந்த ஆடுதன் ராஜாவையா?'' என்றார் கோபமாக. அவர் கோபம் என்னை நடுங்க வைத்தது.

''ஆம் அண்ணா! அவர் மனத்தை மாற்ற என்னால் முடியும் அண்ணா! ஆனால் என் மனத்தை மாற்ற மட்டும் முயலாதீர்கள்'' என்று கமலி திடமாகச் சொன்னதைக் கேட் டுத் திகைத்தேன். அவள் குணமறிந்த அவர் அதன் பிறகு பேசவேயில்லை. விரைவிலேயே விவாகத்தை முடித்து விட்டார்.

முதல் முறை பிறந்தகம் வந்தபோது கமலியின் முகத்தில் கண்ட மகிழ்ச்சி மறு முறை வந்தபோது இல்லை. மனம் விட்டுப் பேசுபவள் மௌனமாக இருந்தாள். மசக் கையின் கோளாறாக இருக்கும் என்று என் மனத்தைச் சமாளித்துக் கொண்டேன்.

''கருவில் உள்ள குழந்தை உருப்பெறும் போது தாயின் மனம் நல்ல நினைவுகளில் ஈடுபட்டால் குழந்தையின் குணமும் நன்கு அமையும்'' என்று நான் சொன்னதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் கமலி. ராமாயணம் பாலகாண்டத்தையும், சுந்தர காண்டத்தையும் பாராயணம் செய்து கொண் டிருந்தாள்.

பத்துத் திங்களில் பிறந்த குழந்தை அழகில் ஸ்ரீராமனைப்போலவே இருந்தது. அறிவிலும் அப்படி இருக்கப் பிரார்த்தித்த வள், 'ராமச்சந்திரன்' என்ற பெயரையும் குழந்தைக்குச் சூட்டி மகிழ்ந்தேன். அதன் வளர்ச்சியில் மகிழ்ந்த கமலி மீண்டும் பழைய உற்சாகம் கொண்டாள்.



''உங்க துப்பறியும் நாவல் ரொம்ப ஜோர்! அவ்வளவும் உங்க கற்பனையா? இல்லே, ஏதேனும் காப்பியோ?''

''காப்பியடிக்கவில்லை, அவ்வளவும் என் சொந்தக் கற்பனைதான்!''

''அப்படியா? அந்தக் காலஞ் சென்ற வடுவூர் துரைசாமி ஐயங் கார் நீங்கள்தானா?''

நாட்களும், மாதங்களும் உருண்டு நல்ல படியாகக் குழந்தையுடன் கமலி புறப்பட்ட போது, ''களுக்'' கென்று நிறையும் சிரிப் பொலி இன்றி வீடு வெறிச்சோடிக் கிடந்தது.

ஆண்டுகள் சில அமைதியாகவே கழிந்தன. இரண்டாவது பிரசவ நிமித்தம் கமலி குழந்தை ராமச்சந்திரனுடன் பிறந்தகம் வந்தாள். மீண்டும் வீடு அழகு பெற்றது. குழந்தை ராமச்சந்திரனின் வளர்ச்சியும் வனப்பும் என்னையே மறக்கச் செய்தன. ''இனி இவனைப் பிரிய முடியாது கமலி!'' என்று நான் சொன்னதும் அவள், ''நானே அவனை இங்கு விட்டுச் செல்வதாகத்தான் இருக்கிறேன் மன்னி; வம்ச குணம் பற்றிக் கொள்ளாமல் வளர அவன் இங்கு இருக் கத்தான் வேண்டும்'' என்றாள்.

என் நெஞ்சில் முள் தைத்த மாதிரி இருந்தது அவள் வார்த்தை. மேலே விவரம் கேட்க எனக்குத் தைரியம் இல்லை. அவள் சொன்னபடியே குழந்தை ராமச்சந்திரனை என்னிடம் ஒப்புவித்துவிட்டாள்.

அழகுச் சுடராக வளர்ந்த அவனை, உள்ளத்தாலும் உயர்ந்தவனாக்க என் எண் ணத்தையெல்லாம் செலவிட்டேன். அந்த ராமனின் கருணை, அருள், வீரம் அனைத்தை யும் அவன் உள்ளத்தில் ஊட்டினேன். என் முயற்சியால் சொல்லத் திறம் அற்ப திறமையுடன் வளர்ந்தான் என் கண்மணி. அவன் வளர்ச்சியைக் காணக் காண என் உள்ளத்துள் ஓர் ஆசையும் வளர்ந்தது.

என் மகிழ்வில் காலம் கன வேகமாக ஓடியது. மனை புகுந்த நாள் மழலை மாறாக் குழந்தைகளாக நின்ற என் பிள்ளைகளும் பெரியவர்களாகி நின்றனர். கண்டவர் வியக்கும் வண்ணம் அறிவும் அழகும் போட்டியிட வளர்ந்தான் என் ராமச்சந்திரனும். அவனுக்கென்றே நான் பெற்ற பெண் மலரும் பொன் மலராக வளர்ந்தாள்.

என்னுள் நிலவி நின்ற மகிழ்ச்சியின் ஊடே மெல்ல மெல்லக் கருமேகம் கவியத் தொடங்கியது. தம்பியைப் பற்றிய செய்தி கவலையைக் கொடுத்தது.

நீண்ட நாட்களாகவே பிறந்தகம் வருவதை நிறுத்திக் கொண்டு விட்டாள் கமதி. கொஞ்ச நாட்களாகக் கடிதம் வருவது கூட நின்று விட்டது. அத்தி பூத்த மாதிரி பிள்ளையைப் பார்க்க வரும் ராஜாவும் சில வருஷங்களாக வருவதேயில்லை.

அன்று அரிதாக வந்த கமதியின் கடிதத்தைப் படித்தவர், அதை என்னிடம் கொடுத்து விட்டு அங்கு நிற்கப் பிடிக்காதவர் போல் போய் விட்டார் அவர். மனம் நடுங்கக் கடிதத்தைப் படித்தேன்.

''....வந்த நாள் முதல் அவர் மனத்தை மாற்ற முடியாமல் மனம் நொந்து காலம் கடத்தி வந்தவள், இன்று பெரும் இக்கட்டில் நிற்கிறேன், மன்னி! என் சந்தோஷ வாழ்வை எழுதி உங்களை மகிழ்ச் செய்ய முடியாது போனாலும், துன்ப வாழ்வை எழுதி மனம் நோகச் செய்யாமலாவது காலம் தள்ளுவோம் என்றுதான் இருந்தேன்; இன்று அதுவும் முடியவில்லை, மன்னி! அவர் ஒரு வாரமாக ஆபீஸ் — ஏன் வெளியில் தலைகாட்டவே முடியாமல் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்...''

இதற்குமேல் கமதி ஒன்றும் எழுதவில்லை. விஷயத்தை யூகிக்க இது போதாதா?

சில ஆயிரம் ரூபாய்களை என்னிடம் அளித்த அவர், ''ராமச்சந்திரனையும் அழைத்துக் கொண்டு புறப்படு. உன் தம்பி உண்மையாகவே மனம் நொந்து, செய்த தவற்றுக்கு வருந்தி மனம் மாறியுள்ளதையும் தெரிந்து கொள். இந்த உதவியால் பலன் உண்டா என்பதையும் நன்கு கேட்டுக் கொண்டு உதவு. இல்லையென்றால் விதி வழி அவன் குடும்பத்தை விட்டு விட்டு வந்துவிடு'' என்ற எச்சரிக்கையும் செய்து அனுப்பினார்.

கட்டும் செட்டும் உள்ளவர் கருணை கொண்டது என்னை உருக்கியது. மனத்தில் உறுதியுடன், ''நல்ல முடிவு கண்டே வருவது'' என்ற தீர்மானத்துடன் புறப்பட்டேன்.

அணைத்த கையால் தம்பியை அடிக்கவும் தயாராகச் சென்ற எனக்கு விஷயம் முழுவதையும் அறிந்ததும் தைரியம் பறந்து விட்டது. என் கணவர் எச்சரித்தபடி விதிவழி விட்டுவிட்டுப் பணத்துடன் திரும்பிவிடவே நினைத்துக் கிளம்பினேன்.

கிளம்பிய என்னைத் தடுத்த ராமச்சந்திரன், எல்லை மீறி நின்ற நிலைமையைச் சமாளிக்க வழியும் வகுத்துக் காட்டினான். அவனது அறிவின் திறன் என்னைத் திகைக்கச் செய்தது. 'இன்னமும் அவன் சின்னப் பையன் அல்ல' என்பதையும் புரிந்து கொண்டேன். மனம் இடமடைய அவன் சொல்படியே செயல்படத் தொடங்கினோம்.

''முதலில் தம்பி ராஜா கொஞ்ச நாட்கள் அயலூரில் இருப்பது நல்லது. அதற்கு 'தண்டகாரண்யம் பிராஜக்டி'ல் புதிதாக திறந்துள்ள ஆபீசுக்குச் செல்லும் சிப்பந்திகளில் ஒருவனுக்குத் தந்தை மாற்றுதல் பெற்றுச் செல்வது; நீர்ப்பந்தக் கடன்களை உடனடியாகத் தீர்த்துக் கொண்டு மற்றவற்றையும் மாதவாரியில் தீர்த்துப் புது வாழ்வைத் தொடங்க வழி காணுவது; இனியும் இந்நிலை ஏற்படாவண்ணம் வாழ்வை வளமாக்க உறுதி கொள்வது.'' இது போல் அவன் சொன்ன வழிகளெல்லாம் சிறப்புடன் செயல்படத் தொடங்கவே வெற்றிப் பாதை கண்டு, களிப்பும், நிம்மதியும் அடைந்தேன். தந்தையின் மகத்தான தவற்றால் தனயன் அவன் படிப்பும் மேற்கொண்டு தொடர முடியாமல் நின்றது. சிக்கிரமே பெரு முயற்சி எடுத்துக் கொண்டு உழைத்தவன் நல்லதொரு வேலையையும் சென்னையில் தேடிக் கொண்டு விட்டான்.

மாற்றுதல் பெற்று, 'தண்டகாரண்ய பிராஜக்ட்' சென்றுள்ள தந்தைக்கும் கடிதம் மூலம் ஆறுதல், ஆலோசனைகள் சொல்லுவான்; குடும்பத்தைக் கொண்டு செலுத்தவும் பலவித ஆலோசனைகள் சொல்லி எல்லோரையும் பலவிதத்திலும் குறைத்தான் ராமச்சந்திரன்.


குழந்தைப் பையனை ராமச்சந்திரனின் புத்தி சாதுர்யமான முயற்சியால் பல இடர்கள், இன்னல்கள் அனைத்தையும் கடந்து, குடும்பம் முன்னேறச் சில ஆண்டுகள் சென்றன.

தண்டகாரண்யத்திலிருந்து வேலை உயர்வுடன் திரும்பினான் தம்பி ராஜா. மற்றப் பிள்ளைகளும் படிப்பு முடிந்து வேலை தேடி நின்றனர். பிள்ளைகளுக்கும் வேலையாகி இப்படியே குடும்பம் நடந்தால் இந்தச் சென்னை நகரையே விலைக்கு வாங்கிவிடலாம் என்று நான் சொன்னதும் எல்லோரும் மகிழ்ந்தார்கள். ஏனோ கமதியின் முகத்தில் மட்டும் அந்த மகிழ்ச்சி துளியும் இல்லை.

வீட்டில் நடந்த சுப காரியத்துக்கு வந்திருந்த கமதி தன்னுடன் குழந்தை வைதேகியையும் அழைத்துச் சென்று விட்டாள். வைதேகி — ராமச்சந்திரனின் விவாகத்தையும் முடித்துவிட விரும்பினார் என் கணவர். அந்தச் சுப ஏற்பாட்டுக்கும் வைதேகியை அழைத்து வரவேண்டியும் புறப்பட்டேன், தம்பியின் இல்லத்துக்கு.

அறிவும், அழகும் கொண்ட ராமச்சந்திரனை மருமகனாக அடையப் போகும் இனிய எண்ணங்களால் நிறைவு கொண்ட மனத்துடன் புறப்பட்ட எனக்கு அங்கே பேரதிர்ச்சி யொன்று காத்துக் கிடந்தது.

வண்டியை விட்டு இறங்கி, தம்பியின் செல்வமிய வாழ்வைக் காணும் ஆவலுடன் தம்பியின் இல்லத்துள் அடி வைத்தவள் சிலை பிடித்தவள் போல் துடிதுடித்தேன். பார்க்கும் கண்களையே நம்ப முடியாமல் மலைத்தேன்; திகைத்தேன். கூத்தாட்டக் கும்





வியாபாரி: இந்த இரண்டாவது வரிசையில் உள்ள சாமான்களை என்ன விலைக்கு விற்ருய்?

மகன்: ஒன்று மூன்று ரூபாய்க்கு!

வியாபாரி: அடப்பாவி! அவைகளை ஒன்று பத்து ரூபாய்க்கு அல்லவா விற்க வேண்டும்!

மகன்: அடாடா, மன்னிக்கணும் அப்பா!

வியாபாரி: உம்.....போனுல் போவுது. அப்பவும் நமக்கு இரண்டு ரூபாய் லாபம் இருக்குது.

பல்! அதன் நடுவே கையில் சீட்டுடன் நான் உரம் ஏற்றி வளர்த்த ராமச்சந்திரன் காட்சி தந்தான்.

என் கையிலிருந்து விழுந்த பெட்டி எழுப்பிய பேரொலி அந்தக் கூட்டத்தையும் எழுப்பியது. காளியாகி நின்ற என்னைக் கண்டு எல்லோரும் மெல்ல நழுவினர்கள். என் உள்ளம் கவர்ந்த அந்த வஞ்சகன் நடுக்கமோ, கூச்சமோ துளியுமின்றி, ''அட, அத்தையா? வா அத்தை!'' என்றபடி சீட்டுக்களை எடுத்து அடுக்கி அலமாரியில் வைத்தான். அவன் உடம்பில் பதற்றம் ஒரு சிறிதும் இல்லை! 'நான் வளர்த்த குழந்தையா அவன்?' பதறித் துடித்த மனத்தைச் சமாளித்துக் கொண்டு, ''ஏண்டா! இது என்ன? அப்பன் மறுபடியும் படுகுழியில் விழ நீயே உடந்தையா? பார்ப்பவர், கேட்பவர் காரித் துப்புவார்கள் என்றுகூட இல்லையே. ஊரே கைகொட்டிச் சிரிக்கும் என்று தோன்ற வில்லையாடா?....'' என்று நான் மேலே தொடருமுன், ''நிறுத்து அத்தை! ஊரென்ன அண்டம் வரை கண்டபடி கண்டமாகக் கைதட்டிச் சிரிக்கட்டும். அக்கறை இல்லை. கண்டிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஓர் எல்லை உண்டு'' என்றுன்.

குறுக்கிட்டுப் பேசியவன் ராமச்சந்திரனே! வியப்பும் திகைப்பும் என்னை அயர வைத்தது. ஆயினும் அவன் சொன்ன சொ ''யாருக்கடா எல்லை? உன்னை உருவாக்க வைக்கா?'' என்று கேட்டவள் அவனே பற்றி உருக்கினேன்.

''உருவாக்கியிருக்கலாம்; உதவிகள் செ இருக்கலாம். அதற்காக எதைச் சொன் னும் கேட்க வேண்டுமா?''

அதற்கு மேலும் அந்த அயோக்கிய பேச்சைக் கேட்டுக் கொண்டு அங் நிற்கவே பிடிக்காமல் கீழே விழுந் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு ''வைதேகி!'' என்று அதட்டி அழைத்தேன் பரந்தபடி என் முன்னுல் வந்தவள் ''அம்மா!'' என்று ஏதோ சொல்ல வரு முன் என் கை விரல் ஐந்தும் அவள் கன்ன தில் பதிந்தன. அதற்கு மேல் அவள் பே முயலவில்லை. தன் சாமான்களை எடுத்து கொண்டு புறப்பட்டு விட்டாள்.

குதூகலமாகப் புறப்பட்டவள் குமுறிய வண்ணம் திரும்பினேன். அன்பை அள்ளிக் கொண்டு சென்றவள் துன்பத்தைச் சுமந்து கொண்டு வந்தேன். என்னை அந்த நிலையில் எதிர்பார்க்காத என் கணவர் திகைத்தார்.

எத்தனை அன்போடு வளர்த்தேன்? எத் தனை ஆசைக் கோட்டைகள் கட்டினேன்? உடன் பிறந்த பாசத்தால், 'வளர்த்த பாசம்' என்ற பந்தத்தையுமல்லவா ஏற்றுக்கொண் டேன். இன்று எல்லாவற்றையும் மனத்தி லிருந்து பிய்த்து எறிய வேண்டும்; எறியத் தான் வேண்டும்.

வைதேகிக்கு ஏற்ற வரன் தேடுவதில் தீவிரமாக முனைந்தேன். உடம்பில் வலு விருக்கும்போதே தம் அருமைப் பெண்ணின் திருமணத்தையும் நடத்திவிட வேண்டுமென் பதே அவரது எண்ணமும். ஆகவே அவரும் முயற்சியில் முனைந்தார்.

பெண் பார்க்கும் கட்டம் வந்தபோது தான், வைதேகி எங்கள் முன் வந்து நின் ருள். நின்றவள் மெதுவாக, ''அம்மா! நான் சொல்வதைக் கோபப்படாமல் கேட்டுக் கொள்வதானுல் என் மனத்தில் உள்ளதைச் சொல்கிறேன்'' என்ருள். அவளது பீடிகையே அவள் சொல்லப் போவதை அறிவித்தது. மனத்தில் எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன். 'குழந்தையின் மனத்தில் ஆசையை வளர்த்துவிட்ட நான் இன்று ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை' என்று மெல்லத் தலையசைத்தேன். அவள் நிதான மாகத் தொடங்கினுள்.

''உங்களுக்குத் தெரியாததை நான் சொல் வதாக நினைத்து விடாதீர்கள் அம்மா! எனக்கு நினைவு தெரிந்த பிறகும் கூட என் னிடம் வளர்ந்து வந்த ஆசையை நீங்கள் தடுக்கவில்லை. மாருக அதை அனுசரித்து வளர்த்தீர்கள். அதற்காக 'அத்தானைத் தான் மணப்பேன்; இல்லை என்றும் என் பிணத்தைத்தான் பார்க்க வேண்டும்' என்று உங்களைப் பயமுறுத்தும் அதிகப்படியில் இறங்க மாட்டேன். நான் சொல்வது — உங் களை வேண்டுவது இதுதான்: 'என் மனத்தை மாற்றிக் கொள்ளக் கொஞ்சம் அதிக அவ காசம் கொடுங்கள்' என்பதுதான். இந்த மனத்தோடு நீங்கள் வரிக்கும் இடத்துக்குச்

ன்றால் ஏதனும் தவறு நேரலாம்; அதன் ஸம் என் வாழ்வில் சிக்கலும், உங்கள் மனத் ிரு வேதனையும் ஏற்பட்டு விட்டால் என்ன ய்வது என்ற பயமே என்னை இவ்வளவு ச வைத்து விட்டது'' என்று முடித்தான். என் என்சாண் உடம்பும் ஒரு சாணாகக் றுகி விட்டது போல் குன்றினேன். அவர் மல்லத் தம் மகனின் தலையை வருடினர். ரசத்தின் ஆசி போன்று அவள் தலையில் வரது கண்ணீர் உதிர்ந்தது.

நாள் ஒவ்வொன்றும் ஊர்ந்து சென்று காண்டிருந்தது. கல்லூரி செல்லும் நேரம் விர மற்ற நேரங்களில் வைதேகி கையில் த்தகத்துடனேயே காணப்பட்டாள். கல லவென்று பேசிச் சிரிக்கும் அவளது மலர்ந்த கத்தைப் பார்த்துப் பல நாட்கள் ஆகி ிட்டன.

என் கணவரும் பேச்சையே குறைத்துக் கொண்டு விட்டார். வளர்த்த பாசம் அவ ரைப் பல விதத்திலும் வாட்டியது.

சென்னையிலிருந்து வந்த செய்திகளை யாது கொண்டு கேட்கக் கூடியதாக இல்லை. 'ராமா! இது என்ன சோதனை?'' என்று துன்பப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை.

அன்று என் முன் வந்து நின்ற வைதேகி, ''அம்மா!'' என்றாள் மெதுவாக. நான் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு, ''என்னம்மா'' என்றேன் பரிவுடன்.

''அம்மா! உடம்புடன் கூடவே மனத் திலும் வளர்க்கப்பட்டு விடும் எண்ணங்களை மாற்றுவது ரொம்பக் கஷ்டம்தான் அம்மா!'' என்றாள் வைதேகி. நான் பேசவில்லை. மீண்டும் தொடர்ந்தாள்: ''பல நற்குணங் களை உடல் வளர்ச்சியோடு ஏற்று, நன்றும் வளர்க்கப்பட்டவர்கள் மனம் மாறித் துர்க் குணங்களுக்கு ஆளாக முடியாது அம்மா! ஏதோ சிறு தடுமாற்றம் ஏற்பட்டுக் குழம்பித் தெளிந்து விடுவார்கள் என்றுதான் படு கிறது'' என்றவள் என் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

என் கோபத்தை அடக்கிக் கொண்டு அவள் பரந்த, பெரிய விழிகளைக் கூர்ந்து நோக்கினேன்.

என் பார்வையால் வெட்கமடைந்தவள் தலையைக் குனிந்துகொண்டு, ''அம்மா!...மறு படியும் ஒரு நடை போய் அத்தை, அத்தான் நிலையைப் பார்த்து வந்தால் என்னம்மா?'' என்றாள் தயக்கத்தோடு. என் பொறுமை பறந்தது. சட்டென நிமிர்ந்து உட்கார்ந் தவள், ''இதோ பார், வைதேகி! இனியும் ஒரு முறை உன் அத்தானைப் பற்றிய பேச்சை என் முன் எடுப்பாயேயானால் உன்னைப் பெண்ணாக எண்ண மாட்டேன்'' என்று நான் அதட்டியதும் அவளது உடல் நடுங்கியது. கொடியெனத் துவண்டவள், ''அம்மா! என்னை மன்னித்துவிடம்மா'' என்றபடி என் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டாள்.

''கலங்கிச் சிவந்த கண்களுடன் வைதேகி சரிவரச் சாப்பிடாமல் கல்லூரிக்குச் சென்று விட்டாள்'' என்று சின்ன நாட்டுப்பெண் வந்து புகார் செய்தபோது என் மனம் துடித்தது.

போற்றி வளர்த்த ஆசையைக் கழற்றி எறிய முடியாமல் தவிக்கும் குழந்தையின் மனம் என் நெஞ்சைக் குலுக்கியது. பூமியில் வேர் விட்டு ஆழமாக ஓடிப் பரவிய மரத் தின் வேர்களைத் தோண்டி எடுத்து எறிந்து விடலாம். மனித உள்ளத்திலே ஓடிப் பரவிய அன்பு வேரை எப்படித் தோண்டி எறிவது? அதுவும் ஒரு பெண்ணுள்ளத்தில் பாய்ந்து படர்ந்துள்ள அன்பு வேரைக் கெல்லி எடுக்க முயல்வது எத்தனை அறிவீனம்? தாள முடி யாத துன்பத்தால் கண்களை இறுக மூடிக் கொண்டேன்.

''அத்தை! இதோ பார் அத்தை! உன் ராமச்சந்திரன் வந்திருக்கிறேன்'' என்ற சொல் கேட்டது.

'கனவா, நனவா? ராமன் அருளால் அற் புதம் நிகழ்கிறதா?' என்று எண்ணியவள் கண்ணைத் திறக்க மனமின்றியே கிடந்தேன். மீண்டும் அக்குரல், ''கவலையை விட்டுக் கண்ணைத் திறந்து பார், அத்தை!'' என்ற படி என் அருகில் அமர்ந்து மெத்தென்ற கையால் என் கண்ணைத் துடைக்கவும் திடுக் கிட்டு விழித்தேன். விழித்த விழிகளைக் கசக்கி விட்டுப் பார்க்க விழித்தேன். பகற் கனவு இல்லை! என் அருமை மருமகன் ராமச்சந் திரனே என் எதிரில் நின்றான். அவன் விழி களில் அன்று கண்ட வெறி இன்று இல்லை.

மௌனமாக எழுந்து உட்கார்ந்த என்னை வணங்கி எழுந்தவன், ''அத்தை! ஒரு நல்ல செய்தி: அப்பா அடியோடு மாறிக் கண்ணிய மாக வாழக் கற்றுக் கொண்டு விட்டார்!'' என்றவன் கையிலுள்ள பத்திரங்களைச் சரி செய்து கொண்டான். விஷயம் பளிச் சென்று புரிந்தது. நிலைமையைச் சமாளிக்கப் பணம் தேவை. அதற்காக 'அத்தை' என்று குழைய வந்திருக்கிறான் வஞ்சகன். பொறுமையாக மௌனத்தைக் கடைப் பிடித்தேன். உரிமையாக அருகில் அமர்ந்த அவன் மீண்டும் பீடிகையின்றி, நிதான மாகத் தொடங்கினான்:

''அத்தை! தண்டகாரண்யாப் பிராஜக்டி லிருந்து திரும்பி வந்த அப்பா மீண்டும் பழைய நிலைக்கே மாறிவிட்டார். அதே

வீரனின் ஆசை

ஹிட்லரின் ராணுவம் ஐரோப்பா முழுதும் வெற்றிக் கொடி நாட்டிவிட்டு ரஷ்யாவிலும் முற்றுகையிட்டிருந்தது. ராணுவத்தினருக்கு ஊக்கமூட்ட ஹிட்லர் ஒவ்வொரு வீரனையும் விசாரித்தார். ஒரு வீரனைப் பார்த்து ''உன் மீது சோவியத் குண்டு விழும்போது உன் இறுதி விருப்பம் என்னவாக இருக்கும்?'' என்றார். உடனே வீரன், ''அப்போது தாங்கள் என் அருகில் இருக்க வேண்டுமென்பது என் ஆசை!'' என்றான். ஹிட்லர் உடனே அடுத்தவனை நோக்கி வேகமாக நடந்தார்.

ஜெர்மனியில் ஏ. எஸ். பி. ஐயர்

சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றிருந்த ஏ. எஸ். பி. ஐயர் ஜெர்மனி சென்றபோது ஒரு விருந்தில் கலந்து கொண்டார். எல்லோரும் கத்தி, முள் கொண்டு சாப்பிட்டார்கள். ஐயர் மட்டும் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டுக் கையால் சாப்பிட்டார். இதைக் கண்டு ஆச்சரியமுற்ற ஜெர்மானியப் பெண்மணி ''என்ன கையால் சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டார். உடனே ஐயர் ''ஏன் தாங்கள் எதைக் கொண்டு சாப்பிடுவது வழக்கம்? கால்களைக் கொண்டோ?'' என்றார். இதைக் கேட்டதும் எல்லோர் இதழ்களிலும் இளநகை நெளிந்தது.

நிலையில் அவரை நீடிக்க விட்டால் பழைய நிலை சீக்கிரமே ஏற்படும். அம்மாவாலும், உன்னாலும் அதைத் தாங்க முடியாது. 'அவர் அடியோடு மாறினால் அன்றிக் குடும்பத்துக்கு விமோசனமில்லை' என்று எனக்குப் பட்டது. இரவு பகல் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தேன். தன் வெறியாட்டத்தால் நிகழ்ந்து விட்ட விபரீதத்தைத் தவிர்க்கவும் வழியின்றிக் கதறிப் புலம்ப வேண்டும். அப்பொழுதுதான் அவருக்குத் தம் செய்கை மீதே ஒரு வெறுப்பு ஏற்படும். அந்த நிலையை உண்டாக்க முதலில் உன் உதவியை அகற்றிவிட வேண்டும் என்பதையும் முடிவு செய்து கொண்டேன். எப்படியும் வைதேஹியை அழைத்துச் செல்லச் சில தினங்களில் நீ வரக் கூடும் என்பதும் தெரியும். அதனால் என் திட்டத்தைச் சரியானபடி வகுத்துக் கொண்டேன்.

''தந்தை ஒரு படி ஏறினார். அவரது இரண்டு பிள்ளைகளும் வெறியாட்டத்தில் மூன்று படிகளைத் தாவினார்கள். சில கெட்ட பழக்கங்களே தந்தையை ஆட்டி வைத்தது. சில தினங்களில் பல கெட்ட பழக்கங்களையும் கைக்கொண்டு விட்டார்கள் பிள்ளைகள். முதல் காரியமாக அத்தையின் வருகைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று. 'இனி யாரும் கேட்க மாட்டார்கள்' என்ற தைரியமும் சேரவே வேகமாகப் பின்னேற்றப் பாதையில் ஓடியது வாழ்க்கை.

''சம்பளம் ஒழியக் கடன்பட்டுக் குடும்பத்துக்குக் கஞ்சி வார்த்தார் தந்தை. பிள்ளைகளோ வெறியாட்டத்திற்கே சம்பளம் போதாமல் கடன் பளுவையும் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். நிலைமை முற்றித் தந்தை விழித்துக் கொண்டபோது அடக்க முடியாத அளவு தம் அருமைப் பிள்ளைகளின் நிலை ஓடிவிட்டதைக் கண்டு திடுக்கிட்டார். தொல்லைகள் அதிகரிக்க, அதிகரிக்கத் தம்மைத் தாமே நொந்து கொண்டு புழுங்கினார். நினைந்து, நினைந்து மறுகி, மனம் நொந்தார். கடைசியாக நிலைமை விபரீதம் ஆகிச் செய்வதறியாது இளைறிய போதுதான், அரை உடம்பாகி விட்ட தந்தை தைரியத்தைக் கையில் பிடித்துக் கொண்டு பிள்ளைகளைக் கண்டிக்கத் தொடங்கினார். ''உங்கள் வழி பழக்கமே இது'' என்று பிள்ளைகள் சொல்லாமல் சொல்லிய போது மனம் நொந்து குன்றி உட்கார்ந்து விட்டார்.

''அத்தை! தந்தை அங்கு கனகானாக துன்பத்தில் பண்பட்ட மனத் தூய்மையைப் புதுப்பித்து வளர்த்துக் கொண்டிருந்த போது பிள்ளைகள் திறமையான நடிப்பினால் மீதப்படும் சம்பளத்தைச் சேமித்துக் கடனுதவியும், நண்பனின் ஒத்தாசையும் கொண்டு கட்டி வந்த வீடும் உருப்பெற்று வளர்ந்து விட்டது! இதுவொன்றும் அறியாத தந்தை தனயனை அழைத்து மீள வழி கேட்கவே அவன் அத்தையைக் காண இதோ வந்து நிற்கிறான்!'' என்று முடித்த அந்த ராமசந்திரன் தன் கையிலுள்ள வீட்டுப் பத்திரத்தையும், பிளானையும் என் முன்னால் பிரித்து விவரித்தான்.

நான் பேச்சற்று அவனையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கண்களில் சோகமும், கைகளில் புத்தகமும், உடலில் சோர்வுமாக உள்ளே நுழைந்தாள் வைதேஹி. வியப்பால் விழி அகல அத்தானைக் கண்டு திகைத்தாள்.

மெள்ள என் அருகில் வந்தவள், ''அம்மா! அத்தா.... இல்லை... உன் மருமகன், 'புத்தி கெட்டுப் போய்விட்டது அத்தை' என்று குழைந்து, அத்தையை அழைத்துப் பொன்னைப் பெற்றுப் போகலாம் என்று இங்கு வந்துள்ளாரா?'' என்றாள். நான் சிரித்தேன்.

விழியசையாமல் அவளையே பார்த்து நின்ற அவனும் சிரித்தான்.

''இல்லை; இல்லை. 'புத்தி சாதுர்யத்தால் வாழ்வை மீட்டுவிட்டேன் அத்தை' என்று சொல்லி, அத்தையை மகிழ வைத்து, 'பெண்' பெற்றுப் போகலாம் என்றுதான் வந்துள்ளான் இந்த மருமகன்'' என்றான் அந்தக் கள்வன்.

''உம், மதுராந்தகத்திலே ஏரி காத்தவன் முன் கல்யாணம்; மதராஸிலே வாழ்வு காத்தவனின் கிரகப் பிரவேசம். எழுந்திரு; இனி உட்கார நேரம் ஏது?'' என்றபடி உள்ளே நுழைந்தார் என் கணவர். தலை நிமிர்ந்து நோக்கினேன். அன்றே பாசத்தால் கிடைத்த அமிர்தத்தை உள்ளபடி ருசித்து உணர்ந்தேன்.

'ஜில்' என்ற ஸ்பரிசம் என் சிந்தனையைக் கலைக்கக் கண் விழித்தேன். ''ஆனந்தக் கண்ணீரா மன்னி?'' என்று என் கண்ணீரைத் துடைத்து நின்றாள் கமலி. அதே சமயம் மனையினின்றும் எழுந்த மணமக்களான குழந்தைகள் வைதேஹி — ராமச்சந்திரன் என்னைத் தேடி வந்து மாலைகள் குலுங்க, முகமலர் விரிய என்னை வணங்கி நின்றனர்.

ஏரி காத்த என் ராமனின் கருணையை எண்ணி மனம் களித்தவள் அந்த ராமனைத் தரிசிக்க அந்த வைதேஹி — ராமச்சந்திரனுடன் புறப்பட்டேன்.

இக்கட்டு



அன்று அவன் ஆபீசுக்கு அரை மணி நேரம் தாமதம். தாமதத்திற்குக் காரணம் வீட்டிலுள்ளவர்களின் அசிரத்தையல்ல; சாப்பாடு, காப்பி, எல்லாம் நேரத்திற்குச் சரியாகவே தயாராகி விட்டதே!

பஸ் போக்கு வரத்து விசாரிக்கவில்லை. அவன் தன் சொந்த வாகனமாகிய சைக்கிளில் வந்து விடுகிறானே!

கைக் கடிகாரத்தில் மேலும் நம்பிக்கை. போன வாரம்தானே வாங்கினது? இரண்டு மாசமாவது சரியான நேரம் காட்டாதா?

தாமதமானதற்கு அவனேதான் காரணம். நடக்கும்போது, உட்காரும்போது, தலை வாரும்போது என்று ஒவ்வொரு செயலுக்கும் ஐந்து நிமிஷங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டு விட்டான். எல்லா நிமிஷங்களும் சேர்ந்த போது அரை மணி தாமதமாகி விட்டது.

அப்படி வேண்டு மென்றே தாமதமாக்கியதற்குக் காரணம் அவன் மாமாவும் மாமா பெண்ணும் வீட்டிற்கு வந்திருந்தது தான். மாமா உத்தியோகத்தி லிருந்து ரிடையர் ஆனதும், அவன் மகன் மாலா பி. யு. சி. முடிப்பதற்குள்ளேயே மாலாவின் கல்யாணத்தை நடத்தி முடிக்க வேண்டும் என்று ஆவலாயிருந்தது அவருக்கு. டில்லியிலிருந்து வந்ததும் காலேஜ் பங்களா வாங்கிக் கொண்டு குடியேறி விட்ட மாலாவுக்கு டில்லியிலிருந்து வந்த கையோடு தங்கையையும் அவன் மகனையும் பார்க்க வேண்டும் என்று ஆவலாயிருந்தது அவருக்கு. வந்துவிட்டார் மகளையும் அழைத்துக்கொண்டு. "மனிதர்களுக்கு அவ்வப்போது ஒரு மாற்றம் இருந்தால் வாழ்க்கை இனிக்கும். எப்போதும் காரியம் கூடாது!" என்ற மனத் தத்துவம் தெரிந்தவர். மகளுக்கும் ஒரு மாறுதல் இருக்கட்டுமென்று மாலாவையும் அழைத்து வந்திருந்தார்.

'மாமா! மாமா!' என்று சுற்றிச் சுற்றி வந்த மாலாவை விட்டு ஆபீசுக்கு வரச் சுதர்சனுக்கு மனமே இல்லை. ஆனால் ஆபீசுக்குப் போகாமல் இருக்க முடியுமா?

ஆபீஸ் நாற்காலியில் உட்கார்ந்த பிறகுகூட மாலாவை நினைத்ததுமே காது வரையில் குப்பென்று இரத்தம் பாய்ந்தாற்போல் சூடேறியது. தாமதமாக வந்ததற்குப் பரிகாரமாக அவன் கைகள் வேலையைப் பரபரவென்று கவனிக்கவில்லை. மாறாக ஷர்ட் காலரின் இரு நுனிகளையும் பிடித்துத் தூக்கி விட்டுக் கொண்டிருந்தன. சுதர்சனம் தனக்குத் தானே மகிழ்ந்து புரித்துக் கொண்டிருந்தான்.

"ஏதாவது லாட்டரியில் முதல் பரிசு அடித்ததா?"

திடுக்கிட்டுத் திரும்பினான் சுதர்சனம்.

பக்கத்து நாற்காலிக்காரர் பிலிப். தனிஞ்சுதான் அவனை நோக்கி முறுவலித்துக் கொண்டிருந்தான்.

நாற்காலியில் உட்கார்ந்ததும் முதல் காரியமாகக் கடவுள் வணக்

கம் சொல்வது போல் அவனுக்குக் 'குட் மார்னிங்' சொல்லி விட்டுத்தான் வேலையைத் தொடங்குவான் அவன்.

இன்று வந்து இத்தனை நேரமாகியும் தன் நினைவிலேயே ஆழ்ந்துவிட்ட தவற்றில் குற்ற உணர்ச்சியுடன் அசடு வழிய 'குட்மார்னிங்' என்றான்.

''குட்மார்னிங்!'' அவள் விடவில்லை. ''ஒரே மந்தகாசம் வழிகிறதே முகத்தில்! எந்த லாட்டரியில் பரிசு? எப்பொழுது தெரிந்தது? கங்கிராஜுலேஷன்ஸ்''

''லாட்டரியில் எதுவுமில்லை. லாட்டரியில் நான் சுடுபட்டால் உங்களையும் அதில் இழுத்துவிட மாட்டேனா? ஊரிலிருந்து மாமாவும் அவர் பெண்ணும் வந்திருக்கிறார்கள். அதனால்தான் தாமதம்!''

காரணத்தை ஒப்புக் கொண்டுவிட்ட வெட்கத்துடன் தலையைத் தாழ்த்திக் கொண்டான் சுதர்சனம். அதனால் அவள் முகம் இருண்டதைக் கவனிக்கவில்லை.

''மாமாவா? எந்த மாமா?''

''ரயில்வேயில் டைஜனல் டைரக்டராக இருக்கிறார் என்று சொல்லி யிருக்கிறேனே! அவர்தான். ரிடையர் ஆகிவிட்டார். டில்லியிலிருந்து மதராஸுக்கு வந்துவிட்டார். அவர் பெண் மாலா இங்கேதான் பி. எஸ்ஸி. யில் சேர்ந்திருக்கிறாள்.''

''உங்கள் மாமாவின் குடும்பமும் உங்களோடுதான் இருக்கப் போகிறதா?''

''அவர்கள் எங்களோடு ஏன் இருக்கிறார்கள்? தோப்பும் துரவுமாகப் பெரிய பங்களாவை விலைக்கு வாங்கிக் குடி போயாகி விட்டது. மாமிக்கு பிளட் பிரஷர்! எங்கேயும் அலைய மாட்டார்கள்!''

''அப்போ, நீங்கள் போய் அவர்களுடன் தங்கி விடுவீர்களாக்கும்.''

''சேச்சே, நாங்கள் ஏன் போகிறோம்? அவர்கள் அவர்களுடைய வீட்டில் இருப்பார்கள். நாங்கள் எங்கள் வீட்டில்தான் இருக்கிறோம்.''

''அதுதான் கேட்டேன்.'' நளினி வேலையில் மூழ்கினாள்.

அவனும் கொஞ்சம் காகிதங்களைப் புரட்டத் தொடங்கினான்.

திடீரென்று அவன் கேட்டாள். ''ஆமாம்! உங்க மாமா சொந்த மாமாதானே? அதாவது...''

''அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? எங்கம்மாவின் கூடப் பிறந்தவர்தான்.''

''பின்னே நீங்களும் ரயில்வேயில் பெரிய வேலை எதிலாவது...''

''அம்மாதான் மாமாவிடம் அப்படியெல்லாம் கேட்டுத் தொந்தரவு செய்யக்கூடாது. எல்லோரையும் போல நீயும் மனுப் போடு. கிடைத்தால் கிடைக்கட்டும், இல்லாவிட்டால் வேண்டாம் என்று சொல்லி விட்டாள்.''

''சரியான அம்மா குழந்தை நீங்கள்.''

''அப்படியில்லை. அப்பா போன பிறகு அம்மா தனியாக எவ்வளவோ கஷ்டப்பட்டு ஆளாக்கி, இத்தனை தூரம் படிக்க வைத்து..''

''எத்தனை தூரம்?''

''உங்களுக்குத் தெரியாதா? எஸ். எஸ். எல். சி. வரையில்தான்! தெரிந்ததை ஏன் கேட்கிறீர்கள்?''

''உங்களுக்கு அது ஞாபகம் இருக்கிறதா என்று பார்க்க.''

''என் ஞாபகத்தின் மேல் திடீரென்று ஏன் சந்தேகம் வந்தது?''

''சரிதான்! நான் எது பேசினாலும் காரணத்தோடுதான் இருக்கும் என்று நினைக்கிறீர்களோ? அப்படியானால் இனி எதையும் பேசவில்லை. 'லைட்ஜெக்ட்'. 'ரெபரன்ஸ்', 'பைல்'. 'போலியோ' இவை தவிர வேறெதையும்...''

''ஐயையோ! ப்ளீஸ்! ப்ளீஸ்! வேண்டாம். ஒரேயடியாக என்னைத் திரஸ்கரித்துவிடாதீர்கள். ஒரு நாள் நீங்கள் ஆப்செண்ட் ஆகி விட்டால் என் மனம் எப்படித் தவிக்கிறது தெரியுமா? பக்கத்து சீட்டில் இருந்து கொண்டு உங்களோடு பேசாமல் இருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்.''

பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு அவன் இருதயத்தை ஊடுருவுவது போல் நோக்கினாள் நளினி. அவளால் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பேசாமல் பார்வையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''சரியான உணர்ச்சிக் குவியல் நீங்கள். உங்களுக்கே நீங்கள் பேசுவது புரியவில்லை.''

''என்ன புரியவில்லை?''

''பேசாமல் வேலையைக் கவனியுங்கள். வந்ததே தாமதம்! இந்தக் கருத்தரங்கம் வேறேயா? எல்லோரும் திரும்பிப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்.''

''உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை....''

''நீங்கள் உங்களையே புரிந்து கொள்ளவில்லை. மற்றவர்களை எங்கே புரிந்துகொள்ளப் போகிறீர்கள்? உம்... 'மோர் வொர்க் அண்ட் லெஸ் டாக்' என்று விளையாட்டாகக் கண்டித்து விட்டு, தான் செய்து கொண்டிருந்த அவனுடைய வேலையை அவனிடம் கொடுத்து விட்டுத் தன் வேலையை எடுத்துக் கொண்டாள்.

''அந்தப் பில் பதினொரு மணிக்கெல்லாம் தனது மேஜைக்கு வரவேண்டும் என்று மேல் அதிகாரி எழுதி யிருக்கிறாரே, எப்பொழுது முடித்துக் கொடுக்கப் போகிறீர்கள்? இன்னும் ஐந்து நிமிஷம்கூட இல்லையே?''

மின்னல் வேகத்தில் உடலில் சுறுசுறுப்புப் பாய்ந்தவனாய்ப் பரக்கப் பரக்க வேலையை எடுத்துப் பிரித்தான். அது மேல் அதிகாரி மேஜைக்குப் போகத் தயாராயிருப்பதைப் பார்த்ததும் ஒரு கணம் ஸ்தம்பித்துவிட்டான்.

''ஐயோ! மிஸ் நளினி! உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவதென்றே....''

''உஸ்! லெஸ்டாக் அண்ட் மோர்வொர்க்'' என்று மீண்டும் உதட்டருகே விரலை வைத்து எச்சரித்தாள் அவள்.

இப்பொழுதெல்லாம் சுதர்சனத்துக்கு, நளினியிடம் மாலாவைப் பற்றிப் பேசுவதிலேயே பொழுதெல்லாம் மின்னல் வேகத்தில் கழிந்தது.

''நினைத்தபோதெல்லாம் போனால் நமக்கு என்னடா மதிப்பு?'' என்று அம்மா சொன்னதற்குக் கட்டுப்பட்டுத்தான் அவன் தினமும் மாலாவின் வீட்டுக்குப் போவதை நிறுத்திக் கொண்டான்.

அதற்கு ஈடு கட்டுவது போல் நளினியிடம் அவன் விடாமல் மாலாவைப் பற்றியே பேசி

ஒன். அவளைத் தூண்டித் தூண்டிக் கேட் டதிலேயே அவனும் ஆர்வம் காட்டினுன். அவனும் உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் ஒன்று விடாமல் பிட்டுப் பிட்டு அவளெதிரில் படைத்து விட்டான்.

''இன்றைக்கு மாலா ஓர் இலைப் பச்சைக் கலரில் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். நீங்கள்கூட ஒன்று கட்டுவீர்களே? நான்கூட இந்தக் கலர் ரொம்ப அழகாக இருக்கிறது என்று சொல்வேனே அது. 'இந்தப் புடவையில் எத்தனை அழகாயிருக்கிறுய், மாலா!' என்று நான் சொன்னதற்கு உங்கள் மாதிரி வேறு யாராலும் வர்ணிக்க முடியவில்லை. நீங்கள் அந்தக் கலையில் 'எக்ஸ்பர்ட்' என்று சொன்னுன்.''

''பரவாயில்லை. கலாசாலைக்குப் போகாமலேயே பட்டம் வாங்கி விட்டீர்கள்!''

''டிகிரி வாங்காதவனுயிருந்தால் கூட என் மேலே எத்தனை அன்பு தெரியுமா அவளுக்கு?''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். உங்களை ஒரு நாள் காணுவிட்டால் கூட அவள் கண்கள் பூத்துப் போய் விடுகின்றனவோ?''

''சேச்சே! அதெல்லாம் அவளுக்குப் பேசத் தெரியாது. அவள் சிறு பெண்தானே?''

''முன் காலத்தில் ஒவ்வோர் அரசனும் ஒரு புலவனைத் தன் சபையிலே வைத்துப் பராமரிப்பானும், தங்களைப் பற்றிப் புகழ் பாட. அந்த மாதிரி உங்களை மாலா ராணியின் அரசாங்கப் புலவராக அமர்த்தியிருக்கிறுர்களோ?''

''நீங்கள் என்ன என்னை ஒரேயடியாகப் புலவராக்கி விட்டீர்கள்? அது இருக்கட்டும். மிஸ் நளினி. இதோ பாருங்கள்! மாலாவைப் போட்டோ பிடித்தேன் என்று சொன் னேனே! இன்றைக்கு முதல் வேலையாக அதைக் கழுவிப் 'பிரின்ட்' போட்டுக் கொண்டு வந்தேன்.''

பக்கவாட்டில் போஸ் கொடுத்துக் கவர்ச்சிப் பாவையாக நின்று கொண்டிருந்தாள் மாலா. துண்டாகக் கத்திரித்திருந்த தலைமயிரைத் தூக்கிக் குதிரை வால் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள்.

பின் கழுத்தும் முன் கழுத்தும் ஒரே அளவில் வெட்டப்பட்ட ஜாக்கெட்டாகத்தான் இருக்க வேண்டும் அவள் போட்டிருந்தது. இவ்வளவும் போதாததற்குக் கையை உயரே தூக்கி மரக் கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

''மாலாவுக்கு என்ன வயதிருக்கும் என்று சொன்னீர்கள்?''

''பதினறு, பதினேழு இருக்கும். அதற்கு மேல் இராது.''

''அவளுடைய தங்கையின் வயதைச் சொல்கிறீர்களா?''

''மாலாவுக்குத் தங்கையா? கிடையாதே! அவள் ஒரே பெண்தான்மாமாவுக்கு.''

இவளையா வயசு போதாது. சின்னக் குழந்தை என்றுன் சுதர்சன்? யாருக்கு வயசு போதவில்லையோ?

''ரொம்பப் பிரமாதமாகத்தான் எடுத் திருக்கிறீர்கள். உங்களுக்கு இவ்வளவு தெரியும் என்று எனக்குத் தெரியாதே.''

வெட்கத்துடன் சிரித்துக் கொண்டான் சுதர்சனம்.



''நாங்கள் இரண்டு பேரும் உம்மிடம் கூந்தல் தைலம் வாங்கிப் போனேம்!''
''ஆமாம்! ஞாபகம் இருக்கு!''
''என் தலை முழு வழுக்கையாயிற்று.''
''ஆமாம் அவர் தலையில் அரை வழுக்கைதானே இருக்கு. அதற்கு என்ன சொல்கிறீர்?''
''அவர் பாதி பாட்டிலுக்கு மேல் இதை போட்டுத் தவறி உடைத்து விட்டார்!''

''முகத்தை மாத்திரம்தான் எடுக்க வேண்டும் என்று பார்த்தேன். அவள்தான் நான் நிற்க வேண்டிய இடம், வெளிச்சத்தைச் சரிப் படுத்திக் கொடுத்து எடுக்கச் சொன்னுள்.''

''பாவம்! சின்னக் குழந்தை.''

'' 'கடற் கரைக்கு வருகிறீர்களா? கடலலைகளில் நின்று கொண்டு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்றுள்.''

''கடலிலே அலைகள் பயங்கரமாக இருக்குமே. உங்களுக்கு நீச்சல் தெரியுமா?''

''காவேரிக் கரையில் வளர்ந்தவனுக்கு நீச்சல் தெரியாமல் இருக்குமா?''

''இருவரும் சேர்ந்து கடலலைகளில் நின்று எடுத்துக் கொண்டால் ரொம்பப் பிரமாதமாக இருக்குமே!'' சொல்லிவிட்டுச் சடக்கென்று எழுந்து போய் விட்டாள் நளினி.

மேலதிகாரி கூப்பிட்டு அனுப்பியிருப்பாரோ என்ற சம்சயம் எழுந்தது சுதர்சனத்தின் மனத்தில். அல்லது கீழ் பெண்கள் அறைக்கு எழுந்து போனுளோ என்னமோ?

அரை விளுடிக்கு மேல் அவள் எழுந்து போன காரணத்தை அலசிச் சிந்தனையின் மனத்தை அலைய விடவில்லை அவன்.

அவன் வரைந்து விட்டுச் சென்ற அந்த ஓவியத்தில் மனம் நிலைத்து விட்டது. மாலாவும் அவனும்! கடலலைகளின் மத்தியிலே—அடடா! அந்த நினைவுதான் என்னமாய் இனித்தது!

அன்று சீக்கிரமாகவே ஆபீசுக்கு வந்து விட்டான் சுதர்சனம். மனம் எரிமலையாய் இன்னும் குமுறிக் கொண்டிருந்தது. இரவெல்லாம் இமையோடு இமை பொருந்தவில்லை. காலையில் அவனுல் சாப்பிடக்கூட முடியவில்லை.

''என்னடா உடம்புக்கு?'' என்று அம்மா கேட்டதற்கு என்ன பதில் சொல்வது? அம்மாவிடம் சொல்லி ஆற்றிக் கொள்ளக்

கூடிய விஷயமா இது? மௌனமாகப் புறப்பட்டு ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்தான்.

தன் அந்தரங்க ஆலோசகரிடம் சொல்லி உடைக்க வேண்டும் என்றுதான் ஓடிவந்தான். ஆனால் அவள் வர இன்னும் அரை மணி நேரம் இருக்கிறதே. இவள் வந்துவிட்டாளே என்று ஞானதிருஷ்டியில் தெரிந்துகொண்டு அவனும் வந்து குதித்துவிட முடியுமா? வந்ததும் அவளிடம் நறுக்கென்று சொல்ல வேண்டும்.

''பெண்கள் என்றால் பிரியம் உள்ளவர்கள் போல் நாடகமாடி, கூசாமல் இன்னொரு வலைக் கைப்பிடித்துக் கொள்ளும் பேதைகள், வேஷம் போடும் கோழைகள்'' என்று அவளிடம் சொல்ல வேண்டும். இதற்கு அவள் என்ன பதில் கொடுக்கிறாள் என்று கேட்க வேண்டும்.

முன் தினம் மாலை ஒரு மணி நேரம், 'பர்மிஷன்' கேட்டுக் கொண்டு மாலாவைப் பார்க்கக் கிளம்பினான். போகும் நேரத்தில்தான் நளினியிடம் சொன்னான், தான் போகப் போவதை. அவள் நெற்றி சுருங்க, அதிர்ந்தவள் போல் மௌனமாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். டெரிலின் ஷர்ட்டும், நைலான் பேண்டுமாக ரொம்ப ஜோராக வந்திருந்தான் அவன்.

''அப்படியானால் உங்கள் விவாக அழைப்பிதழை வெகு சீக்கிரம் எதிர்பார்க்கலாம் என்று சொல்லுங்கள்?''

''அவள் பி. எஸ்ஸி. பரீட்சை எழுதியதும் என்று நினைக்கிறேன்'' என்றான் அவன் சிறிது கூச்சத்துடன்.

''அவள் பட்டம் வாங்கிவிட்டால் உங்களை மணக்க ஒன்றும் ஆட்சேபனை இருக்காதா?''

''பட்டம் வாங்கினால் என்ன? ஷேக்ஸ்பியரின் மில்டனை அவளுக்குப் புரிய வைத்ததே நான்தானே? இங்கிலீஷ் பேசும் ஸ்டைலை என்னிடம்தானே அவள் கற்றுக் கொண்டாள். அதற்கு முன் இலக்கணப் பிழை இல்லாமல் அவளால் ஒரு வாக்கியம் முழுதாகப் பேசவோ எழுதவோ முடியாதே. பட்டம் குறுக்கே வந்து என்ன செய்யும்?''

''அந்தஸ்து?''

''மாலாவின் விருப்பத்துக்கு முன் அந்தஸ்து, ஐபர்தஸ்துஎல்லாம் தூசுக்குச் சமம்.''

''அப்படியானால் மாலா சம்மதம் தெரிவித்துவிட்டாளா?''

''சம்மதம் இல்லாவிட்டால் என்னுடைய சினிமாவுக்கு வருவாளா? கடற்கரைக்கு வருவாளா? என்னிடம் நீச்சல் கற்றுக் கொள்வாளா?'' 'ஸ்' என்று விரலைக் கடித்துக்கொண்டான் சுதர்சன்.

''என்ன?'' என்று விழித்தாள் நளினி.

''ஓ! பயப்படாதீர்கள். நான் போய் அவள் அப்பாவிடம் சொல்ல மாட்டேன்.''

''அவள் நீச்சல் கற்றுக் கொள்வதைத் தன் அப்பாவிடம் கூடச் சொல்லக் கூடாது என்று சபதம் வாங்கியிருக்கிறாள்.''

''வந்து.... அவள் சம்மதம் என்று வாய் திறந்து....''

''இதென்ன? உங்களுக்குப் பெண் இனத்தின் மேல் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை போல் இருக்கிறதே?''

''சரி, சரி. உங்கள் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள். எடுத்த பர்மிஷனில் ஐந்து நிமிஷங்களை இங்கே போக்கி விடாதீர்கள். உம், கிளம்புங்கள்.''

'விர்'ரென்று கிளம்பி, நேராக மாலாவின் பங்களாவை அடைந்தான் சுதர்சனம்.

''மாலா இன்னும் கல்லூரியிலிருந்தே வரவில்லை'' என்று சமையற்காரன் சொன்னான். அங்கிருந்து டாக்ஸி பிடித்து, கல்லூரி வாசலை அடைந்தான். கல்லூரியிலிருந்து மாணவிகள் வெளியேறி அரைமணியாகி விட்டது என்று காவல்காரன் சொல்லி விட்டான்.

திக்கென்றது சுதர்சனுக்கு. தன்னுடன் சினிமாவுக்கு வருகிறேன் என்று சொன்னதை அவள் மறந்து விட்டிருப்பாளோ? இருந்தாலும் இருக்கும்.

பேசாமல் நடக்கத் தொடங்கினான். மரீனா ரோடு நெடுக நின்ற கார்கள் அவன் மூளையில் மின்னலைப் பாய்ச்சின. அவள் கடற்கரைக்கு வந்திருந்தால் அவளுடைய சிவப்பு அம்பாஸிடர் கார் இங்கு நிற்காதா? காரைக் கொண்டு காரிகையைக் கண்டுபிடிப்பது கஷ்டமா?

உற்சாகமாக அவன் கண்கள் தேடின. அதோ ஒரு சிவப்பு. அவளுடையதாக இருக்

மா? அருகில் நெருங்கி
ர. அதேதான். ஒன்று
ர் இரண்டுசைபர் 1020.
ார் நின்ற இடத்துக்கு
ாகக் கடலை நோக்கி
க்கத் தொடங்கினான்.

ாற்றிலே பறக்கும் அந்த
மே தெரியாத கண்ணாடி
லான் புடவை யாரு
டையது?

அந்தக் கொடி உடலும்,
கதிற மேனியும், காற்றில்
க்கும் செயற்கையாகச்
ட்டிவிட்ட கிராப்புக் கூந்
லும் வேறு யாருடையதாக
நக்க முடியும்? அவள்
லாவேதான்!

ஆனால் அவள் அருகே
ந்து வரும் நைலான்
லாக்கும், பாண்ட்டும்
ந்திய பணக்கார வாலி
ன் யார்?

இருவரும் அவனை நெருங்கி
ட்டார்கள். சுதர்சனத்
தக் கண்டதும் சட்டென்று
ன்றுள் மாலா.

''அடடே! ஏது இந்தப்பக்கம்?'' என்று கேட்
ாள். அருகில் இருந்தவனிடம், ''இவர்
ான் எங்க ஆன்டியின் சன்'' என்று அறி
கப்படுத்தி விட்டு, சுதர்சனத்திடம், ''இவர்
ன் பிரெண்டு மிஸ்டர். எம். எஸ்ஸி.'' என்று
றிவிட்டு ''உங்கள் பெயரைச் சொல்லுங்
கோன். உக்கும்'' என்றுளே, பார்க்கலாம்.

''நான் ஷங்கர்! பட்டிக்காடு மாதிரி கணவ
ாகப் போகிறவரின் பெயரைச் சொல்ல
மாட்டாளாம்!'' என்று பெருமிதமாகப்
பேசிய வண்ணம் அவன் கையுடன் தன்
கையைப் பிணைத்துக் கொண்டான் அந்த
ஷங்கர் எம். எஸ்ஸி.

கடற் காற்று குப்பென்று தீப்பிடித்து
எரிந்தது.

''ப்ளீஸ், சுதர்சன்! சரியான நேரத்துக்கு
வந்தீர்கள். என்னுடைய காரை என்ன
பண்றதுன்னு யோசிச்சுகிட்டிருந்தேன்.
நீங்கள் என் காரை வீட்டிலே கொண்டு விட்டு
விடறீங்களா? நான் இவர் காரிலே போறேன்.
படத்துக்குப் போகிறோம்'' என்று கொஞ்
சினுள் மாலா.

கருடனைப் போன்று பிரும்மாண்டமாகச்
சிறகை விரித்து நின்றது நெடிய கருப்பு
நிற 'ரோல்ஸ் ராய்ஸ்' ஒன்று.

கடலும், கரையும், வானமும் நிலமும்
ஒரேயடியாகச் சுழல, வீதி நெடுகக் கரை
கட்டி நின்ற விதம் விதமான கார்களின்
வண்ணங்களும் அந்தச் சுழற்சியிலே கலந்து
வானமெங்கும் வியாபித்து நின்றன.

மின்னலடித்தாற்போல் ஒரு கணம் நின்ற
சுதர்சன், ''மாலா! மன்னித்துவிடு. எனக்குக்
கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் போகி
றேன்'' என்று திரும்பினான்.

அவனுடைய நாகரிகமில்லாத, நாசூக்
கில்லாத, நாட்டுப்புறத்தான் போன்ற நடத்

சரியான ''இல்''

சையத் அஹமத்
கான் (அலிகார் பல்கலைக்
கழகத்தை நிறுவியவர்)
ரயிலில் ஏறினார். அவர்
ஏறிய பெட்டியில் வசதி
யாக உட்காரலாம் என்று
எண்ணிக் கொண்டிருந்த
இருவருக்கும் ஒரே
கோபம். சையத் அவர்
களிடையே அமர்ந்தார்.
உடனே ஒருவர் ''நான்
யார் தெரியுமா? ஒரு
பாரிஸ்டராக்கும். நக
ரும்'' என்றார். மற்றொரு
வரும் இதையே சொன்
னார். உடனே சையத்
''நான் பாரிஸ்டருக்கே
அப்பன்!'' என்றார். அந்த
இருவரும் விழித்தனர்.
உடனே சையத் ''என்
மகன் மஹ்மூத் ஒரு
பாரிஸ்டர்!'' என்றார்.

தையைக் கண்டு அதிர்ச்சி
யுற்று நின்ற நாகரிகத்
தின் உச்சியில் ஏறி நிற்கும்
அந்த ஜோடியை அப்படியே
கடற்கரைச் சிலைகளாகவிட்டு
விட்டு வீட்டை நோக்கி
நடந்தான் சுதர்சன்:

அவன் காதலனுடன் சினி
மாப் பார்க்கப் போவதாக
இன்னொரு ஆடவனிடம்
சொல்ல அவளுக்கு எத்தனை
ஆணவம்?

அதேவிஷயத்தைஎத்தனை
தடவை நளினியிடம் கூறி
விட்டு அவன் மாலாவுடன்
போயிருக்கிறான். அது மாத்
திரம் எந்த நியாயத்தைச்
சேர்ந்தது?

முதல் முறையாக நளி
னியை நினைத்ததும் மனத்
தில் சுருக்கென்றது. கடந்த
இரண்டு வருடங்களாக அவ
ளுடன் பணி புரிகிறான்,
பக்கத்து நாற்காலியில். ஒரு
நாளாவது அவன் மனத்
தைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடு
பட்டதில்லையே அவன்! ஏன்? அவன்
சுயநலவாதி! தன்னைப் பற்றியே நினைத்திருந்த
தில் அவளைப் பற்றி அவன் என்ன யோசித்தான்?

அவள் மனத்தில் அவனைப் பற்றி 'அந்த
மாதிரி' எண்ணங்கள் இரா திருந்திருக்குமோ?
அவளிடமே தன் காதல் விவகாரங்களை
யெல்லாம் கொட்டியிருக்கிறானே, முட்டாள்!
அவளும் கொஞ்சம் கூட மனம் வேதனைப்
பட்டதாகக் காட்டிக் கொள்ளவே யில்லையே?

ஏன் இல்லை? முதலிலிருந்து மாலா அவ
னுக்கு ஏற்றவளில்லை, இல்லை என்று நளினி
சுட்டிக் காட்டிக் கொண்டுதானே வந்திருக்
கிறாள்! அவன்தான் புரிந்து கொள்ளவில்லை:
இன்றைக்கு வரட்டும். அவளிடம் மன்னிப்
புக் கேட்க வேண்டும். அருகிலிருந்த அவளை
அலட்சியம் செய்ததன் பலன் முழுவதையும்
அனுபவித்து விட்டதை அவளிடம் சொல்லி
விட்டுத்தான் மறு வேலை என்ற துடிப்பு
நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்தது.

மணியும் அடித்து, காரியாலயமும் முழு
மூச்சுடன் இயங்கத் தொடங்கி விட்டது:
அவள் வரவில்லை. பக்கத்து நாற்காலியின்
வெறுமை முழு கன பரிமாணத்துடன்
எழுந்து நின்றது.

பத்து நாட்களாகியும் அவள் வரவில்லை:
நான்கு வருஷங்களாகப் பழகியும் அவன்
வீட்டு முகவரியைத் தெரிந்து வைத்துக்
கொள்ளவில்லை அவன். எங்கேயாவது ஆபீஸ்
ரிக்கார்டுகளில் கிடைக்குமா?

''நளினி அம்மாவுக்குக் கல்யாணமாம்
ஸார். அதனாலேதான் வேலையை ராஜினாமா
பண்ணிட்டாங்க போலிருக்குது.''

பியூன் டேனியல் யாரிடமோ சொல்லிக்
கொண்டிருந்தான். விதி அவனைப் பார்த்து
எள்ளி நகையாடியது.

வியாபாரச் சதுரர்கள்

'' மேரு ''

"[illegible]க்கு முறுக்கா? வியாபாரிக்கு முறுக்கா?'' என்று தெலுங்கு நாட்டு ஒரு சொற்றொடர் நம்மிடையே வழங்குவது பலருக்குத் தெரியும். சிலருக்கு அதன் பொருள் தெரியாது. வியாபாரத்தில், சரக்கின் தரம் எப்படியிருந்தாலும், விற்பவருக்கு மனத்தத்துவத் திறனும் சாமர்த்தியமும் இருந்தால் தரமில்லாத சரக்கைக் கூடத் தரமுள்ளதாகக் காண்பித்து விடுவார். தரமுள்ள சரக்கை அதிகமாகத் தள்ளியும் விடுவார் வாங்குபவர்களிடம்!

நியூயார்க் நகரத் தெரு ஒன்றில் பக்கத்தில் பக்கத்தில் இரண்டு பெப்பர் 'மிண்ட்' கடைகளில் இரண்டு கடைகளிலும் ஒரே ரகத் தயாரிப்புகள்தான் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இரு கடைகளிலும் சுறுசுறுப்பான இரு பெண்மணிகள்தான் விற்பனையாளர்களாகப் பணியாற்றினார்கள். ஆனாலும் ஒரு கடையில்தான் வியாபாரம் அமர்க்களமாக நடந்தது. மற்றக் கடையில் மந்த வியாபாரம்தான். அந்த இரண்டு கடைகளுக்கும் உரிமையாளர்கள் வெவ்வேறு நபர்கள். இந்த வியாபார வித்தியாசத்தைப் பற்றித் தம் நண்பரிடம் ரகசியமாக விளக்கம் கொடுத்தார் வெற்றிகரமாக வியாபாரம் நடக்கும் கடையின் சொந்தக்காரர்.

''அந்தக் கடையில் விற்பனையாளராகப் பணி செய்யும் பெண்மணியைச் சற்றுக் கவனியுங்கள். தராசுத் தட்டில் பெப்பர்மிண்டுகளை அள்ளிப் போடும் போது அலட்சியமாக நிறைய அள்ளிப் போடுகிறாள். பிறகு அதிலிருந்து அதிகமாக இருப்பதை எடுத்து நிறுவையைச் சரிகட்டுகிறாள். என் கடை விற்பனையாளரைக் கவனியுங்கள். இந்தப் பெண் முதலில் கவனமாக, கொஞ்சம் குறைவாகவே பெப்பர்மிண்டுகளைத் தராசுத் தட்டில் போடுவாள். நிறைய ஈடுகட்ட அவள் மீண்டும் கொஞ்சம் எடுத்துத் தட்டில் போட வேண்டியிருக்கும். மனத்தத்துவ ரீதியில் வாங்குபவர்கள் உள்ளங்களில் தங்களுக்கு அதிகமாகவே சரக்குக் கிடைப்பதாக ஓர் எண்ணத்தை இந்த முறை உண்டாக்கி விடுகிறது. ஆனால் இந்த மாதிரியான முறையில் அந்தக் கடையில் தங்களுக்குக் கிடைக்க வேண்டியதைவிட அளவு குறைந்து வருகிறது என்ற எண்ணமும் தோன்றுகிறது. இரண்டு கடைகளிலும் அளவு கொடுக்கும் தராசுகள் நியாயமானவை. அவற்றில்தான் பெப்பர்மிண்டுகள் நிறை இல்லை என்றாலும் என் கடையில் அவை எடுத்துப் போடும் முறை அவர்களை வசீகரிக்கின்றது'' என்றார் வெற்றியடைந்த வியாபாரி!


* * *

பெண்களுக்கான ஆடை ஆபரணங்களை விற்பனை செய்யும் ஒரு வியாபார ஸ்தாபனத்தின் நிர்வாகி, வேலை கேட்டு வந்த இளைஞனின் திறமையைப் பரிசோதிக்க ஆரம்பித்தார்.

''நீ ஒரு ஓவியன். கடை அலங்காரக் கலையில் கைதேர்ந்தவன் என்கிறாய். இங்கோ மாதர்களுக்குத் தேவையான பொருள்களை விற்பனை செய்கிறோம். இந்தக் கடை முகப்பில் விளம்பர பீரோவில் நீ எந்த மாதிரி விளம்பரம் செய்வாய்?'' என்றார் நிர்வாகி.

''ஓவியமா?... அதற்கு அவசியமே இல்லை! ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியை அந்தப் பீரோவுக்குள் நிறுத்தி, பக்கத்தில் வியாபாரப் பொருள்களை வைக்கலாம்....''

''நிறுத்து! நிறுத்து!'' என்று குறுக்கிட்ட நிர்வாகி, ''உன்னை வேலையில் நியமித்து ஒரு நிமிடமாகி விட்டது'' என்று முடித்தார்.




* * *

''என்னய்யா இது? விளம்பரப் பலகையில் எவன் இப்படித் தப்பிதமாக 'புது ரக மிட்டாய்கள் கிடைக்கும்' என்று எழுதிக் கொடுத்தான்? அதைத் திருத்தக்கூடாதா?'' என்று கேட்டுக் கடைக்குள் வந்தார் ஒருவர்.

''அப்படியா? இருந்துவிட்டுப் போகட்டும். அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்ட உள்ளே வருபவர்களில் அநேகர் அந்தப் புது ரக மிட்டாயிலும் கொஞ்சம் வாங்கிக் கொண்டுதானே போகிறார்கள்?'' என்றார் கடைக்காரர்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

நாளொரு மேனியாக...

எழிலோங்கச் செய்வது

ரெக்ஸோனா



கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்கும் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனா.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனாவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.

கேடில் அடங்கிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு உகந்தது.

RX. 24-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு